Volume - 8
Issue -11


# வைகறை வெளிச்சம்


ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது

நவம்பர் 2015 - முஹர்ரம் 1437

விலை ரூ. 20




## மும்பை தொடர் குண்டு வெடிப்புகள்
## பழி சுமக்கும் பலிகடாக்கள்

விரிவான ஆய்வு

- இந்திய முஜாஹிதீன் என்ற பெயரில் ஈமெயில் அனுப்பிய கென் ஹேவுட்
- கொலை செய்யப்பட்ட ஷஹீத் ஆஸ்மி
- வினோத் பாட் விநோத மரணம்
- உண்மை அறியும் சோதனை ஒரு தகிடுதத்தம்!
- கொடூரம் நிறைந்த என்னுடைய 75 நாட்கள்
- சிறையில் தளராத போர்!

# வைகறை வெளிச்சம்

நவம்பர் 2015 – முஹர்ரம்– 1437



ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது

துணை ஆசிரியர்

கே.எம். இல்யாஸ் ரியாஜி



**தனி இதழ் : ரூ. 20/-**

**ஆண்டுச் சந்தா:**

**உள்நாடு : ரூ. 240/-**

**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு

**VAIGARAI VELICHAM**

52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Cell.: 8148129887

E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in



**All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts.**


بسم الله الرحمن الرحيم


மும்பை குண்டு வெடிப்புகள் –

## பழி சுமக்கும் பலிகடாக்கள் 6

**விரிவான ஆய்வு**

குண்டு வெடிப்புகளின் விசாரணைகள் உளவுத்துறையின் பேயாட்டங்கள்! 10

உண்மை தீவிரவாதிகளை தப்ப விட விட்டு ஒரு வழக்கு! இரண்டு புலன் விசாரணைகள்! இரு வேறுமுடிவுகள்! – விசித்திர கதை! 15

இந்திய முஜாஹிதீன் என்ற பெயரில் ஈமெயில் அனுப்பிய கென் ஹேவுட் 31

மும்மை இரயில் குண்டுவெடிப்பு கொலை செய்யப்பட்ட வழக்கறிஞர்! 38

கொலை செய்யப்பட்ட காவல்துறை உதவி ஆணையர் 41

உண்மை அறியும் சோதனை ஒரு தகிடுதத்தம்! 42

கொடூரம் நிறைந்த என்னுடைய 75 நாட்கள் – இஹ்திஷாம் குதூப் 47

சிறையிலும் தளராத போர்! 57

**எது முதலில்? ............................................ 61**

**முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? .... 64**


“இறை நம்பிக்கையாளர்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களை தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இது இறை அச்சத்திற்கு மிக நெருக்கமானதாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை (யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.”

**(அல்குர்ஆன் அத்தியாயம் அல்மாயிதா - வசனம் - 8)**

**http:/www.facebook.com / vaigaraivelicham**

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# பின்னர் ஏன் பிரதமர் பதவி?

உத்திரபிரதேசம் தாத்ரியில் ஒரு சம்பவம். அக்லாக் என்ற முஸ்லிம் முதியவரும் அவருடைய மகனும் மாட்டிறைச்சி வீட்டில் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் கல்லால் அடித்து தாக்கப்பட்டார்கள். அதில் முகம்மது அக்லாக் சம்பவ இடத்திலேயே கொலை செய்யப்பட்டார்.

பின்னர் அவர் வைத்திருந்த இறைச்சியை ஆராய்ச்சி செய்த காவல்துறையினர் அது மாட்டிறைச்சி அல்ல, ஆட்டிறைச்சி தான் என உறுதி செய்தனர்.

கொலை செய்தவர்களை கைது செய்ய வேண்டும், தண்டிக்க வேண்டும் என்ற அரசின் தார்மீக கடமைகளை கிடப்பில் போட்டு விட்டு அக்லாக் வைத்திருந்தது ஆட்டிறைச்சியா, மாட்டிறைச்சியா என்று ஆய்வு செய்த மாநில அரசின் கடமை உணர்ச்சி கொலை செய்தவர்களை விட கொடுமதியாளர்கள் ஆட்சியாளர்கள் என்ற சிந்தனையை ஏற்படுத்தியது.

இந்த ஆய்வின் முடிவில் ஒரு வேளை அக்லாக் முஹம்மது வைத்திருந்தது மாட்டிறைச்சி என்றால் அது அவரது கொலையை நியாயப்படுத்தி இருக்குமோ?

இதற்கிடையே மற்றொரு தகவல் அக்லாக் அவர்களின் மற்றொரு மகன் விமானப்படையில் பணிபுரிபவராம். தேசத்தின் பாதுகாப்பிற்கு பணியாற்றும் ஒருவரின் தந்தையையே அடித்து கொன்றார்கள் பசுமாட்டு பாதுகாவலர்கள்.

ஆனால் அடிப்படையில் நீங்கள் மாட்டிறைச்சி குறிப்பாக பசுமாட்டிறைச்சி உண்பவர்களாகத் தானே இருந்தீர்கள். உங்கள் வேதங்களும் அதை வலியுறுத்துகின்றனவே. பின்னர் பௌத்த மதத்தின் எதிர்ப்பை சமாளிக்க வழியில்லாமல் தானே அஹிம்சையையும் உள்வாங்கிக் கொண்டீர்கள். ஆனால் இன்றும் உங்கள் மத சம்பிரதாயங்களில் பசுமாடுகள் பலி கொடுக்கப்படுகின்றனவே. இன்றும் இந்தியாவின் பெரும்பான்மையானவர்களின் உணவு மாட்டிறைச்சி தானே என்ற வாதங்கள் எல்லாம் தத்துவ கானங்களாகி போயின.

இன்னொரு புறம் கல்புர்கி என்ற முற்போக்கு சிந்தனையாளர் முற்போக்கு சிந்தனைகளை விதைத்ததனால் கொலை செய்யப்படுகிறார். சாகித்ய அகாடமி விருது பெற்ற அவரது கொலையை கண்டிக்க முன்வராததாலும் மாட்டிறைச்சி விஷயத்தில் மத்திய அரசு மௌனம் சாதித்தாலும் சாகித்ய அகாடமி விருது பெற்றவர்கள் குறையாமல் 60 பேர் இந்த விருதை திரும்பியளித்தனர்.

இவ்வளவுக்கு பிறகும் தன் மௌனத்தை கலைக்காத 10 இலட்ச ரூபாய் கோட்டுக்கு சொந்தக்காரரான நம் பாரத பிரதமர் வேறு வழியின்றி கடைசியாக தன் மௌனத்தை கலைத்தார். இதில் மத்திய அரசு என்ன செய்ய இயலும்? என திருவாய் மலர்ந்தார்.

இவ்வளவு விஷயங்கள் நடந்து நாடே களேபரமாகி எழுத்தாளர்கள் எல்லாம் கொதித்தெழுந்து தாம் பெற்ற விருதுகளை திரும்ப வழங்கிய பின் அப்போதுதான் தனக்கு இந்த செய்தி தெரியும் என்பது போல் மோடி கேட்கும் கேள்வி நான் இதில் என்ன செய்ய முடியும்? மத்திய அரசு இதில் என்ன செய்ய முடியும்?

தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை கொளுத்திடுவோம் என்று ஏட்டில் எழுதி வைத்துக் கொண்டால் போதாது. தனியொரு மனிதனுக்கு வாழ வழியில்லையெனில் இந்த ஜகத்தினை என்ன செய்யலாம் என்று கேட்கிறார்கள் நடுநிலை சிந்தனையாளர்கள்.

இப்பொழுது இஸ்லாமிய வரலாற்றில் ஒரு காட்சி. உமர் (ரலி) அவர்கள் நாட்டின் நிலை அறிய நகர்வலம் வருகிறார்.

இரவு நேரம். ஒரு பெண் பசியால் வாடும் தன் குழந்தைகளை எரிகின்ற அடுப்பை காட்டி ஏமாற்றி தூங்க போடுகின்றார்.

உமர் (ரலி) அவர் கேட்கின்றார்கள். ஏனம்மா இப்படி செய்கிறீர்கள்? அந்தப் பெண் கோபத்துடன் எனக்கும் உமருக்கும் இடையில் அல்லாஹ் தான் தீர்ப்பளிக்க வேண்டும் என்று சொல்கிறார்.

உமர் (ரலி) அஞ்சி நடுங்கியவராக உம்முடைய நிலைமை உமருக்கு எப்படி தெரியும்? என்று கேட்கிறார்.

என்னுடைய நிலையை அறிந்து கொள்ள முடியாதவர் ஏன் கலீஃபாவாக இருக்க வேண்டும்? என திருப்பி கேட்கிறாள் அந்த பெண்மணி.

தளர்ந்து போனவராய் கருவூலத்திற்கு சென்ற உமர் (ரலி) அங்கிருந்த உணவு மூட்டையை தன் முதுகில் ஏற்றிவிடும்படி கூறுகிறார். கருவூல காப்பாளியோ உமர் அவர்களே நான் சுமந்து வருகிறேனே என்று கூற மறுமையிலும் எனக்கு பதிலாக நீ சுமப்பாயோ? என்று கூறி மறுத்து தானே அந்த சுமையை

சுமந்து செல்கிறார்.

அந்த பெண்மணியையும் அவர் குழந்தைகளும் வயிரார உண்பதைக் கண்டு மகிழ்ந்த உமர் (ரலி) அவர்களிடம் அந்த பெண் இப்போது கூறினார் கலீஃபா வேண்டிய இடத்தில் நீரே இருக்க தகுதியானவர் என்று.

உமர் (ரலி) அமைதியாக திரும்ப கூறினார். நாளை அவைக்கு வந்தால் இன்ஷா அல்லாஹ் உமருடைய இடத்தில் என்னை காண்பீர்கள். அப்போது தான் அந்த அம்மையாருக்கு புரிந்தது வந்துள்ளது கலீஃபா உமர் என்று. தனக்கு தெரியவே வாய்ப்பில்லாத ஒரு விஷயத்தில் குற்றம் சாட்டப்பட்ட போது துடித்தெழுந்து அதனை சரி செய்த இஸ்லாமிய ஆட்சி எங்கே?

இவர்களாலேயே தொடர்ந்து விஷமப் பிரச்சாரம் செய்யப்பட்டு அதன் காரணமாக உயிர்கள் பறிக்கப்பட்ட பின்னரும் நான் அதில் என்ன செய்ய முடியும் என்று கேட்கும் நம் மோடி எங்கே? இஸ்லாமிய அரசியலமைப்பில் இத்தகைய ஆட்சியாளர்கள் ஆட்சி செய்து விட முடியுமா?

மற்றொரு சம்பவம் இஸ்லாமிய வரலாற்றில்,

ஒரு முறை சந்தையில் உமர் (ரலி) அவர்கள் ஆய்வு செய்து கொண்டிருந்த போது எங்கிருந்தோ ஒரு குரல் கேட்டது.

“உமரே! அதிகாரிகளுக்கென சட்ட திட்டங்களை வகுத்து எழுதிவிட்டால் போதுமா? அல்லாஹ்வின் வேதனையில் இருந்து தப்பித்து கொள்ள முடியுமா? எகிப்தின் ஆளுனராக நீங்கள் அமர்த்திய இயாழ் இப்னு கனம் மெல்லிய ஆடைகளை உடுத்துகிறார். அவருடைய வாசலில் காவலாளி நிற்கிறான்.

உமர் (ரலி) அவர்கள் உடனடியாக முஹம்மது இப்னு மஸ்லமா (ரலி) அவர்களை அழைத்து உடனே எகிப்துக்கு சென்ற இயாழ் எந்நிலையில் இருக்கிறாரோ அதே நிலையில் அவரை அழைத்து வாருங்கள் என உத்தரவிட்டார்.

முஹம்மது இப்னு மஸ்லமா (ரலி) போன போது உண்மையிலேயே இயாழ் (ரலி) அவர்களுடைய வாசற்படியில் காவலாளி நின்று கொண்டிருந்தான். இயாழ் மெல்லிய ஆடை ஒன்றை உடுத்தியிருந்தார்.

அதே ஆடையோடு அவரை மதீனாவிற்கு அழைத்து வந்தார்கள் மஸ்லமா (ரலி) அவர்கள்.

உமர் (ரலி) அவர்கள் அந்த ஆடையைக் கழற்றி வைத்து கம்பளியால் ஆன ஆடையை உடுத்துமாறு பணித்தார்கள். பின்னர் ஆடுகளின் மந்தை ஒற்றை தருவித்து மலைப்பள்ளத்தாக்கிற்கு சென்று அந்த ஆடுகளை மேய்க்குமாறு கட்டளையிட்டார்கள்.

“இதற்கு நான் செத்திருக்கலாம்” என்று இயாழ் சொன்ன போது “இயாழே இதை செய்ய உனக்கு என்ன வெட்கம்? உன்னுடைய அப்பாவின் பெயர் ‘கனம்’ என்பதன் அர்த்தம் என்ன வென்று தெரியுமா உமக்கு? ஆடுகளை மேய்ப்பது தான் அவருடைய தொழில். அதனால் தான் அவருக்கு இந்த பெயர் வந்தது” என்றார்கள் உமர் (ரலி) அவர்கள்.

இதன் பின்னர் இயாழ் (ரலி) திருந்தினார்கள். தவ்பா செய்தார்கள். தன் பொறுப்புகளை அதன் பின்னர் செவ்வனே நிறைவேற்றினார்கள்.

பத்து லட்ச ரூபாய் ஆடை அணியும் மோடிக்கு இதில் பாடம் இருக்கிறது.

இஸ்லாமிய ஆட்சியாளர்கள் அநீதம் இழைப்பதில்லை. தனக்கு கீழ் உள்ள அதிகாரிகளையும் அநீதம் இழைக்க அனுமதிப்பதில்லை. அவ்வளவு ஏன். அநீதம் இழைக்கபடாமலேயே ஒருவர் தன் மீது அநீதம் இழைக்கப்பட்டது என்று கருவாரானால் அதை துடைக்கும் தார்மீக பொறுப்பு தங்களுக்கு இருப்பதாகவே இஸ்லாமிய ஆட்சியாளர்கள் கருதினர். இவற்றிற்கெல்லாம் நாம் மேலே சொன்ன இரண்டு சம்பவங்கள் உதாரணங்கள்.

அதிக விருதுகளை பெற்ற (திரும்பி அளிக்கப்பட்டதன் மூலம்) மோடி இதிலெல்லாம் பாடம் பெறுகிறவராக இல்லை.

ஆனால், இந்துத்துவாதிகளை தவிர்த்த மற்ற அனைவரும் இப்போது இஸ்லாமிய மக்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய அவசர அவசியத்தை உணர்ந்து விட்டார்கள். இஸ்லாமிய ஆட்சியின் விழுமியங்களை எடுத்து பேச ஆரம்பித்து விட்டனர். இந்த அநீதிகளுக்கெல்லாம் இஸ்லாம் ஒன்றே தீர்வென நினைத்து இஸ்லாத்தை நோக்கி புறப்பட ஆரம்பித்து விட்டனர்.

இறைவன் தன் திருமறையில் பின்வருமாறு கூறுகின்றான் :

“இறை நம்பிக்கையாளர்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களை தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இது இறை அச்சத்திற்கு மிக நெருக்கமானதாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை (யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.” (அல்குர்ஆன் 5:8)

.இத்தகைய உமர் (ரலி) போன்றோரின் ஆட்சிதான் இன்றைய இந்தியாவிற்கு தேவை.

# மும்பை குண்டு வெடிப்புகள்

# பழி சுமக்கும் பலிகடாக்கள்

## – விரிவான ஆய்வு –

அவர்களை தூக்கிலிட்டால் தான் மராட்டிய காவல்துறையும், உளவுத்துறையும் வாழ முடியும் என்றால் அவர்களைத் தூக்கிலிடுங்கள். இது தீர்ப்பல்ல. அரசியல் முடிவு. இது அநீதி. வழக்கை ஜோடித்தது மராட்டிய மாநில Government Terrorist Squad. அது தீவிரவாத தடுப்புப் படை அல்ல. தீவிரவாதத்தைச் செய்யும் அரசு படை. இப்படி ஏகோபித்த குரலில் ஒலித்தார்கள். இந்த வழக்கில் அநியாயமாகத் தூக்குத் தண்டனை வழங்கப்பெற்ற 1. கமால் அன்சாரி, வயது 41. இவர் பீகார் மாநிலத்தின் மதுபானி என்ற இடத்தைச் சார்ந்தவர். 2. முஹம்மத் பைசல் அத்தாவுற் ரஹ்மான் ஷேஹ், வயது 41. இவர் மும்பையைச் சார்ந்தவர். 3. இஹ்திஷாம் குத்துப்புத்தீன் சித்திக்கி வயது 34. இவர் தானே மராட்டிய மாநிலம் சேர்ந்தவர். 4. நவீன் ஹுஸைன் கான், வயது 35. இவர் செகந்தராபாத். 5. ஆசிப்கான், வயது 44. ஜால்கோன், மராட்டிய மாநிலம்.

இவர்கள் தங்கள் உயிரைத் தருவதோடு 71.45 லட்சம் ரூபாயையும் கட்டிட வேண்டும்.

அந்த ஏழைப்பாளைகள், அப்பாவிகள் இந்த 71.45 லட்சம் ரூபாயை செலுத்தினால்தான் மேல் முறையீட்டுக்குச் செல்ல முடியும்.

ஆகவே, மேல் முறையீட்டுக்குச் செல்லவிடாமல் தடுக்கவே இந்தத் தொகை!

ஆயுள்தண்டனை வழங்கப்பட்டவர்கள்.

1. தன்வீன் அஹ்மத் முஹம்மத் இபுறாஹீம் அன்சாரி, வயது - 41.
2. முஹம்மத் மஜீத் முஹம்மத் ஷாஃபி, வயது - 37.
3. ஷேஹ் முஹம்மத் அலி ஆலம் ஷேஹ், வயது - 46.
4. முஹம்மத் சாஜித் மர்கஃப் அன்சாரி, வயது - 38.
5. முஜம்மில் அத்தாவுற் ரஹ்மான் ஷேஹ், வயது - 31.
6. சுஹைல் மஹ்மூத் ஷேஹ், வயது - 31.
7. ஷமீர் அஹ்மத் லத்தியுற் ரஹ்மான் ஷேஹ், வயது - 41.

2006 ஜூலை 11 ஆம் நாள் நடந்த மும்பை இரயில் குண்டு வெடிப்பில் 9 ஆண்டுகளுக்கு பின் தீர்ப்பு மும்பை சிறப்பு நீதிமன்றத்தால் 2015 செப்டம்பர் 29 ஆம் நாள் வழங்கப்பட்டுள்ளது. 188 உயிர்களை பலி வாங்கிய அச்சம்பவத்தில் 824 பேர் காயம் பட்டனர்.

குண்டுகள் வெடித்தவுடன் முதலில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் ஃபைசல் ஷேக் என்பவர் தன்னுடைய சகோதரர் முஸம்மில், டாக்டர். தன்வீர் அன்சாரி, ஸமீர் ஷேக் மற்றும் சுகைல் ஷேக் ஆகிய நால்வரை பாகிஸ்தானுக்கு அனுப்பி பயிற்சியளித்து இந்த குண்டுவெடிப்புகளை நிகழ்த்தியதாக குற்றம் சாட்டப்பட்டார்.

### பிரஷர் குக்கர் குண்டு

குண்டு வெடிப்பு நடந்து 79 நாட்கள் 29 செப்டம்பர் 2006 அன்று மும்பையின் காவல் ஆணையாளர் ஏ.என். ராய் அவர்கள் பத்திரிகையாளர் சந்திப்பில் இந்த வழக்கு குறித்து

சில தகவல்களைத் தந்தார். அதில் வெடிகுண்டுகள் சமையலுக்கு உதவும் பிரஷர் குக்கரில் உருவாக்கப்பட்டு மும்பை உள்ளூர் இரயில்களின் முதல் வகுப்புகளில் லஷ்கரே தய்பாவை சேர்ந்தவர்களால் வைக்கப்பட்டன என்று கூறினார். இதில் பாகிஸ்தான் உளவுத் துறைக்கும் பங்குண்டு என்றார். இந்த பிரஷர் குக்கர்களை விற்பனை செய்த இரண்டு கடைகளை கண்டுபிடித்து விட்டதாகவும் அவர் கூறினார்.

“மிக அழகிய முறையில் நடத்தப்பட்ட மிக சிறந்த தொழில் நிபுணத்துவம் வாய்ந்ததொரு விசாரணை” என இவ்வழக்கின் விசாரணைனை அவர் வர்ணித்தார். ஆனால் அங்கே கூடி இருந்த பத்திகையாளர்கள் உள்ளூரில் வாங்கிய பொருட்களை வைத்து எப்படி பாகிஸ்தான் உளவுத்துறையை இவ்வழக்கில் சம்பந்தப்படுத்த முடியும் என தங்களுக்குள் பேசி சிரித்துக் கொண்டனர். அப்போதே காவல் துறையினர் புருடா விடத் தொடங்கிவிட்டனர் என்பதை எல்லா பத்திரிகையாளர்களும் புரிந்து கொண்டனர்,

இவ்வாறு பிரஷர் குக்கர் குறித்து காவல்துறை ஆணையாளர் அடித்துக்கொண்ட பெருமை நீண்ட நாள் நீடிக்கவில்லை. நவம்பர் 2006இல் மும்பை தீவிரவாத தடுப்பு படையால் (ஏ.டி.எஸ்) அளிக்கப்பட்ட குற்றப் பத்திரிக்கையில் பிரஷர் குக்கர் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் தீவிரவாத தடுப்புப்படையின் தலைவர் ஏ.பி.ரகுவான்ஷி அவர்கள் “எதுவும் விடுபடவில்லை. சில வீட்டு உபயோகப்பொருட்கள் குண்டை உருவாக்க பயன்படுத்தப்பட்டது என நாங்கள் கூறி யுள்ளோம்”, என்று கூறி சமாளித்தார்.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலம் ஒன்றே அவர்களைத் ஹதக்கிலே போட முக்கிய ஆதாரம் என கருதப்பட்ட சூழ்நிலையில் குற்றம் சாட்டப்பட்ட 13 பேரும் தாங்கள் சித்ரவதை செய்யப்பட்டு வாக்கு மூலங்கள் தர பலவந்தப்படுத்தப்பட்டோம் என்று கூறினர். இதனை மறுத்த காவல்துறை இவர்கள் அல்கொய்தாவின் வழிமுறையை பின்பற்று கின்றனர். இவ்வாறு கூறுவதன் மூலம் ஒழுங்கான விசாரணையை இவர்கள் தடம்பிறழ செய்கின்றனர் என்று விதண்டாவாதம் செய்தார்.

அதே சமயம் இவ்வழக்கில் ஆஜரான அரசுதரப்பு வழக்கறிஞருக்கு குண்டுகள் செய்ய



பிரஷர் குக்கர் பயன்படுத்தப்பட்டதா இல்லையா என தெரியவில்லை. இவ்வழக்கின் குற்றவாளி களுக்காக வாதாடிய, ஷாஹித் ஆஸ்மி என்ற இளம் வழக்கறிஞர் பெப்ரவரி 2010ல் மும்பை குர்லா என்னும் இடத்தில் அவரது அலுவலகத் தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். குற்றவாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை, இது இப்போது கொலை செய்யப்பட்ட கோவிந்த் பன்சாரி போன்ற கொலை, அதாவது இந்துத்துவவாதிகளும், காவல் துறையும் இணைந்து செய்தவை.

பெப்ரவரி 2012ல் சாட்சி எண் 185 மும்பையின் ஆணையாளர் ஏ.என். ராய் குறுக்கு விசாரணையில் பிரஷர் குக்கர் உபயோகப் படுத்தப்பட்டது பற்றி பத்திரிகையாளர் சந்திப்பில் தான் கூறியது குற்றவாளிகளை விசாரிக்கும் போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தான் எனக்கூறி பல்டி அடித்தார். குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிக்கும் போது அவர்கள் வீட்டு உபயோகப்பொருட்கள் எனக்கூறினர் அதில் குக்கரும் அடக்கம் என்று கூறினார். பத்திரிகையாளர் சந்திப்பில் குவார்ட்ஸ் டைமர் கடிகாரங்களை பயன்படுத்தியது பற்றியும் ராய் கூறி இருந்தார். ஆனால் இதனை குறுக்கு விசாரணையின் போது அவர் மறுத்தார். குழப்பத்திலேயே இருந்தார்.

பிரஷர் குக்கர்களை விற்பனை செய்ததாக கூறப்படும் வியாபாரிகள் விசாரிக்கப்படவே இல்லை. 2011 அக்டோர் 14இல் சந்தேஷ் ரெவ்லே என்ற வெடிகுண்டு நிபுணர் குக்கர் எப்படி வெடிகுண்டாக பயன்படுத்தப்பட்டது என்று படம் வரைந்து காட்டினார்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் பாகிஸ்தானுக்கு சென்றனர் என்பதை காட்டுவதற்காக சில டிராவல் ஏஜெண்டுகளிடம்

சாட்சியங்கள் பெறப்பட்டன. இவை அனைத்தும் புனையப்பட்டவை என்கிறார் குற்றம்சாட்டப்பட்டவர்களின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் பிரகாஷ் ஷேத்தி என்பவர். அப்படியே ஒருவேளை அவர்கள் பாகிஸ்தானுக்கு சென்றார்கள் என்பதை வாதத்திற்காக ஏற்றுக்கொண்டாலும் பாகிஸ் தானுக்கு செல்வதே குற்றமா என்றும் கேட்கிறார். அப்படியானால் பாகிஸ்தான் செல்ல எதற்காக விசா வழங்கப்படுகிறது என்ற கேள்வியையும் அவர் எழுப்புகிறார்.

இதில் கண்ணால் கண்ட சாட்சியங்களும் புனையப்பட்டவையே என்கிறார் குற்றம் சாட்டப்பட்டவர்களின் தரப்பு வழக்கறிஞர். மும்பை இரயில் நிலையம் போன்றதொரு கூட்டநெரிசல் மிக்க இடத்தில் ஒருவரை ஞாபகம் வைத்துக்கொள்வது மிகக்கடினம். இவர்களை அடையாளம் காட்டிய கார் டிரைவர்களும் இவர்களை வழமையற்ற ஒரு நிகழ்வு நடந்தால் தவிர அவர்களை ஞாபகம் வைத்துக்கொள்வது கடினமே. இத்தகைய சூழ்நிலையில் கண்ணால் கண்டதாக கூறிய சாட்சியின் நம்பகத்தன்மை குறித்து பல கேள்விகள் எழுகின்றன.

பாகிஸ்தானிலிருந்து வந்த தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் அளித்ததாகக் கூறப்பட்ட மூவர் இஹ்திஷாம் சித்திகீ, பைசல் ஷேக், ஆசிப்கான் பஷீர்கான் ஆகியோரின் கைபேசி அழைப்பு பதிவுகளை ஆராய்ந்தபோது அது அவர்கள் குண்டுவெடித்த நேரத்தில் குண்டுவெடித்த இடத்திற்கு அருகில் இல்லை என்பதை காட்டியது.

ஆனால் இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை, குண்டு வெடித்த நேரத்தில் இவர்கள் யாரிடமாவது அதனை கொடுத்துவிட்டு சென்றிருக்கலாம் என அரசு தரப்பு வழக்கறிஞர் வாதாடினார். அல் காயிதாவா? இந்திய முஜாஹித்தா?

பின் வந்த நாட்களில் சாதிக் ஷேக் என்பவரை மும்பை குற்றப்பிரிவு காவலர்கள் கைது செய்தனர். அவர் இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பை சேர்ந்தவர் என காவல்துறை கூறியது. இந்தியன் முஜாஹிதீன் அமைப்பு தான் 2005 முதல் இந்தியாவில் நடந்து வரும் அனைத்து குண்டுவெடிப்பிற்கும் காரணம். அந்த அமைப்பே 2006 மும்பை ரயில் குண்டு வெடிப்புகளுக்கும் காரணம் என சாதிக் ஷேக் ஒப்புதல் வாக்குமூலமளித்ததாக மும்பை குற்றப்பிரிவு காவல்துறை கூறியது. அவரும் இன்னும் நான்கு பேரும் சேர்ந்து பிரஷர் குக்கரில் குண்டு வைத்ததாகவும் அறிக்கை வெளி யிடப்பட்டது. இது மும்பை தீவிரவாத தடுப்புப்படையான (ஏ.டி.எஸ்) கண்டு பிடித்ததாக கூறிய தகவல்களுக்கு மாற்றமானது. இதனால் மும்பை தீவிரவாத தடுப்புப்படையின் குற்றப்பத்திரிகை ஆட்டம் கண்டது.

இந்த கைதை தொடர்ந்து செப்டம்பர் 2008ல் மும்பை குற்றப்பிரிவு காவல்துறையின் தலைவர் ராகேஷ் மரியா பாகிஸ்தானை சேர்ந்த(வர்களை போல காட்டிக்கொண்ட) 5 பேரும் மும்பை இரயில் குண்டு வெடிப்புகளை நிகழ்த்திய 13 பேருடன் சேர்ந்து இந்த குண்டு வெடிப்பை நிகழ்தியதாக கூறினார். இது மும்பை தீவிரவாத தடுப்புப்படையின் அறிக்கைக்கு முற்றிலும் மாற்றமானது. ஏனெனில் மும்பை தீவிரவாத தடுப்புப்படையின் கூற்றின்படி இந்த தாக்குதலில் ஈடுபட்ட இரண்டு பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் இறந்துவிட்டனர். இந்தியன் முஜாஹிதீன் அமைப்பு தான் தாக்குதலுக்கு காரணம் என மும்பை குற்றப்பிரிவு காவல்துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கையிலும் கூறப்பட்டிருந்தது.

இறுதியாக மார்ச் 2009இல் சாதிக் ஷேக்கை ஏ.டி.எஸ் (மும்பை தீவிரவாத தடுப்புப்படை) கைது செய்தது. பின்னர் மும்பை குற்றப்பிரிவு காவல்துறையின் அறிக்கை தவறானது என முடிவு செய்தது. நீதிமன்றத்தில் எதிர்தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்ட ஷேக் பின்னர் பிறழ் சாட்சியானார். அவர் தான் அனைத்து குண்டுவெடிப்புகளையும் நிகழ்த்தியது என்ற கூற்றினை அவர் ஏற்க மறுத்தார்.

**புதிய கதாநாயகன் யாசீன் பட்கல்**

சில வருடங்களுக்கு பிறகு இதில் இன்னொரு மாற்றமாக யாசீன் பட்கல் என்பவர் நேபாள எல்லையில் வைத்து ஆகஸ்ட் 2013ல் கைது செய்யப்பட்டார். இவர் இந்த குண்டு வெடிப்புகளுக்கு இந்திய முஜாஹிதீன் அமைப்பு தான் காரணம் எனவும் 2002 குஜராத் கலவரத்திற்கு பழிவாங்க இதனை நிகழ்த்தி யதாகவும் கூறியதாக செய்திகள் வெளிவந்தன. இதனால் ஏ.டி.எஸ்.- என்ற தீவிரவாத தடுப்பு

படையால் கைது செய்யப்பட்ட 13 பேரும் என்ற உண்மை நிருபனமானது.

தாங்கள் கூறிவந்த கதைகளை உறுதிப்படுத்த மும்பை தீவிரவாத தடுப்புப் படை முகமது அலி, ஆசிப் கான் என்ற இருவரை கைது செய்தது. இவர்கள் மஹாராஷ்டிராவில் செப்டம்பர் 2006ல் நடந்த மாலேகான் குண்டுவெடிப்புகளிலும் சம்பந்தப்பட்டவர்கள் என மும்பை தீவிரவாதத் தடுப்புப் படை கூறியது. இவர்கள் தான் ஜூலையில் நடந்த குண்டுவெடிப்புகளில் வெடிபொருட்களை கையாண்டவர்கள் எனவும் தீவிரவாத தடுப்புப் படை கூறியது. மும்பை இரயில் குண்டு வெடிப்புகளில் பயன்படுத்தியது போக மீதம் இருந்த வெடிபொருட்கள் மாலேகான் குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்டது எனவும் மும்பை தீவிரவாதத் தடுப்புப் படைக் கூறியது.

ஆனால் தீவிரவாத வழக்குகளை விசாரிக்க மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட தேசிய புலனாய்வு நிறுவனம் (என்.ஐ.ஏ) இந்த மாலேகான் வழக்கை கையில் எடுத்துக்கொண்டு மும்பை தீவிரவாததடுப்புப் படையின் இந்த கதையை முற்றிலும் மறுத்தது. இதில் இந்துத்துவ தீவிரவாதிகளின் கைகள் இருப்பதை கண்டறிந்தது. அவர்களின் மீது குற்றம் சுமத்தியது. 2011ல் மாலேகான் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 9 முஸ்லிம்கள் பிணையில் செல்ல கோரிய போது என்.ஐ.ஏ.வின் வழக்கறிஞர் ரோஹினி சாலியன் இதனை எதிர்க்கவில்லை. ஏனெனில் அவர்கள் அனைவரும் நிரபராதிகள் என்பதை அறிவார்கள்

2013ல் புலனாய்வு பத்திரிகையாளரும் தற்போதைய ஆம் ஆத்மி கட்சியின் உறுப்பினருமான ஆஷிஷ் கேதான் அவர்கள் மும்பை நீதிமன்றத்தில் மும்பை இரயில் குண்டு வெடிப்புகள், மாலேகான் குண்டு வெடிப்பு , 2012ல் புனாவில் நடந்த ஜெர்மன் பேக்கரி குண்டு வெடிப்பு வழக்கு ஆகிய 3 நியாயமான வழக்குகளில் விசாரணையை கோரினார். மும்பை இரயில் குண்டு வெடிப்பை விசாரித்து வரும் நீதிமன்றத்தின் பார்வையில் மாலேகான் வழக்கில் முரண்பட்ட சாட்சியங்களை பற்றிய விவரங்கள் கொண்டுவரப்படவில்லை என ஆஷிஷ் கேதான் நம்பினார். மும்பை இரயில் குண்டு வெடிப்பு களில் பயன்படுத்தப்பட்ட வெடிபொருட்களும் மாலேகான் குண்டுவெடிப்பில் பயன்படுத்தப் பட்ட வெடிபொருட்களும் ஒன்றானவை என தீவிரவாதத் தடுப்புப் படை (ஏ.டி.எஸ்) அறிவித்திருந்தது. என்.ஐ.ஏ என்ற தேசிய புலனாய்வு நிறுவனத்தின் விசாரணை அறிக்கை உண்மையெனில் இது ஏ.டி.எஸ் மாலேகான் 2006 குண்டு வெடிப்பு குறித்து விசாரித்ததை மட்டும் பொய்யாக்கவில்லை மாறாக மும்பை இரயில் குண்டு வெடிப்பு வழக்குகளையும் பொய்யாக்குகிறது என கேதானின் மனு கூறியது. அந்த மனு மேலும் இவ்வாறு கேள்வி எழுப்பியது,"இப்போது கேட்கப்பட வேண்டிய கேள்வி என்னவெனில் ஓர் உண்மைக்கு இரண்டு வெவ்வேறு வடிவம் இரண்டு வெவ்வேறு நீதிமன்றங்களில் இருக்க முடியுமா?"

கேதான் ஜெர்மனி பேக்கரி வழக்கு குறித்தும் கூறியிருந்தார். விசாரணையின் போது பட்கல் இவ்வழக்கில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட மிர்சா ஹிமாயத் பேக் என்பவருக்கும் குண்டுவெடிப்புகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதை கூறியிருந்தார். ஆனால் நீதிமன்றம் இதை கண்டுகொள்ள வில்லை. 19 ஏப்ரல் 2013ல் புனேவில் உள்ள சிவாஜிநகர் செசன்ஸ் நீதிமன்றம் பேக் அவர்களுக்கு மரண தண்டனையை விதித்தது. அதனை கேட்ட மிர்சா பேக் உடைந்து போய் இவ்வாறு கூறினார், "இந்த குண்டுவெடிப்பில் ஏற்கனவே இறந்துவிட்ட 17 பேர் அல்லாமல் 18வது நபராக நானும் சாகப்போகிறேன்."

ஆக இந்த வழக்கில் உள்ள இத்தனை கேள்விகளுக்கு பதிலளிக்காமல் எழும் சந்தேகங்களை தீர்க்காமல் வழக்கப்படி நாட்டின் கூட்டு மனசாட்சிக்கு சில பலிகடாக்கள் பலியாக்கப் பட்டிருக்கின்றார். கூட்டு மனசாட்சிகளின் இந்த சேவை இனி தொடரத்தான் செய்யும். அதனை எதிர் கொள்ளும் மனோ தைரியத்தை எல்லாம் வல்ல இறைவன் முஸ்லிம்களுக்கு அளிக்கட்டும்.

Source : http://www.caravanmagazine.in/vantage/nine-years-after-local-train-blasts-mumbai-there-little-clarity-who-was-responsible-attack

# குண்டு வெடிப்புகளின் விசாரணைகள் உளவுத்துறையின் பேயாட்டங்கள்!

மும்பை ரயில் குண்டு வெடிப்பு வழக்கில் மும்பை சிறப்பு நீதிமன்றம் விசாரணையை முடித்து தற்போது தீர்ப்பினை வழங்கியுள்ளது. 5 பேருக்கு தூக்கு தண்டனையும் 7 பேருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கி சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் இந்த விசாரணை எந்த போக்கில் சென்றது, இதில் கைது செய்யப்பட்டவர்களுக்கும் இந்த குண்டு வெடிப்பிற்கும் சம்பந்தம் உண்டா என்பது குறித்தும் மும்பை ரயில் குண்டு வெடிப்பு வழக்கில் உண்மை குற்றவாளிகள் எப்படி தப்ப வைக்கப்பட்டனர், ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை எப்படி தலையை நுழைத்து இந்த வழக்கை திசை திருப்பியது? என்பது குறித்தும் கர்கரேயை கொலை செய்தது யார்? என்ற நூலில் தெளிவுபடுத்தியிருந்தார், அந்த நூல் இந்தத் தீர்ப்பிற்கு 8 ஆண்டுகளுக்கு முன் வந்தது. அதிலிருக்கும் சில பகுதிகள். இந்தப் பகுதிகள் நாட்டில் நடக்கும் அநீதிகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது.

இப்போது இந்த வழக்கில் அப்பாவி முஸ்லிம்கள் சிலர் நாட்டின் கூட்டு மனசாட்சிக்கு பலிகடாக்களாக்கப்பட்டிருக்கின்றனர். எனவே இந்த சூழ்நிலையில் இந்த தகவல்கள் முழுமையாக அனைவருக்கும் சென்றடைய வேண்டும். இந்த வழக்கில் முன்னாள் மஹாராஷ்டிர ஐ.ஜி முஷ்ரிஃப் அவர்கள் திரட்டியுள்ள தகவல்கள் அரிதானவை. அனைவரும் அறிய வேண்டியவை. அவர் முத்திரை தாள் மோசடி வழக்கில் விசாரணை நடத்தில் 30000 கோடி ரூபாய் ஊழலை கண்டுபிடித்தவர். மேலும் பல லட்சம் கோடி ரூபாய் இழப்புகள் ஏற்படாமல் தடுத்தவர். நேர்மையானவர். தவறிழைப்பவர் தன் இனத்தை சேர்ந்தவராயினும் அதனை தட்டிக்கேட்கும் திராணி படைத்தவர். இதோ அந்த தகவல்கள்......

**'IB' என்ற உளவுத்துறையின் குறுக்கீடுகள் இந்தக் குறுக்கீடுகள் வேண்டு மென்றே செய்யப்பட்டவை. அவை பிராமணர்களைக் காப்பாற்றிடவும் முஸ்லிம் களின் மேல் பழியைப் போட்டிடவும் திட்டமிட்டுச் செய்யப்பட்டவை.**

*கடந்த சில வருடங்களாக குறிப்பாக அடுக்கடுக்காய் குண்டுவெடிப்புகள் நடந்திடும்போது, 'IB' என்ற மத்திய உளவுத்துறை மிகக் குறைவாகவே தனது வேவுபார்த்திடும் வேலையைச் செய்திருக் கின்றது. எந்தக் குண்டுவெடிப்பும் நடப்பதற்குமுன் தடுப்பதே அதன் கடமை. ஆனால் அது அதைச் செய்யவே இல்லை. மாறாக, அது கீழே இறங்கி குண்டு வெடிப்புகள் பற்றிய புலனாய்வுகளையே நடத்திக் கொண்டிருந்தது. நிச்சயமாக இது அதன் பணி அல்ல.*

*அண்மையில் நாட்டில் நடந்த எந்தக் குண்டுவெடிப்புகளும் நடப்பதற்கு முன்னால், உளவுத்துறைத் தந்தத் தகவல் களால் தடுக்கப்படவில்லை.*

ஆனால் நடந்த அத்தனை குண்டு வெடிப்புகளிலும் 'IB' என்ற மத்திய உளவுத்துறையைச் சார்ந்த பிராமண அதிகாரிகள் கீழே இறங்கி மாநில காவல் துறையின் புலன் விசாரணையில் குறுக் கிட்டார்கள். அந்தப் புலன் விசாரணையின் போக்கை மாற்றினார்கள். தாங்கள் கட்டும் கதையை ஏற்றுக் கொள்ள செய்தார்கள். தாங்கள் தயாராக வைத்திருந்த சாட்சியங் களை பெற்றுக்கொள்ள செய்தார்கள். இவை அந்த குண்டு வெடிப்புகள் இவர்களின் திட்டம் என்பதை உறுதி செய்கின்றன.

குற்றவாளிகளைக் கண்டுபிடித்து விட்டதாகக் கூறிடும், குண்டு வெடிப்பு களில், 'IB'என்ற மத்திய உளவுத்துறை தன் கைவரிசையை நிச்சயமாகக் காட்டி இருக்கின்றது.

இந்தக் குண்டு வெடிப்புகள் பற்றி மீடியாக்களில் வரும் அறிக்கைகளை, செய்திகளை நாம் கவனமாக ஆய்வு செய்தால், 'IB'என்ற மத்திய உளவுத் துறையின் புலனாய்வு பற்றிய வேதனைமிகு பல தகவல்கள் தெரிய வரும். அவற்றை இப்படிப் பட்டியல் போடலாம்.

**1. முதல்நாள் முதற்கொண்டே முஸ்லிம்கள் மீதும் முஸ்லிம் அமைப்புகளின் மீதும் பழியைப் போடுவது**

கடந்த பல ஆண்டுகளில் நடந்த எல்லாக் குண்டு வெடிப்புகளிலும் இதுவே நடந்தது.

குண்டு வெடிப்புகளால் ஏற்பட்ட அதிர்வுகள் அடங்குமுன், அதில் பலி யானவர்களின் இரத்தம் உறையுமுன், உளவுத்துறைகளும், புலனாய்வுத்துறைகளும் முஸ்லிம்களின் பெயர்களையும் முஸ்லிம் அமைப்புகளின் பெயர்களையும் உச்சரிக்கத் தொடங்கிவிடும்.

பல நேரங்களில், உள்துறை அமைச்சர் யார் செய்தார்கள் என்பது இன்னும் தெளிவாகவில்லை எனச் சொல்லிக் கொண்டிருப்பார். ஆனால் நமது உளவுத்துறைகள் முஸ்லிம்களையும் / முஸ்லிம் அமைப்புக்களையும் குற்றஞ் சுமத்திக் கொண்டே இருக்கும்.

பரவலாகப் பழி சுமத்தப்படும் அமைப்புகள், லஷ்கரே தொய்பா, ஹுஜி, சிமி; அண்மை காலமாக இந்தியன் முஜாஹிதீன்.

இன்னும் பல நேரங்களில் நாம் இதுவரைக் கேள்விப்படாத அமைப்பு களின் பெயர்கள் புதுப்பிரவேசம் செய்யும்.

உளவுத்துறையினர் வாயசைப்பதற்குள் ஊடகங்கள் ஊரெல்லாம் விஷத்தைப் பரப்பும். ஊடகங்கள் பெரும்பாலும் பிராமணர்களின் கைகளில் இருப்பதால், அவை உளவுத்துறையின் செய்திகளுக்காக காத்துக் கிடக்கும், செய்தி கைவரப் பெற்றதும் காட்டுத் தீயைப் போல் பரப்பும்.

இவையெல்லாம் 'IB'என்ற மத்திய உளவுத்துறை, பிராமண சதிகாரர்கள், இவர்களின் முக்கிய இலட்சியத்தை நோக்கி நகர்த்தப்படும் காய்கள். இவர்களின் முக்கிய இலட்சியம் முஸ்லிம்களின் மேல் பாமர இந்துக்களின் வெறுப்பைப் பாய்ச்சுவது.

குண்டு வெடிப்புகள் நடக்கும் பகுதியிலுள்ள காவல்துறை, அந்தந்த மாநில அளவில் செயல்படும் தீவிரவாத தடுப்புப் படைகள், மாநில அரசுகளின் புலனாய்வுக் குழுக்கள் இவையெல்லாம் அந்த குண்டு வெடிப்புப் புலனாய்வில் சம்மந்தப்படும். ஆனால், அவையெல்லாம் 'IB'என்ற மத்திய புலனாய்வுத் துறையின் பிடியின் கீழ் தான் விசாரணைகளை நடத்தும். எல்லோரும் 'IB'என்ற மத்திய உளவுத்துறையின் வழியைத் தான் பின் பற்றிட வேண்டும். அரசு உட்பட யாரும் 'IB' என்ற உளவுத் துறையை கேள்வி கேட்கும் நெஞ்சுரத்தைப் பெறாததால் எல்லோரும் அது சொல் வதையே கேட்கின்றார்கள்.

ஆகவே, குண்டுவெடிப்புகள் நடந்த வுடன் சொல்லப்படும் எல்லா செய்திகளும் ‘IB’ என்ற மத்திய உளவுத்துறையின் செய்தியே! யாராவது இதிலிருந்து மாறு பட்டால், அவர்கள் விரைவிலேயே ‘IB’ இன் வழிக்கு வர வைக்கப்படுவார்கள். ‘IB’ என்ற மத்திய உளவுத்துறையின் இந்திய அரசு நிருவாகத்தில் பிடி அத்துணை இறுக்கமானது.

**2. ‘IB’ என்ற மத்திய உளவுத்துறையே விசாரணையைக் கையில் எடுத்துக் கொள்வது**

பல நேரங்களில் குண்டுவெடிப்புகள் பற்றி நடக்கும் புலன் விசாரணைகளை உளவுத்துறை யதார்த்தமாக நடக்க விடுவதில்லை. அதே போல் விசாரணை எங்கு சென்று முடியுமோ அங்கே சென்று முடியட்டும், உண்மையான குற்றவாளிகள் சிக்கட்டும் என்றும் விடுவதில்லை. மாறாக புலன் விசாரணையில் நடக்கும் ஒவ்வொரு அசைவிலும் மத்திய உளவுத்துறை தன்னுடைய மூக்கை நுழைக்கும்.

வட்டார, மாநில காவல் துறையினர் விசாரணையை மிகவும் சரியாகவும் செம்மையாகவும் நடத்திக் கொண்டிருந் தாலும் ‘IB’ என்ற இந்திய உளவுத்துறை திடுதிப்பென தலையிடும். தன்னுடைய கட்டுக்கதையை புனையும் பரப்பும். தான் தயாராக வைத்திருக்கும் சாட்சியங்களைச் சமர்ப்பிக்கும். காவல் துறையில் தான் தேர்ந்தெடுக்கும் அதிகாரிகளைக் கொண்டு தான் விரும்பியவர்களை யெல்லாம் குற்றவாளிகளாக மாற்றிடும். எங்கெல்லாம் இந்துத்துவவாதிகள் தாம் குண்டு வெடிப்பு களை நடத்தினார்கள் என்பது கண்டு பிடிக்கப்படுமோ அங்கெல்லாம் ‘IB’ என்ற உளவுத்துறை நிச்சயமாக அனைத்தை யும் கையிலெடுக்கும்.

அதே போல் எங்கெல்லாம் ‘IB’ என்ற உளவுத்துறையே குண்டு வெடிப்புகளை நடத்தி இருக்குமோ அங்கெல்லாம் தவறாமல் விசாரணையை அது கையில் எடுத்துக் கொள்ளும்.

எந்த விசாரணைகளிலெல்லாம் காவல்துறை குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க இயலாமல் திணறுமோ அந்த விசாரணைகளிலெல்லாம் ‘IB’ என்ற உளவுத்துறைத் தவறாமல் தலையிடும். (ஏனெனில் அதில் அந்தக் குண்டு வெடிப்பில் அதன் கை இருக்கும்) அதன் கட்டுக் கதைகளை தாராளமாகப் புழக்கத்தில் விடும். அதையே வழக்காகவும் மாற்றிவிடும்.

‘IB’ என்ற உளவுத்துறையின் கையிலிருக்கும் அதிகாரம், அதன் கையிலிருக்கும் இதர வளங்கள் இவற்றைக் கொண்டு அது தான் விரும்புபவற்றை யெல்லாம் எளிதில் செய்து விடும். செய்து கொண்டிருக் கின்றது.

‘IB’ என்ற மத்திய உளவுத்துறை, வழக்கமாக உருவாக்கும் சாட்சியங்கள், கைப்பேசி (செல்)களின் பேச்சுவார்த்தைகள், அவற்றின் பதிவுகள், ஒப்புதல் வாக்கு மூலங்கள், ஒலி நாடாக்களில் பதிவு செய்யப்பட்ட உரையாடல்கள், வெடிப் பொருள்களை கையகப்படுத்துதல், தீவிர வாதத்திற்கு வித்திட்டதாகக் கருதப்படும் இலக்கியங்கள் இவை தான்.

இவற்றையெல்லாம் அடுக்கடுக்கான ஆதாரங்களாகக் காட்டிடும்போது, பாமர மக்கள் மிகவும் எளிதாக நம்பி விடுகின்றனர். இவற்றையெல்லாம் பாமர மக்களைப் போல் நீதிமன்றங்களும் அந்தச் செய்தி களைப் பார்க்கும் நீதிபதிகளும் நம்பி விடுகின்றன. இதனால் கைது செய்யப்படும் அப்பாவிகளை தடுப்புக் காவலில் வைக்க வோ, காவல்துறை தன் கட்டுப்பாட்டில் வைத்து விசாரிக்கவோ தாராளமாக, அனுமதி வழங்கி விடுகின்றன நீதி மன்றங்கள்.

இந்த அடிப்படை வேலைகளைச் செய்த பின் ‘IB’ என்ற மத்திய உளவுத்துறை புலனாய்வைத் தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்து விடுகின்றது. தன்னுடைய பிடிக்குள் கொண்டு வரும் இந்தப்

பாதகத்திற்கு காவல்துறைக்கு உதவி செய்வது எனப்பெயர் வைத்து விடுகின்றது.

இப்படி தங்களுடைய முக்கிய இலக்காகிய அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்வது என்பதை அடைந்து விடுகின்றது. அத்தோடு முஸ்லிம் இளைஞர்கள் அனைவரையும் பீதிவயப் படுத்தி, தன்னம் பிக்கையை இழக்கச் செய்து விடுகின்றது. அவர்கள் குற்றவாளி களைப் போல் வாழ்ந்திடத் தலைப்பட்டு விடுகின்றார்கள்.

இந்துக்களிலுள்ள சாதாரண சாமானியர்களும் அவர்களைக் குற்றவாளி களாகப் பார்க்கின்றனர். இத்தனை கொடூரங்களையும் உளவுத்துறை, தன்னால் இயக்கப்படும் காவல்துறையினர், தீவிர வாதத் தடுப்புப் படையினர், சில நேரங் களில் CBI என்ற மத்திய புலனாய்வுத் துறை இவற்றின் வழி நிறைவேற்றி விடுகின்றனர்.

உண்மைகள் வெளிப்படும் போது முஸ்லிம்களும், மதசார்பின்மையை நம்புபவர்களும், நடுவுநிலையாளர்களும், காவல் துறையையும், தீவிரவாதத் தடுப்புப் படையையும், சில நேரங்களில் மத்திய புலனாய்வுத் துறையையும் (CBI) பழிக் கின்றார்களே அல்லாமல், அதற்குப் பின்னிருக்கும் IB என்ற மத்திய உளவுத் துறையை பழிப்பதில்லை, அதனை (IBஐ) இயக்கிக் கொண்டிருக்கும் பிராமணக் கூட்டத்தைப் பழிப்பதில்லை.

**இவர்களோ அனைத்தையும் செய்து விட்டு அதன் விளைவுகளாக, நாட்டில் நடக்கும் கொந்தளிப்புகளை தொலைக் காட்சிகளில் பார்த்து ரசித்து மகிழ்ந்து கொண்டிருப்பார்கள்.**

### 3. எதிர்தாக்குதல் என்ற பெயரில் கொலைகள்: 'IB' என்ற மத்திய உளவுத்துறையின் பயங்கர ஆயுதம்

சாட்சியங்களைத் தங்கள் விருப்பங் களுக்குத் தகுந்தாற் போல் திரிப்பது, பொய்யை முழுமையாக ஆக்கி மக்களை நம்பிட வைப்பது, தாங்கள் கட்டும் கதையில் விட்டுப்போனவற்றை சரி செய்வது, இதற்கெல்லாம் IB என்ற மத்திய உளவுத்துறைக் கைக்கொள்ளும் முறை தான் எதிர்தாக்குதல்கள் என்ற பெயரில் செய்யப்படும் கொலைகள்.

எதிர் தாக்குதல் என்ற பாசாங்கில் அப்பாவி முஸ்லிம்களைக் கொலை செய்யும் முன், அந்த அப்பாவிக்கு ஒரு டைரியைத் தந்து அந்த டைரியில் தாங்கள் விரும்புவதையெல்லாம் எழுதச் சொல்லிடு வார்கள். அதில் அவனை (அந்த அப்பாவி முஸ்லிமை) தீவிரவாத செயல்களில் ஈடுபடுத்தியவர்கள் என சிலரின் பெயர்களும், "Associates" தீவிரவாத செயலில் அவன் உடனிருந்தவர்கள் எனச் சிலரின் பெயர்களும், "handlers" என்ற அவரை இயக்கியவர்கள் எனச் சிலரின் பெயர்களும், அவன் சார்ந்த இயக்கத்தின் பெயர் என்றொரு பெயரும் எழுதப்படும். பின்னர் அவனே அந்த டைரியை எழுதியதாக நாட்டு மக்களுக்கு ஊடகங்கள் வழியாகக் காட்டப்படும்.

எதிர்த்தாக்குதல் என்ற பெயரில் கொலையை நடத்திய பின் அவனுடைய வீட்டில் கிடைத்த முக்கிய சாட்சிகள், தடயங்கள் என இவை உலகை வலம் வரும். இதில் வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்கள், ஜிஹாதி இலக்கியங்கள் இவையெல்லாம் பின்னர் இடம் பிடிக்கும்.

'IB' என்ற மத்திய உளவுத்துறையின் இந்த பாதகங்களில் டெல்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவு, உத்திரப்பிரதேசத்தின் சிறப்புக் காவல்படை, மராட்டிய மாநிலத்தின் தீவிரவாத எதிர்ப்புப் படை, குறிப்பாக ரகுவான்ஷி என்பவரின் தலைமையின் கீழ் இயங்கும் தீவிரவாத எதிர்ப்புப் படை, மும்பையின் குற்றவியல் காவலர்கள், இராஜஸ்தானின் சிறப்புப் புலனாய்வுக்குழு SIT RAJASTHAN, மத்திய பிரதேச காவலர்கள் (M.P. Police),

ஜம்மு காஷ்மீர் காவல்துறையின் ஒரு பிரிவு, கர்னாடகா காவல்துறையின் ஒரு பிரிவு, ஜம்மு காஷ்மீர் காவல்துறையின் ஒரு பிரிவு (A Section of JK Police) ஹைதராபாத் சிட்டி போலிஸ் ஆகியவை அவர்களுக்கு உதவி செய்யும்.

'IB' என்ற மத்திய உளவுத்துறை மும்பை ரெயில் பெட்டிகளில் நடந்த குண்டு வெடிப்புகளில் இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தியது. 2008 ஆம் ஆண்டில் நடந்த டெல்லி குண்டு வெடிப்புகளில் இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தியது. சங்கத் மோச்சான் குண்டுவெடிப்புகள் (2009 இல்) இதைப் பயன்படுத்தியது. உத்திரப்பிரதேச நீதிமன்றங்களில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகளில் இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தியது. இப்படியே இன்னும் பல வழக்குகளில் இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தியுள்ளது.

### 4. இந்துத்துவ தீவிரவாதிகளை நோக்கி அழைத்துச் செல்லும் முக்கிய தடயங் களைத் தொடர்ந்து ஐ.பி புலனாய்வு செய்வதில்லை

குண்டு வெடிப்புகளில் மிகவும் ஆழமான தெளிவான சாட்சியங்கள், முக்கிய தடயங்கள் பல நேரங்களில் வட்டார காவல் நிலைய புலனாய்வில் கிடைப்பதுண்டு. இந்த சாட்சியங்களையும், தடயங்களையும் இறுதிவரை முழு மூச்சாகப் புலனாய்வு செய்தால் இந்துத்துவ தீவிரவாதிகள் சிக்குவார்கள்.

இப்படி ஒரு நிலை வரும் போதெல்லாம் 'IB' என்ற மத்திய உளவுத்துறை தவறாமல் தலையிடும். புலனாய்வைத் தடுக்கும். இது தான் மும்பை ரெயில் பெட்டிக் குண்டு வெடிப்பு 2006 இல் நடந்தது. மாலேகான் குண்டு வெடிப்பு 2006இல் நடந்தது. சம்ஜவ்தா விரைவு ரெயில் குண்டு வெடிப்பு 2007 இல் நடந்தது. ஹைதராபாத் மக்கா-மஸ்ஜித் குண்டு வெடிப்பு 2007, அஜ்மீர் ஷரீஃப் குண்டுவெடிப்பு 2007, ஜெய்ப்பூர் குண்டு வெடிப்பு 2008, அஹ்மதாபாத் குண்டு வெடிப்பு 2008 ஆகியவற்றிலும் இதுவே நடந்தது.

### 5. அடிக்கடி தடம் மாறும் உளவுத்துறை

பல முறை இது நடந்திருக்கின்றது. உளவுத்துறை ஒரு கதையைக் கட்டுகின்றது. பின்னர் அதை புலனாய்வுச் செய்பவர் களிடம் ஒப்படைத்து விடுகின்றது. புலனாய்வுத்துறை அதை செயல்படுத்திட வேண்டும்.

ஆனால் களத்தில் எதிர்பாராத ஆதாரங்கள் கிடைக்கின்றன. இந்த ஆதாரங்கள் உளவுத்துறை கட்டிய கதையைப் பொய்யாக்கிடும் விதத்தில் அமைந்து விடுகின்றது. உடனேயே உளவுத் துறை தன்னுடைய கதையை மாற்றிக் கொள் கின்றது. அது தன் சட்டையை மாற்றிக் கொள்வதை விட எளிதாகக் கதையை மாற்றிக் கொள்கின்றது.

சில வழக்குகளில் ஒரு முறை இரு முறை அல்ல பலமுறை அது தன் யுக்தியையும் நடத்தையையும் சமர்ப்கிக்கும் அறிக்கைகளையும் மாற்றிக் கொள்கின்றது.

பல நேரங்களில் புலனாய்வுச் செய்யும் வட்டாரக் காவல்துறையினர் உளவுத் துறையின் கதையையும் அது ஆய்வு செய்யச் சொல்லும் பாதையையும் மாற்றிடு வதில்லை.

இதுபோன்ற சூழ்நிலைகளில் இரண்டு விதமான கதைகள் - விளக்கங்கள் நாட்டில் நடமாடும். இவை பல நேரங்களில் உளவுத் துறையை இக்கட்டான சூழ்நிலை களுக்குள் தள்ளி இருக்கின்றன.

இதுதான் மும்பை ரெயில் பெட்டிக் குண்டு வெடிப்பில் நடந்தது; ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பில் நடந்தது; அஜ்மீர் ஷரீஃப் தர்கா குண்டுவெடிப்பில் நடந்தது; மத்திய பிரதேச தொடர் குண்டு வெடிப்பில் நடந்தது; சங்கத் மோச்சன் குண்டு வெடிப்பு வழக்கிலும் இதுவே நடந்தது.

**6. குற்றப்பத்திரிக்கையில் விழுந்த ஓட்டைகளை அடைத்தல்**

IB என்ற மத்திய உளவுத்துறை தான் சந்தேகப் படுபவர்களைக் கைது செய்ய தொடங்கிவிட்டால், அவர்களை சிக்க வைக்கும் கற்பனை சாட்சியங்களையும், தடயங்களையும் உருவாக்கிடத் தொடங்கி விடும்.

பல குண்டு வெடிப்புகளில் புலனாய்வு பொய்யையும், கட்டுக் கதைகளையும் மையமாகக் கொண்டே நடப்பதால், குற்றப்பத்திரிகைகள் ஓட்டைகளும் உடைசல்களும் நிறைந்ததாகவே வந்து சேரும். எதிர் தாக்குதல் என்ற படுகொலைகளைச் செய்த பின்பும் குற்றப்பத்திரிகையிலுள்ள ஓட்டைகள் அடை பட்டிருக்கின்றன.

உளவுத்துறை அதையெல்லாம் பற்றிக் கவலைப் படுவதில்லை. காரணம் முஸ்லிம் களைப் பழிக்க வேண்டும் என்ற அதன் பிரதான பணி நிறைவடைந்து விட்டது. அது தன் இலக்கை எட்டி விட்டது.

அதே போல் IBக்கு மத்திய உளவுத்துறைக்கு இன்னொன்றும் தெரியும், தனது ஏற்பாட்டில் கைது செய்யப்பட்ட முஸ்லிம்கள் பல காலம் சிறையிலிருப் பார்கள். அவர்களின் குடும்பங்கள் சிதைந்து விடும்.

உளவுத்துறை, இப்படி, முன்னுக்குப் பின் முரணாகச் செய்த செயல்களைப் பின் வரும் குண்டு வெடிப்புகளில் நடந்த ஆய்வுகளிலிருந்து தெளிவாகத் தெரிந் திடலாம்.

# உண்மை தீவிரவாதிகளை தப்ப விட விட்டு ஒரு வழக்கு! இரண்டு புலன் விசாரணைகள்! இரு வேறுமுடிவுகள்! - விசித்திர கதை!

**இரண்டு குற்றப் பத்திரிக்கைகள்!**

(A) குண்டு வெடிப்புகள் மற்றும் குற்றவாளிகள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் பற்றிய ஆரம்ப கட்ட தகவல்கள்:-

**(A) சம்பவம் நடந்த முதல் நாளிலிருந்தே முஸ்லிம் அமைப்புகள் மற்றும் முஸ்லிம் நபர்கள் மீதான குற்றச்சாட்டுகள்**

(i) சம்பவம் நடந்த அன்றே குண்டு வெடிப்புக்கு காரணமானவர்கள் (SIMI) சிமி இயக்கத்தை சார்ந்தவர்கள் தான் என்பதை IB என்ற மத்திய உளவுத்துறை உறுதி செய்தது (ஆதாரம்: Afternoon, Mumbai, 12 July 2006)

(ii) லஷ்கரே - தொய்பா மற்றும் SIMI (சிமி) என்ற இந்திய மாணவர் இயக்கம் மீது போலீஸ் சந்தேகப்பட்டது (Mid-Day, Mumbai, 12 July 2008)

(iii) ரஹில் (Rahil), பயாஸ் காக்ஜி (Faiyas Kagzi) மற்றும் ஜெய்னுதீன் போன்ற தீவிரவாதிகள் இந்த குண்டு வெடிப் பினை நடத்தினார்கள். (Mid-Day, 12 July 2008)


(iv) நேபாள காவல்துறை இது சம்பந்தமாக நான்கு பாகிஸ்தானியர் களை காத்மண்டுவில் கைது செய்தது (Rediff.com, July 12, 2006)

(v) மூன்று "சிமி" உறுப்பினர்களை போலீஸ் ஹைதராபாத்திலிருந்து பிடித்துச் சென்றனர். (Asian Age, Mumbai, July 12, 2006)

(vi) ரயில் குண்டுவெடிப்பு நடந்து நான்கு நாட்களுக்கு பிறகு 250 பேர்களை நகரின் மாஹிம் பகுதியிலிருந்து போலீசார் பிடித்துச் சென்றனர். (The Times of India, Mumbai, 15 July 2006)

**II. புலன் விசாரணையை செயலளவில் IB எடுத்து கொள்ளுதல்**

(i) புலன் விசாரணை பொறுப்பை IB எடுத்து கொண்டது. இது ATS (Anti Terrorism




Squad)இன் தலைவரான KP ரகுவான்சி (Raghuvanshi)யை தவிர வேறு யாருக்கும் தெரியாது. (Daily Sakal, Pune, 22 July 2006)

### III. பிற தகவல்கள்

(i) நேரடி சாட்சியங்கள் மற்றும் காயம்பட்டவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களின் மாதிரி (Sketches) வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. (Rediff.com, 12 July 2006)

(ii) CPI(M) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆலோசனை குழு உறுப்பினரும் மேற்கு வங்காள மாநிலத்தை ஆளும் இடதுசாரி கட்சியின் சபா நாயகருமான பிமன் போஸ் இந்த ரயில் குண்டு வெடிப்புக்கு இந்து அமைப்புகளை தான் சந்தேகிப்பதாக கூறினார். (Rediff.com, 15 July 2006)

(iii) RDX ஆர்.டி.எஸ் வகை வெடி பொருள்கள் அமோனியம் நைட்ரேட் மற்றும் எரிபொருள் போன்றவை இந்த குண்டுகளில் பயன்படுத்தப் பட்டிருப்பதாக தடவியல் (ப.56) நிபுணர்கள் உறுதி செய்தனர். (ஆதாரம்:Asian Age, Mumbai, 17 July 2006)

### B. வழக்கு வெற்றிகரமாக துப்பு துலக்கப் பட்டதாக ATSன் அறிவிப்பு

1. முதலாவதாக சந்தேகத்தின் பேரில் ஜூலை 20-ல் பீஹாரில் இருந்து கமால் அஹ்மது என்பவரையும், ஜூலை 29 அன்று மும்பை, மீரா சாலையிலிருந்து (Ehtesham) எத்திஷாம் என்பவரையும் ATS (IB என்று வாசிக்கவும்) கைது செய்தது. அவர்களை மயக்கநிலை (Narco-analysis Test) சோதனை செய்த போது இந்த கொடூர செயலின் சூத்திரதாரிகளின் பெயர்களை பற்றிய தகவல்களை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் மேலும் நான்கு பேர்களை ATS கைது செய்தது. அவர்கள் பெயர்களாவது முஹம்மது சாஜித், முஹம்மது ஷபி (இருவரும் மும்பராவை சேர்ந்தவர்கள்) மற்றும் கல்கத்தாவை சேர்ந்த முஹம்மது மஜீத் ஷேக். இவர்களை கைது செய்த கையோடு வழக்கு பற்றிய புலன் விசாரணை முடிந்து விட்டது என ATS அறிவித்தது. மேற்சொன்ன நான்கு பேர்களும், ரயிலில் குண்டு வைத்த பாகிஸ்தானியர்களுக்கு அடிப்படை உதவிகளை செய்தனர். அவர்களில் ஒருவரான மஜித் ஷேக் லஸ்கரே தொய்பா (LET) வின் Sleeper குழுவை சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படுகின்றனர். (The Times of India Pune 30 September 2006)


(2) குண்டு வெடிப்பில் ஈடுபட்ட பாகிஸ்தானிய சதிகாரர்களுள் ஒருவன், நெரிசல் மிக்க ரயில் பெட்டியில் இருந்து வெளியேற முடியாமல் (Khar) ஹார் ரயில் நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பில் மாண்டு போனார் என்று மும்பை போலீஸ் கமிஷனர் (AN Roy) ஏ.என்.ராய் கூறினார். மிக மோசமாக சிதைந்து போன அவரது உடல் கேட்பாரற்று கிடந்தது. அவரது சிதைந்து போன முகத்தை மீண்டும் வடிவமைத்து அந்த பிரேதத்தில் DNA மரபணு சோதனையை போலீஸ் செய்தது. இவர் பாகிஸ்தானில் உள்ள லாகூரை சேர்ந்த சலீம் என்பதை கைது செய்யப்பட்டவர்கள் மீது நடத்திய சோதனை (Narco-analysis Test) மூலம் அறிந்து கொண்டனர்.

(3) புது தில்லியில் பணியிலிருக்கும் ஒரு மூத்த நிர்வாக அதிகாரி கூறுகையில் கைது செய்யப்பட்ட பீகாரை சார்ந்த கமால் அன்சாரியை தொடர்ந்து, குற்றம் சாட்டப்பட்டவர்கள் பற்றிய தகவல்கள் அனைத்தையும் ATS என்ற மராட்டிய தீவிரவாதி தடுப்புப்படை சேகரித்து விட்டதாக கூறினார். ISI என்ற பாகிஸ்தான் உளவுத்துறைக்கு இந்த குண்டு வெடிப்பில் தொடர்பு இருக்கிறது என்பதற்கு மும்பை காவல்துறையினரிடம் போதுமான ஆதாரம் உள்ளது என்பதை மும்பை போலீஸ் கமிஷனர் ஏ.என்.ராய் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

இந்த குண்டுவெடிப்பில் ஐ.எஸ்.ஐ.க்கு ( பாகிஸ்தான் உளவுத்துறைக்கு) தொடர்பு உள்ளது என்ற மஹாராஷ்டிர அரசின் குற்றச்சாட்டுக்கு மத்திய அரசும் ஒத்துக்கொண்டுள்ளது. கைது செய்யப்பட்ட குற்றம் சாட்டப் பட்டவர்களின் நடவடிக்கைகள் செல்போன் உரையாடல்களை இடைமறித்து பெற்ற தகவல்கள் பாகிஸ்தானிய பயிற்சி முகாம்களில் பங்கேற்றுக் கொண்டதற்கான ஆதாரங்கள், ஹவாலா மூலம் பண பரிமாற்றம் செய்து கொண்டதற்கான ஆதாரங்கள் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட ஒருவனின் வீட்டிலிருந்து கண்டெடுக்கப் பட்ட ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்துகள் போன்ற பல ஆதாரங் களின் அடிப்படையில் எங்களது சாட்சியங்கள் அமைந்துள்ளன.

மஹாராஷ்டிர போலீஸ் அதிகாரிகள் இந்த தொடர் குண்டு வெடிப்பில் ஐஎஸ்ஐ-ன் தொடர்பு பற்றிய அறிக்கையை வரும் புதன்கிழமை அதாவதுஅக்டோபர் 4, 2006 அன்று மத்திய உள்துறை செயலரிடம் சமர்ப்பிப்பார்கள்

4) அ) பாகிஸ்தான் உளவுத்துறை குண்டுவெடிப்புக்கு சதித்திட்டம் தீட்டியது



ஆ) 11 பாகிஸ்தானியர்கள் இந்த குண்டுவெடிப்பில் நேரடியாக பங்கெடுத்துக் கொண்டனர்.

இ)அவர்களுக்கு பாகிஸ்தானிலுள்ள பஹவல்பூர் பயிற்சி முகாமில் பயிற்சி வழங்கப்பட்டது - போன்ற தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை மும்பை போலீஸ் கமிஷனர் ஏ.என். ராய் மற்றும் ஏ.டிஎஸ் தலைவர் கே.பி. ரகுவான்ஷி மத்திய உள்துறை செயலாளரிடம் வழங்கினார்கள்

5) பீஹாரில் மதுபானி என்னுமிடத்தை சேர்ந்த கமால் தொடர்பு கொண்டிருந்த 12க்கும் மேற்பட்ட நபர்களிடம் ஏடிஎஸ்.ம் மத்திய உளவுத்துறை அதிகாரிகளும் விசாரணை நடத்தி வருகின்றனர்

## C) ஏடிஎஸ் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தல்:

பிறகு ஏ.டிஎஸ் (மராட்டிய தீவிரவாத தடுப்பு படை) குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட 13 நபர்களுக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது.

**ஏடிஎஸ் குற்றப்பத்திரிகையில் சமர்ப்பித்த சாட்சியங்களானது:**

1. குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்கு மூலங்கள்
2. செல்போன்கள் மூலம் நடந்த உரையாடல்களை இடைமறித்து கேட்டறிந்த தகவல்கள்
3. நார்கோஅனலிசிஸ் டெஸ்ட் என்ற மயக்க நிலை சோதனை
4. போலிஸாருடன் நடந்த துப்பாக்கி சண்டையில் என்கவுன்டரில் கொல்லப்பட்ட பாகிஸ்தானியனின் டிஎன்ஏ மரபணு சோதனை
5. குற்றவாளிகளின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆர்டிஎக்ஸ் வெடிப்பொருட்கள்
6. கோவாண்டியில் இருந்து பாந்த்ராவிற்கு வெடிகுண்டுகளை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட மாருதி கார்

ஏடிஎஸ் சுட்டிகாட்டிய சாட்சிகளில் 2 முக்கிய சாட்சிகளில் ஒருவர் மேற்கு இரயில்வேயில் வழக்கமாக பயணிப்பவர். அவரின் கூற்றுப்படி சம்பவம் நடந்த நாளன்று குண்டு வெடிப்பில் சந்தேகிக்கப்படும் நபர்களில் ஒருவர் எடுத்து வந்த கனமான ஒரு பொருள் அவரை இடித்ததால் அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பிறகு சந்தேகிக்கப்படும் நபர்களை பற்றிய அங்க அடையாளங்களை பத்திரிகையில் பார்த்த உடன் தான் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நபர் தான் இந்த சந்தேகிக்கப்படும் நபர் என்பதை அறிந்தார். உடன் தானாகவே முன் வந்து அவரை அடையாளம் காட்டினார்.

இரண்டாவது சாட்சி ஒரு வாடகை கார் ஓட்டுனர். சம்பவம் நடந்த நாளன்று சிலர் மூன்று நபர்களை கோவாண்டியில் ஏற்றிக்கொண்டு சர்ச்கேட்டில் கொண்டு வந்து இறக்கிவிட்டனர். அவர்கள் தங்களுடன் கொண்டு வந்த சில பெரிய பெட்டிகளை காரின் முன்பக்க இருக்கையில் வைத்திருந் தனர். பயணத்தின் போது கார் டிரைவர் திடீரென்று பிரேக் அடித்ததில் ஒரு பொருள் கீழே விழுந்தது. இதனால் கோபம் கொண்ட அவர்கள் இவரை கடிந்து கொண்டனர். சிலர் இதனால் சற்று ஆச்சர்யமடைந்தார்கள். பிறகு இந்த மர்ம நபர்களை பற்றிய மாதிரி புகைப்படங்களை பத்திரிகைகளில் பார்த்த உடன் இவர் அவர்களை அடையாளம் காட்ட முன் வந்தார்.

**D) சாட்சியங்கள் எந்த அளவு நம்பத் தகுந்தவை?**

1. நெரிசல் மிகுந்த புறநகர் ரயிலில் பல வாரங்களுக்கு முன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட தன்னுடன் பயணித்த ஒரு நபரை வெறும் அங்க அடையாளங் களை பத்திரிகையில் பார்த்தவுடன் நினைவு படுத்தி எப்படி அடையாளம் காட்ட முடியும்?
2. அதே சந்தேகக் கேள்விதான் டாக்ஸி ஓட்டுனர் விஷயத்திலும் தொங்கி நிற்கிறது. குண்டு வெடித்த நாளிலிருந்து தான் ஏற்றி சென்ற நூற்றுக்கணக்கான பயணிகளில் அந்த சில நபர்களை மட்டும் எப்படி ஞாபகத்தில் கொள்ள முடியும்?
3. எங்கு எப்படி செல்போன் உரையாடல் கள் பதிவு செய்யப்பட்டன? ஒருவேளை அவர்களது தொலைபேசி எண்கள் முன்பே கிடைத்து கண் காணிக்கப் பட்டும் பதிவு செய்யப்பட்டு வந்திருந்தும் ஏன் இந்த நபர்கள் முன்பாகவே கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்படவில்லை? இல்லை குண்டு வெடிப்புக்கு பின்பு தான் அவர்களது செல்போன் உரையாடல் கண்காணிக்கப் பட்டது என்றால் எதன் அடிப்படையில் அது செய்யப்பட்டது? செல்போன் உரையாடல் விஞ்ஞான பூர்வமாக அடையாளம் காணப்பட்டதா?

4. எம்.சி.ஓ.சி எ என்ற மராட்டிய மாநில பொடாவின் கீழ் பதிவு செய்யப்பட்ட சில பிரிவுகள் சட்டப்படி செல்லத் தக்கதல்ல என்பதன் அடிப்படையில் வழக்கு உச்ச நீதிமன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும் பொழுது போலீஸால் மராட்டிய பொடா சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் எந்தளவுக்கு நம்பகத்தன்மை கொண்டவை?

5. குற்றத்தை உறுதி செய்திட வேறு அதிகப்படியான ஆதாரங்கள் இல்லாமல் மயக்க நிலை சோதனை அடிப்படையில் மட்டும் ஒருவரை குற்றவாளி என்று நிரூபிக்க முடியுமா?

6. டி.என்.ஏ. என்ற மரபணு சோதனை மூலம் ஒரு பாகிஸ்தானியரை எப்படி அடை யாளம் காட்டிட முடியும்? இந்த சோதனை மூலம் இவரின் மதம் நாடு அல்லது இவர் சார்ந்த தீவிரவாத இயக்கத்தை அடையாளம் கண்டுபிடிக்க இயலுமா?

7. யாரோ ஒருவரின் வீட்டில் இருந்து மும்பை காவல் துறையால் கைப்பற்றப் பட்ட ஆர்டிஎக்ஸ் பற்றிய செய்தி எந்த அளவுக்கு நம்பத்தகுந்தவை?

இவ்வாறாக இந்த வழக்கின் புலன் விசாரணையில் பலவிதமான முரண்பட்ட செய்திகளே நிறைந்து காணப்படுகின்றன, ஏ.டி.எஸ் மராட்டிய தீவிரவாத எதிர்ப்புப் படை (ஐபி என்ற மத்திய உளவுத்துறை என வாசிக்கவும்)யால் சாட்சியங்கள் கையாளப் பட்டிருக்கும் விதத்தை எந்த சராசரி அறிவுபடைத்தவரும் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்தளவுக்கு என்றால் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் அவர்களே இந்த சாட்சியங் களில் திருப்தி கொள்ளவில்லை. அவர் கூறுகிறார் சில சிக்கலான புதிர்கள் தீர்க்கப்படவில்லை. ஆகவே சாட்சியங்கள் சரியாக உள்ளன என்று கூற இயலாது

இவ்வாறு சிக்கலான பல பதில் களுக்கான விடை கிடைக்காத நிலையிலும் மற்றும் பாகிஸ்தானிய உளவுத்துறையின் தொடர்பு இந்த குண்டு வெடிப்பில் உள்ளதை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கும் எந்த சாட்சியமும் இல்லாத சூழ்நிலையில் மும்பை நகர போலீஸ் ஆணையர் ஏ.என்.ராய் இந்த வழக்கின் விசாரணையை வெற்றிகரமாக முடித்து விட்டோம் என்று எக்காள முழக்கமிட்டிருக்கக்கூடாது

உண்மை என்னவென்றால் குண்டு வெடிப்பானது மும்பை போலீஸ் கமிஷனரின் நீதிவரம்பு அதிகார எல்லைக்குள் நடைபெறவில்லை. ஆதலால் இந்த வழக்கில் ஈடுபட எந்த அதிகாரமும் இல்லை என்பதோடு மும்பை நகர காவல்துறை இந்த வழக்கினை புலன் விசாரணை செய்யவும் இல்லை என்பதே உண்மை.

மும்பை இரயில்வே காவல் துறை கமிஷனரின் வரம்பு அதிகார எல்லைக்குள் இந்த குண்டு வெடிப்பு நடந்துள்ளது. இரண்டாவதாக இந்த வழக்கின் புலன் விசாரணை மஹாராஷ்டிரா காவல்துறை இணை ஆணையரின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஏடிஎஸ் தீவிரவாத தடுப்புப்படை செய்துள்ளது. ஆகவே இந்த வழக்கு பற்றி பத்திரிகையாளர் சந்திப்பினை கூட்டி அதை விளக்கிடும் உரிமையை மும்பை இரயில்வே கமிஷனருக்கோ அல்லது ஏடிஎஸ் தீவிரவாத தடுப்பு தலைவருக்கோ அல்லது காவல் துறை இணை ஆணையருக்கோ தான் இருக்கின்றது.

ஆனால் ஐபி என்ற உளவுத்துறையின் உத்தரவிலோ அல்லது மாநில அரசாங்கத் தின் உத்தரவிலோ அல்லது வேறு சில காரணங்களுக்காகவோ மும்பை காவல் துறை கமிஷனர் ஏ.என்.ராய் அவர்கள் பத்திரிகைகளுக்கு தகவல்களை சொன்னார் கள். ஒரு நேர்மையான அதிகாரியாக இருந்திருந்தால் இதை அவர் மறுத்திருக்க

வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை.

துரதிருஷ்டவசமாக இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து ஐபி என்ற மத்திய உளவுத்துறை இதுபோன்று சாட்சியங்களை திரித்து வருகின்றது. இதன் உண்மையான நோக்கத்தையும் நமது நாட்டு தலைவர்கள் புரிந்து கொள்ளத் தவறி விட்டனர்.

இந்தியாவில் நடக்கும் குண்டு வெடிப்புகளின் மூலம் உளவுத்துறை பாகிஸ்தானையும் அதன் ஐ.எஸ்.ஐ மீதும் முழுப்பழியையும் சுமத்தி இந்திய முஸ்லிம் களின் நன்மதிப்பை கெடுத்து அதன் மூலம் பொது மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பு ஏற்பட செய்வதன் மூலம், பிராமண மற்றும் சங்பரிவார் தங்களது கொடூரமான செயல்களை எந்த தடங்களு மின்றி செய்து வருகின்றன.

இதன் மூலம் ஏற்படும் பலன்களை சங்பரிவாரின் அரசியல் பிரிவு பாரதீய ஜனதா கட்சி அறுவடை செய்து வருகிறது என்பதே நிதர்சனமாக உண்மை.

ஏடிஎஸ் மராட்டிய தீவிரவாத எதிர்ப்பு படையின் இதுபோன்ற செயல் களால் உலகளவில் இந்தியாவிற்கு பலவகை யில் நெருக்கடியும் தலைகுனிவும் ஏற்பட்டுள் ளன.

## E) மத்திய உளவுத்துறையின் புதிய (ஐ.எம்) இந்திய முஜாஹிதீன் கோட்பாடு

இந்தியன் முஜாஹிதீன் (ஐ.எம்) என்ற அமைப்பு தான் 2006ல் மும்பை இரயிலில் நடந்த குண்டுவெடிப்புக்கு காரணம் என்பதை கண்டுபிடித்து அதை மும்பை குற்றப்பிரிவு வெளியிட்டதின் மூலம் ஏ.டி.எஸ்-இன் நம்பகத்தன்மையின் அடி வேரையே உலுக்கிவிட்டது.

மும்பை குற்றப்பிரிவினரால் கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளில் ஐந்தில் மூன்று நபர்கள் குண்டு வெடிப்பை நிகழ்த்திய 3 பேர் கொண்ட குழுவில் ஒரு பகுதியினர். இதை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்துள்ளனர். மேற் சொன்ன ஒப்புதல் வாக்குமூலங்களை கொடுத்தவர்கள் இந்திய முஜாஹீதீன்கள் என்ற அமைப்பை நிறுவியவர்களுள் ஒருவரான சாதிக் ஷேக். இவர் செப்டம்பர் 24ல் மும்பையில் கைது செய்யபட்டார். மற்றொருவர் டில்லி பாட்லா ஹவுஸில் 19 செப்டம்பர் 2010ல் போலீஸாருடன் நடந்த துப்பாக்கி சண்டைக்குப்பின் சேக் ஆரிஃப் என்பவருடன் சயீப் என்பவரும் கைது செய்யப்பட்டார். சாதிக் மற்றும் ஆரிப் தாங்கள் ஒப்புதல் வாக்குமூலங்களை மும்பை காவல் துறையிடம் தந்தார்கள்.

அதில் சயீஃப் (saif) டெல்லி போலீசாரிடம் பேசியதாக ஒத்துக் கொண்டார். சிலர் டெல்லி துப்பாக்கி சண்டையில் ஈடுபட்ட ஆதிஃப் அமீன் மற்றும் முஹம்மது சாஜித் ஆகியோரின் பெயர்களையும், துப்பாக்கி சண்டைக்குப் பிறகு போலீசாரால் கைது செய்யப்பட்ட ஜிசான் மற்றும் தலைமறைவாக உள்ள சயீஃபின் (saif) சகோதரர் Dr. சாநவாஸ்கான் மற்றும் அபுரஷீத் ஆகியோரின் பெயர் களையும் சேர்த்து மொத்தம் 5 நபர்களை மும்பை குண்டு வெடிப்புக்கு காரண மானவர்கள் என்று அடையாளம் காட்டி உள்ளனர்.

முன்னதாக குறிப்பிட்ட 13 பேர்கள் இரகசியமாக செயல்படும் குழுவாக (Sleeper cell) இருக்கலாம் அல்லது வற்புறுத்தலின் பேரில் காவல்துறை அவர்களை கைது செய்து இருக்கலாம். ATS - தீவிரவாதத் தடுப்புப் படையால் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டவர்களின் ஒப்புதல் வாக்கு மூலங்களிலும் மும்பை குற்றப்பிரிவு காவல் துறையினரால் சமீபத்தில் கைதுசெய்யப்பட்ட 3 நபர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களிலும் பல முரண்பாடுகள் காணப்படுகிறன என்பதை கீழ்காணும் உண்மைகள் உறுதிபடுத்துகிறன.

1. ATS - மராட்டிய தீவிரவாத தடுப்புப்படையின் கூற்றுப்படி பைசல்

ஷேக், ஆஷிப் கான் பஷீர், ஆகிய இந்த இருவர்தான் முக்கிய சதிகாரர்கள். ஆனால் மும்பை குற்றப்பிரிவு காவல் துறையினரோ (Indian mujahideen) இந்தியன் முஜாஹிதீன் அமைப்பை சேர்ந்தவர்களில் ஒருவரான சாதிக் ஷேக்தான் இந்த குண்டு வெடிப்பின் சதிகாரர் என கூறகின்றனர்.

2. வெடிகுண்டுகள் முஹம்மது அலியின் இல்லத்திலும் (Gowandi) கோவாண்டி செம்பூர் பகுதியிலும் ஒன்று சேர்க்கப்பட்டன என்ற ATSஇன் கூற்றுக்கு முரணாக அலி ரஹித் செவ்ரி (sewri) பகுதியில் வாடகைக்கு எடுத்த ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் ஒன்று சேர்க்கப்பட்டது (assemble) என்று குற்றப்பிரிவு கூறுகிறது.

3. ATS - மராட்டியத் தீவிரவாதத் தடுப்புப் படையைப் பொருத்தவரை வெடி குண்டுகளை தயாரிக்க பஷிர்கான், ஆசிப்கான் ஆகியோர் அமோனியம் நைட்ரேட்டும் மற்றும் வெடிப்பான் களைக் (detonators) கொண்டு வந்தனர். அதே நேரத்தில் பாகிஸ்தானியரான (Ehsanullah) இஹ்ஸாணுல்லாஹ் கொண்டு வந்த ஆர்.டி.எக்ஸ்ஸை கமால் அன்சாரி எடுத்து (transport ) சென்றார்.

இந்த கூற்றுக்கு முரண்படும் விதத்தில் ரியாஜ் பட்கல் என்ற ரோஷன்கான் சவ்ரி அடுக்குமாடி குடியிருப்பில் வெடி குண்டுகளை தயாரிக்க அமோனியம் நைட்ரேட் கொண்டுவந்தார் என மும்பை குற்றப்பிரிவு கூறுகின்றது. இந்த குண்டு வெடிப்பில் ஆர்டிஎக்ஸ் பயன்படுத்தப் படவில்லை என்றும் மும்பை குற்றப்பிரிவு கூறுகின்றது. இது ஒரு முக்கியமான முரண்பாடாகும்.

4. சாஜித் அன்சாரி குண்டை வெடிக்கச் செய்ய கடிகாரம் மற்றும் வேறு சில பொருட்களை கொண்டு வந்தாரென்று ATS கூறும் அதே வேளையில் எலெக்ட்ரிசியன் ஆரிப் ஷேக்தான் சீதாக்கேம்பில் (cheetah camp) உள்ள தனது வீட்டில்தான் வெடிகுண்டு சர்கியூட்டை தயாரித்து குண்டு வெடிப்புக்கு இரு தினங்களுக்கு முன் சவ்ரி (sewri) அடுக்குமாடி குடியிருப்புக்கு எடுத்துவந்தார் என்றும் கூறுகின்றது. இதுவும் முற்றிலும் முரண்பட்டத் தகவல். இவையெல்லாம் மும்பைக் குற்றப்பிரிவின் தகவல்கள்.

5. ATS தாக்கல் செய்த குற்றப் பத்திரிக்கையில் பாகிஸ்தானிய தீவிரவாதிகள் கோவாண்டி என்னுமிடத்தில் உள்ள ஷேக் முஹம்மது அலீ வீட்டில் வெடி குண்டுகளைத் தயாரிக்க, அதனை ஆசிப்கான், பஷீர்கான், சாஜித் அன்சாரி மற்றும் இஹ்ஸான் சித்திக் ஒன்று இணைத்து வடிவமைக்க உதவி புரிந்தனர் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால் மும்பை குற்றப்பிரிவோ, வெடிக்குண்டுகளை சாதிக்ஷேக், முஹம்மது சயீஃப் மற்றும் இவரது சகோதரர் சாநவாஸ் கான் போன்றோர் ஒன்றிணைக்க (assemble) அதற்கு ஜீசான் ஷேக், ஆரிப்ஷேக், முஹம்மது சாஜித், அபுரஷீத் மற்றும் ஆதிஃப் அமீன் உதவினர் என்று சுட்டிக்காட்டி உள்ளனர்.

6. குண்டுகளைக் கொண்டு சென்றவர்களும் குண்டுகளை வைத்தவர்களும் முற்றிலும் வேறு வேறானவர்கள்.

7. சயீஃப், டெல்லி காவல்துறையிடம், " இந்த 13 பேரும் யார்? யார்? என்பது எனக்குத் தெரியாது என்று கூறியுள்ளார். (புனே மிரர் (THE TIMES OF INDIA , 3 ஆக்டோபர் 2008. ) THE TIMES OF INDIA, MUMBAI , 15th Oct 2008)

பின்னர் வந்த செய்திகள் ஓர் உண்மையை ஊர்ஜிதம் செய்தன. அது இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பிற்கும் குற்றம் சாட்டப்பெற்ற 13 பேருக்கும் இடையே

உள்ள தொடர்பை நிரூபிக்க இயலாமற் போனது என்பதே. இது IB என்ற மத்திய உளவுத் துறைக்கு பயங்கர ஆதங்கத்தை ஏற்படுத்தியது.

இதில் ஐபி என்ற மத்திய உளவுத்துறை ஆதங்கப்படுவதற்கு எதுவுமில்லை. காரணம் இரண்டு புலனாய்வுகளுமே அவர்களின் நாட்டப்படியும், திட்டபடியும் தான் நடத்தப் பட்டன. ஒன்றை ஏடிஎஸ் என்ற தீவிரவாத தடுப்புப் படைநடத்தியது. இதன் தலைவர் K.P.ரகுவான்ஷி ஐபி என்ற மத்திய உளவுத் துறைக்கு செஞ்சோற்றுக் கடனாற்றுபவர். இன்னொரு புலனாய்வை மும்பை குற்றப் பிரிவு செய்திருக்கின்றது. அதன் தலைவர் ராகேஷ் மாரியா ஐ.பி. என்ற உளவு துறைக்கு தோட்டத்து தொழும்பர் அடிமை.

உண்மையிலேயே எது எல்லோரையும் ஆதங்கப் படுத்தி இருக்க வேண்டும் என்றால் ஐபி என்ற உளவுத்துறை புலனாய்வின் போக்கை மாற்றியதுதான். இந்தப் புதிய வெளிப்பாடுகள் மோக்கா என்ற மராட்டிய பொடா நீதிமன்றத்திலிருக்கும், மும்பைக் குண்டு வெடிப்பின் வழக்கை முற்றாகப் பாழ்படுத்திவிடும் என்பதே!

இதில் ஐபி என்ற மத்திய உளவுத்துறை நடந்து கொண்டது முற்றிலும் சந்தேகத்திற் குரியதே. ஐபி என்ற மத்திய உளவுத்துறை மும்பைக் குற்றப்பிரிவு கொண்டு வந்த இரண்டாவது கதையைத் தலையெடுக்க விட்டிருக்கக்கூடாது. காரணம் அது அரசை மிகப் பெரியதொரு நெருக்கடிக்கு உள்ளாக்கி விட்டது. இந்தக்காரணத்தைச் சொல்லியே மத்திய உளவுத்துறை மும்பை குற்றப்பிரிவின் இரண்டாவது கதையை நிறுத்தி இருக்கலாம்.

ஏனெனில் (ஐபி) மத்திய உளவுத் துறை மும்பைக் குண்டு வெடிப்புகளில் ISI என்ற பாகிஸ்தானின் உளவுப்படைக்குப் பங்குண்டு எனக் கூறிவிட்டது.

இப்படித்தான் ஷம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் ரயில் குண்டு வெடிப்பிலும் (ஐபி) மத்திய உளவுத்துறை பாகிஸ்தானிடம், அந்தக் குண்டு வெடிப்பிற்கும் பாகிஸ்தானின் உளவுத் துறைக்கும் பங்குண்டு எனக் கூறியது.

பாகிஸ்தானுக்கு மட்டும் இந்த செய்தியை சொல்லிடவில்லை. உலகநாடுகள் அனைத்திற் கும் இந்த செய்தியைச் சொன்னது நமது அரசு. இதற்கு ஐபி என்ற மத்திய உளவுத்துறையின் தகவல்களையே நம்பியது நமது அரசு!

ஆனால் பின்னர் 2008இல் மாலேகானில் நடந்த குண்டுவெடிப்புகளை ஆய்வு செய்திடும் போது இந்துத்துவ வாதிகளே ஷம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்புகளையும் நடத்தினார்கள் என்பதை ஹேமந்த் கர்கரே கண்டுபிடித்தார். நிச்சயமாக ஹேமந்த் கர்கரே ஐபி என்ற மத்திய உளவுத்துறையின் அடாவடித் தனங்களுக்கு ஆட்படவில்லை. அவர் பிராமணர்களின் பேயாட்டங்களை வெளிப்படுத்தினார்.

உடனேயே ஐபி என்ற மத்திய உளவுத்துறை களமிறங்கி, கர்கரேயின் கையைப்பிடித்தது. கர்கரேயின் போக்கில் அவரைவிட்டால், நம் நாட்டின் நம்பகத் தன்மை உலகநாடுகளில் கெட்டுப்போகும் . ஆகவே நாம் அதற்கு வழிவிடக்கூடாது. தடுத்தாக வேண்டும் என்றார்கள். (THE TIMES OF INDIA JUNE 2008)

ஆச்சரியப்படும் அளவில் ஐபி இதே வாதத்தை (வெளிநாடுகளில் நமது பெயர் கெட்டுப் போகும் என்ற வாதத்தை) மும்பைக் குண்டு வெடிப்பு விசாரணையில் முன்வைக்க வில்லை. மாறாக ஐபி என்ற மத்திய உளவுத்துறை புதியதாக கொண்டுவந்த கட்டுக்கதையை ஆதரித்தது.

இங்கே தான் ஐபி என்ற மத்திய உளவுத்துறையின் செயல்கள் நமக்கு வியப்பைத் தருகின்றன. மராட்டிய தீவிரவாத தடுப்புப்படை, ஷம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் ரெயில் குண்டுவெடிப்பு வழக்கை புலனாய்வு செய்த வகை நம்பிடும் வகையில் இருந்தது. ஆனால் மும்பை ரெயில் பெட்டி குண்டு வெடிப்பு வழக்கில், நடந்த புலன் விசாரணை புதிர் புதர்களால் நிரம்பியனவாக இருக்கின்றன.




எதுவும் நம்பும் வகையில் இல்லை. அதனால் அதனை விசாலமாக ஆய்ந்தாக வேண்டும்.

அஹ்மதாபாத் குண்டு வெடிப்புகளுக்குப் பின்னால், மும்பையின் குற்றப்பிரிவு தலைவர் ராகேஷ் மாரியா, பிரிந்திட முடியாத அளவில் ஐபி என்ற உளவுத்துறையின் முழுமையான கட்டுப் பாட்டில் இயங்கினார். அந்த முழு புலனாய்வையும் அவர் ஐபியின் விரல் அசைப்பிலேயே நடத்தினார்.

ஆகவே புதிதாக மும்பை குற்றப்பிரிவு கொண்டுவந்த கதை ஐபிக்குத் தெரியாது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. மாறாக அவர்கள் புதிதாகக் கொண்டுவந்த கதையை புனைந்ததே (ஐபி) என்ற மத்திய உளவுத்துறைதான்.

இது உண்மை என்றாகும் பட்சத்தில் எழும் வினா? ஐபி உளவுத்துறை ஏன் ஒரு புதுக்கதையைக் கொண்டுவந்திட வேண்டும்? இந்தப் புதுக்கதையால் முதலில் பதிவு செய்த வழக்கு கெட்டுப்போகும். சர்வேதேச அளவில் இந்தியாவின் நம்பகத்தன்மையும் கெடும். இதையெல்லாம் நன்றாகத் தெரிந்திருந்தும் ஐபி உளவுத்துறை ஏன் இந்தப் புதுக்கதையை புனைந்திட வேண்டும்.

ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருட் களை மும்பை குண்டு வெடிப்பில் பயன் படுத்திடவில்லை எனக் கூறிட வேண்டிய கட்டாயம் ஏன் வந்தது ஐபி என்ற மத்திய உளவுத் துறைக்கு? ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருள்கள் பயன்படுத்தப்பட்டிருக் கின்றன என்பது தெளிவானால் பல பிராமிணர்கள் கைது செய்யப்படலாம் என ஐபி அஞ்சியது. சில வேளைகளில் ஐபி என்ற மத்திய உளவுத் துறையே இதற்குத் துணை போயிருக்கலாம். இதனால் மும்பைக் குண்டுவெடிப்பில் மத்திய உளவுத்துறையும் சிக்கலாம் என்ற நிலை உருவானது. இதற்கான சாட்சியங்களும் கிடைக்கவே செய்தன.

மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புக்காவல் துறை மாலேகான் 2008 குண்டுவெடிப்புகளை ஆய்வு செய்தபோது பல உண்மைகள் வெளியே வந்தன. அவற்றுள் முக்கியமானது புரோகித் என்ற இராணுவ அதிகாரி இராணுவத்தில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருள்களை கடத்தி இருக் கின்றார். இராணுவத்திலிருந்து கடத்தப்பட்ட இந்த வெடிப்பொருள்களைப் பயன்படுத்தியே 2003க்குப் பின் நடந்த பல குண்டுவெடிப்புகள் அரங்கேற்றப்பட்டுள்ளன.

**F) புலனாய்வு புதிர்கள் – மாச்சர்யங்கள் ஐபி என்ற மத்திய உளவுத்துறையின் வழி!**

**இந்த இரண்டு புலனாய்வுகளிலும் பல புதிர்கள். காரணம் குற்றம் சாட்டப் பட்டவர்களுக்கு எதிராக எந்த சாட்சியங் களுமில்லை. மொத்த வழக்கும் ஜோடிக்கப் பட்டது.**

**தீவிரவாத எதிர்ப்புப் படையின் முதல் புலனாய்வு:**

1. புலனாய்வு முற்றிலும் தவறான ஒரு கோணத்திலிருந்தே தொடங்கப்பெற்றது. அதில் முஸ்லிம்களுக்கெதிரான மாச்சர் யங்களே முன்னணியில் நின்றன. அதுவும் நாட்டின் முக்கிய உளவுத் துறையாகிய (ஐபி) என்ற மத்திய உளவுத்துறையின் மனதை மருளச் செய்த மாச்சர்யங்கள். முதல் நாளிலேயே (SIMI) என்ற இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கமே குண்டுவெடிப்புகளுக்குக் காரணம் என்றார்கள் (Afternoon : Mumbai 12 July

2006) உடனேயே மும்பை காவல்துறையினர் லஷ்கரே தய்பா என்ற அமைப்பிற்கும் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்திற்கும் (SIMIக்கும்) தொடர்பிருப்பதாக அறிவித்தார்கள். (Midday : Mumbai 12 July 2006)

2. அதே நேரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்) செயற்குழு உறுப்பினர் (Polit Beareu Member) பிமன் போஸ் இந்தக் குண்டுவெடிப்புகள் இந்துத்துவ அடிப்படைவாதிகளின் கைவண்ணம் என்றார். அவர் செயற்குழு உறுப்பினர் மட்டுமல்ல, மேற்குவங்கத்தில் ஆட்சிசெய்துகொண்டிக்கும் இடது சாரி அரசின் அவைத் தலைவர். ஆனால் இந்த அறிக்கையை யாரும் கண்டுக் கொள்ளவில்லை. எப்படி இதைச் சொல்லுகின்றீர்கள் என்றும் கேட்கவில்லை (Rediff 15 July 2006.)

3. புலனாய்வில் பல முக்கிய விஷயங்களைக் கருத்தில் எடுத்துக் கொள்ள வில்லை.

அவை,

அ. அந்தக் குண்டு வெடிப்புகள் நிச்சயமாக குஜராத்தில் நடந்த இனப் படுகொலைகளுக்குப் பதிலாக அமைந்திட இயலாது. காரணம் குஜராத் இனப் படுகொலைகள் நடந்து நான்காண்டுகள் கடந்து விட்டன.

ஆ. ஒரு வாதத்திற்கு இதை ஏற்றுக் கொண்டால் கூட குண்டு வெடிப்புகள் இந்துக்களும் குஜராத்திக்களும் அதிகமாக வாழுமிடத்தில் தான் நடந்திருக்க வேண்டும் . அதாவது சர்ச்கேட் என்ற ரெயில் நிலையத்திலிருந்து தாதர் வரைக்கும் அல்லது பேயண்டர் முதல் விகார் வரைக்குமுள்ள ரெயில் நிலையங்களுள் ஒன்றில் நடத்திருக்க வேண்டும்.

இ. ஆனால் பெரும்பாலான குண்டு வெடிப்புகள் முஸ்லிம்கள் அதிகமாக வாழுமிடங்களில் அல்லது அவற்றிற்குப் பக்கத்தில் நடந்திருக்கின்றன. அவை மாஹிம் ரெயில் நிலையத்திலிருந்து மீரா ரோடு வரையுமுள்ள ரெயில் நிலையங்கள் வரை நடந்தன.

4. குண்டு வெடிப்புகள் தாதர் ரெயில் நிலையத்திற்கு பின்தான் நடக்க வேண்டும் என்ற அளவிலேயே ஏற்பாடு செய்திருந்தார்கள். தாதர் ரெயில் நிலையம் மராட்டிய பிராமிணர்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்குமிடம். அதே போல் அது ஆர்.எஸ்.எஸ் என்ற இந்துத்துவ தீவிரவாத அமைப்பு வலுவாக இருக்கும் இடம். அதேபோல் குண்டுகள் இரண்டு ரெயில் நிலையங்களில் நிற்காத விரைவு வண்டிகளிலேயே வைக்கப்பட்டிருந்தன. இந்த இரண்டு ரெயில் நிலையங்களும் விலே பார்லி Vile Parle மாலாட் malad என்பவையாகும்.

5. நந்தேத் குண்டுவெடிப்பில் மராட்டிய மாநிலம் சம்மந்தப்பட்ட ஆர்.எஸ்.எஸ் விஷ்வஹிந்து பரீஷத் பஜ்ரங்தள் போன்ற தீவிரவாத அமைப்புகளின் தொண்டர்கள் விசாரணைக்கு உட்படுத்தப் படவில்லை.

6. முஸ்லிம்களல்லாத நான்கு இளைஞர்கள் சில வெடிக்காத குண்டுகளை பயேன்டர் என்ற இடத்திற்கு பக்கத்தில் வைத்துக் கடலில் வீசினார்கள். அவர்களைப் பற்றிய விசாரணைகள் மேற் கொள்ளப் படவில்லை.

7. அவுரங்காபாத் என்னுமிடத்தில் வாழும் பெண் கல்லூரி ஆசிரியர், விரிவுரையாளர் மத்திய உள்துறை அமைச்சரை அழைத்து மும்பை ரெயில் குண்டுகளை வைத்தவர்களை எனக்குத் தெரியும்., அவனுடைய பெயர் கணேஷ்கந்தராவ். அவன் ஔரங்காபாத்தில் உள்ள ஆஷா நகர் பகுதியில் இருக்கின்றான் என்றும் கூறினார். ஆனால் தொலைபேசியில்

அவனுடையப் பெயரை பதிவு செய்தவர் தவறாகப் பதிவு செய்து விட்டார். அதனால் பிடிக்க முடியவில்லை எனக் காவல்துறையினர் கூறிவிட்டார்கள். அந்தப் பெண்மணி மீண்டும் அவுரங்காபாத் காவல்துறையை அழைத்துச் சரியான பெயரைக் கொடுத்தார். அத்தோடு அவனைப் பற்றிய அதிக விவரங்களைத் தந்து ஒரு கடிதத்தையும் எழுதினார். ஆனாலும் காவல் துறையினர் அவனை விசாரிக்கவில்லை. காவல் துறையினர் அவனுடைய சகோதரனையும், தந்தையையுமே விசாரித்தார்கள். விசாரணை முடிவில், அவன் குற்றவாளி அல்ல என்றும், அந்தக் கல்லூரி விரிவுரையாளரை அவன் மணந்து கொள்வேன் என வாக்களித்து மணந்து கொள்ளாததாலும் அவனை அவர் காட்டிக் கொடுத்தார் என முடித்து விட்டார்கள். சம்பந்தப்பட்டவனை விசாரிக்கவே இல்லை. (The Times of India, Pune 18, August 2006)

ஒரு வாதத்திற்காக அந்தக் கல்லூரி விரிவுரையாளர் காதல் தோல்வியால் உந்தப்பட்டிருக்கலாம் என எடுத்துக் கொண்டாலும், அவர் சொன்னது பொய்யாகத் தானிருக்க வேண்டும் என்றில்லை. அந்தப் பெண் ஒரு கல்லூரி விரிவுரையாளர். ஒரு முக்கியமான தீவிர தாக்குதலில் மத்திய அமைச்சருக்கும் உள்ளூர் காவல்துறைக்கும் தவறான தகவல்களைத் தருவதால் ஏற்படும் விளைவுகளை நன்றாக அறிவார். அடுத்து தொலைபேசி பதிவாளர் தவறான பெயரைப் பதிவு செய்து விட்டார் என்பதை அறிந்ததும், மீண்டும் சரியானப் பெயரைத் தந்தார். அத்தோடு ஒரு கடிதத்தையும் எழுதினார். இதனால் காவல்துறை ஒரு முழுமையான, ஆழமான விசாரணையை மேற்கொண்டிருக்க வேண்டும். அவர்கள் கடிதத்தில் கூறப்பட்ட கணேஷ் கண்தராவ் என்பவர் எங்கே இருக்கின்றார் என்பதைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். அவனைப் பற்றி அந்தப் பெண் சொன்னதெல்லாம் தீர விசாரித்திருக்க வேண்டும். பின்னர் அந்தப் பெண் விரிவுரையாளரோடு அவனை நேருக்கு நேர் வைத்து விசாரித்திருக்க வேண்டும். ஆனால் காவல்துறை எதையுமே செய்யவில்லை.

ஆனால், இதற்கு முற்றிலும் மாறாக, ஹைதராபாத் மக்கா பள்ளிவாசலில் நடந்த குண்டு வெடிப்பில், இதே போல் ஒரு புகாரை ஒரு முஸ்லிமின் இரண்டாவது மனைவி கொடுத்தார். காவல்துறையினர் உடனேயே அந்த முஸ்லிமின் வீட்டை சோதனை இட்டார்கள். அவருடைய வீட்டிலிருந்து நாட்டுத்துப்பாக்கி ஒன்றைக் கண்டெடுத்தார்கள். அவரை வெடிபொருள்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள். சிறையிலடைத்தார்கள். தனக்கு அதில் சம்மந்தமில்லை என்பதை நிரூபித்து வெளியே வந்து விட்டார். (THE TIMES OF INDIA: PUNE: 28 MAY 2007) இது காவல்துறையினர் எந்த அளவுக்கு மாச்சரீயமான போக்குடையவர்கள் என்பதை எடுத்துக் காட்டும்.

8. மும்பை ரெயில் குண்டு வெடிப்புகளின் கண்டுபிடிப்புகள் மராட்டிய மாநில பிராமணர்களின் பக்கம் திரும்பிற்று. அத்தோடு சங்கப்பரிவாரமும் அதில் சிக்கிக் கொள்ளும் நிலை வந்தது. உடனேயே IB என்ற மத்திய உளவுத்துறை களத்தில் குதித்தது. ISI-என்ற பாகிஸ்தான் உளவுத்துறை சம்மந்தப் பட்டிருப்பதாக அறிவித்தது. வழக்கில் எல்லா விசாரணைகளும் முடிந்ததாக அறிவித்தது. ஆனால் பாகிஸ்தான் உளவுத்துறைக்கு எதிராக எந்தத் தடயமும் அதனிடமில்லை.

9. ஏ.டி.எஸ். (ATS) ANTI TERRORISM SQUAD: என்ற தீவிரவாத எதிர்ப்புப்

படையினர் தாம் இதில் குற்றப் பத்திரிக்கையை தாக்கல் செய்தார்கள். அது தன் குற்றப்பத்திரிகையை மிகவும் நீட்டி முழக்கி இருந்தது. அவர்கள் செய்த குற்றங்களாக தீவிரவாத செயல்களுக் கான முழுப் பயிற்சி எடுப்பதற்காக பயணம் செய்தது, சதி செய்தது, பணம் வசூல் செய்தது, வெடிபொருள்களுக்கு ஏற்பாடு செய்தது, குண்டுகளைத் தயார் செய்தது, அவற்றை ரெயில் நிலையங் களுக்கு எடுத்துச் சென்றது, ரெயில்களில் வைத்தது போன்றவற்றை கூறியது. இந்தக் குற்றப் பத்திரிக்கையில் ஒரே ஒரு பிரச்னை தான் இருந்தது. அது, அத்தனை குற்றங்களுக்கும் ஒரே சாட்சியம் கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் தந்த ஒப்புதல் வாக்கு மூலமே!

10. இவர்களால் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் காவல்துறையினரை விசாரணை யின் போது, டாஹிஸர் என்ற ரெயில் நிலையத்திற்குப் பக்கம் வரை அழைத்துச் சென்றாராம். அப்போது மும்பை குண்டு வெடிப்புகள் நடந்து மூன்று மாதங்கள் ஆகி இருந்தன. ஆனால் - மூன்று மாதங்கள் கழிந்த பின்பும், அங்கே சில வெடிபொருள்கள் கிடந்தனவாம். என்னே புருடா?

11. பல சாட்சியங்களைக் காவல்துறையினர் வரிசைப்படுத்தினர். ஆனால் அவர்கள் யார்? யார்? என்பதைச் சொல்லிட மறுத்து விட்டனர்.

12. சுக்கு நூறாய் சிதறிப்போன பாகிஸ்தான் உளவாளி ஒருவன் எனக் காவல் துறையினரால் கூறப்பட்ட ஒருவனின் முகத்தை குற்றம் சுமத்தப்பட்ட ஒருவன் அடையாளம் காட்டினானாம். இப்படியொரு கதையைச் சொன்னார் மும்பைக் காவல்துறை ஆணையர். எப்படி மண்டை ஓடுகளை மட்டுமே கொண்டு தீவிரவாதிகளை அடையாளம் காணுகின்றார். நேருக்கு நேர் நின்று அவர்களைப் புகைப்படம் எடுத்திருந் தால் கூட, இது முடியாது.

13. குற்றம் சாட்டப்பட்டவர்களை கண்ணால் கண்ட சாட்சியங்கள் உண்டா இல்லையா? என்பது தெரியவில்லை. ஆனால், அவர்கள் கண்டதாகச் சொல்லப்பட்டவற்றைக் கொண்டு அவர்களின் வரைபடங்களைத் தயார் செய்து, பிரசுரித்தும் விட்டார்கள்.

### 6. மும்பை கிரைம் பிராஞ்சு - குற்றப்பிரிவின் இரண்டாம் புலனாய்வு

1. இரண்டாவது கோட்பாட்டின் அடிப்படையே பித்தலாட்டமானது. நம்பிட இயலாதது. ஒரு குற்றத்தில் திணிக்கப்பட்ட குற்றவாளிகள், தாங்களாகவே முன் வந்து இன்னொரு குற்றத்தை ஒப்புக் கொள்வார்கள் என்பது நம்ப முடியாத ஒன்று. அதிலும் குண்டு வெடித்த வழக்கில் தங்களை இணைத்துக் கொண்டு, காவல் துறையினரிடம் அனைத்தையும் சொல்வார்கள் என்பது நம்பிட முடியாத ஒன்று.

2. ATS என்ற தீவிரவாத தடுப்புப் படையினர் கைது செய்த 13 பேர், தந்த வாக்குமூலத்திற்கும், மும்பை கிரைம் பிராஞ்ச் கைது செய்த மூன்று பேர் தந்த வாக்கு மூலத்திற்குமிடையே எந்த ஒற்றுமையுமில்லை. அவை முற்றாக மாறுபடுகின்றன. இந்நிலையில் தீவிரவாத தடுப்புப் படையினர் கைது செய்த வர்கள், மற்றவர்களுடைய இரகசிய உதவியாளர்களாக இருந்தார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளவியலாது.

   அதே போல், கிரைம் பிராஞ்சுகாரர்கள் கைது செய்தவர்கள், தீவிரவாத தடுப்புப் படையினர் கைது செய்தவர்களுக்கு இரகசிய உதவியாளர்களாக இருந்தார் கள் என்பதோ நம்ப முடியாதவை.

3. குண்டு வெடிப்புகளில் RDX ஆர்டிஎக்ஸ் வகை வெடிபொருள்களைப் பயன்படுத் தினார்கள் என்பதை அறுதியிட்டுச் சொன்னவர்கள் தடயவியல் நிபுணர்கள்.

அவர்கள் “RDX” வகை வெடி பொருள் களை உபயோகப்படுத்த வில்லை என்பதைக் கூறுவது, கிரைம் பிராஞ்சால் கைது செய்யப் பட்டவர்களில் ஒருவர். இதை வைத்துக் கொண்டு, ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருள்கள் பயன்படுத்தப் படவில்லை எனக் கூறிட இயலாது.

4. இந்த மொத்தப் பிரச்சனையும் 17 பெப்ரவரி 2009 இல் ஒரு பெரும் குழப்பத்திற்கு ஆளானது. அன்று தான், அன்று தான் மும்பை (கிரைம் பிராஞ்சு) குற்றப்பிரிவு, இந்தியன் முஜாஹிதீன் என்ற புதிய அமைப்பின் மீது அதனைச் சார்ந்த ஐந்து பேரின் மீது, குற்றப்பத்திரிக்கை ஒன்றை தாக்கல் செய்தது. இவர்கள் தீவிரவாதிகள் என்றும், இவர்கள் அக்டோபர் 2008இல் கைது செய்யப் பட்டவர்கள் என்றும் கூறியது குற்றப் பத்திரிக்கை. இந்தக் குற்றப்பத்திரிக்கை உண்மையாக இருக்க முடியாது, ஏனெனில்:-

(i). இந்தக் குற்றப்பத்திரிக்கை முதலில் இந்த ஐந்து பேர் மும்பை குண்டு வெடிப்பு களுக்கு, முதுகெலும்பாக இருந்தார்கள் எனக் கூறியது. இப்போது அக்டோபர் 2008-இல் தாக்கல் செய்த, குற்றப் பத்திரிக்கையில், இது பற்றி “அவர்கள் முதுகெலும்பாக இருந்தார்கள்” என்பது பற்றி எதுவும் சொல்லிடவில்லை.

இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பைப் பொறுத்தவரை அது பற்றி பெரிதாக ஒன்றும் குற்றப்பத்திரிக்கையில் இல்லை. குற்றப்பத்திரிக்கையில் இருப்ப தெல்லாம், இந்தியன் முஜாஹித்தீன் என்ற அமைப்பு அனுப்பிய மின்னஞ்சல் பற்றி மட்டுமே!

இந்தியன் முஜாஹிதீன்கள் பற்றி இதற்கு மேல் சொல்லிடுவதற்கு எதுவுமில்லை, காரணம் எங்களுக்கு-அதாவது- மராட்டிய தீவிரவாத தடுப்புப் படைக்கு, அதிகார பூர்வமான தகவல் “Official Communication” எதுவும் வரவில்லை. இதனால் ஒரு துணை குற்ற பத்திரிக்கையைக் கூட எங்களால் பதிவு செய்ய இயலாது எனக் கூறி விட்டார்கள். (THE INDIAN EXPRESS, PUNE: 17, FEBRUARY, 2009)

(ii) குற்றப்பத்திரிக்கை, இந்தியன் முஜாஹிதீன்கள் 2005 முதலே நடந்த குண்டு வெடிப்புகளுடன் தொடர் புடையவர்கள் எனக் கூறுகின்றது. மொட்டையன் குட்டையில் வீழ்ந்தான் என்பது போன்ற இந்த ஒருவரிக்குப் பின் குற்றப்பத்திரிகையின் வேறு எந்தப் பகுதியிலும், இந்தியன் முஜாஹிதீன் களையும் குண்டு வெடிப்புகளையும் சம்மந்தப்படுத்தும் செய்தி எதுவுமில்லை. இனி 2005க்குப் பின் மும்பையில் எத்தனை குண்டு வெடிப்புகள் நடந்தன, அதில் இந்தியன் முஜாஹித்களுக்கு என்ன தொடர்பு என்பதையெல்லாம் ஆராய்ந்தால் 2005க்குப் பின் மும்பையில் இரண்டு குண்டுவெடிப்புகளே நிகழ்ந் துள்ளன. அவை (அ) 2006 ஜூலையில் நடந்த மும்பை ரெயில் பெட்டிக் குண்டு வெடிப்பு (அதைப் பற்றியது தான் இந்த ஆய்வு) இதில் தீவிரவாத தடுப்புப்படை, இந்திய முஜாஹித்களுக்கும் குண்டுகளை வைத்ததற்கும் எந்த சம்மந்தமும் இல்லை எனக் கூறிவிட்டது. (email இ.மெயில் அளவோடு விட்டு விட்டது) (ஆ) அடுத்து 26.11.2008 என்ற மும்பைத் தாக்குதல்கள், இதில் ஆய்வுகள் நடந்துக் கொண்டிருக் கின்றன.

iii) குற்றப்பத்திரிகை, அஹ்மதாபாத் - டெல்லி குண்டு வெடிப்புகளில் (2008) இந்தியன் முஜாஹிதீன்கள் என்ற ‘IM’ பாதுகாப்பற்ற வயர்லெஸ் இணைப்பு களை (WIFI) பயன்படுத்தி மின்னஞ்சல் களை அனுப்பியுள்ளது. இவை இந்தக் குண்டு வெடிப்புகள் நடப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னால் அனுப்பப் பட்டவை என்று கூறுகிறது. (THE TIMES OF INDIA, PUNE, 18, FEBRUARY 2009)

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்புக்கு : 8148129887

5. மும்பை குற்றப்பிரிவுக்கும், தீவிரவாதத் தடுப்புப் படைக்கும் இடையே நடந்த தகவல் பரிமாற்றக் குளறுபடிகள், மும்பை ரெயில்பெட்டி குண்டு வெடிப்பு விசாரணையின் நம்பகத்தன்மையை இன்னும் சீரழித்து விட்டது. இதில் இவர்களுடைய சர்க்கஸ் எஜமானர் 'IB' என்ற மத்திய உளவுத்துறை ஏன் இவர்களை அடிக்கடி இப்படியெல்லாம் "பல்டி" அடிக்க வைக்கின்றது என்பது புரியவில்லை. இதனால் இந்த இரண்டு காவல்துறை பிரிவுகளுமே (க்ரைம் பிராஞ்சு, என்ற குற்றப்பிரிவு, தீவிரவாத தடுப்புப்படை) கேலிக்குரியனவாக மாறி விட்டன. இதற்கு இந்த இரண்டு அமைப்புகளுமே காரணம். பின்வரும் இரண்டு மட்டுமே இதற்கு காரணமாக அமைந்திட இயலும்.

1. இந்தத் தாக்குதலோடு சம்மந்தப்பட்ட பிராமணர்களைக் காப்பாற்றுவது. இதற்கு ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருள்கள் பயன்படுத்தப் படவில்லை என்றொரு பொய்/பல்டி. இதில் வேறு ஹேமந்த் கர்கரே மாலேகான் 2008 குண்டு வெடிப்புகளை ஆய்வு செய்யும் போது பிராமண சக்திகளுக்கும் மும்பை குண்டு வெடிப்புகளுக்கும் தொடர்பிருப் பதை கண்டு பிடித்து விட்டார்.

2. கென் ஹேவூட் என்ற அமெரிக்கனை காப்பாற்றுவது. காரணம், இவரது கம்ப்யூட்டரில் இருந்து தான் இந்தியன் முஜாஹிதீன் பெயரில் ஈமெயில்கள் என்ற மின்னஞ்சல்கள் பறந்தன. (அவனுக்கும் மும்பைக் குண்டு வெடிப்புக்கும் உள்ள தொடர்பிலிருந்து அவனைக் காப்பாற்றிட வேண்டும்.)

இந்திய பிராமிணர்களையும், அமெரிக்க... ஹேவுட்களையும் காப்பாற்றிடு வதில் IB என்ற இந்திய உளவுத்துறை இந்தியாவை உலக அரங்கில் மிகவும் தாழ் வாகக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

ஆகவே இந்த மொத்தப் பிரச்னையும் மிகவும் சிக்கலானது. பிராமண சதிகாரர்கள், உளவுத்துறை இவற்றின் சூழ்ச்சி மிகப் பெரியது. உண்மையைச் சொன்னால் மும்பைக் குண்டு வெடிப்புகளைப் பற்றிய இரண்டு புலனாய்வுகளையுமே IB என்ற உளவுத்துறை தான் நடத்தியது.

இந்தக் குழப்பத்தில், இரண்டு விஷயங்களுக்கு நாம் விடை கண்டாக வேண்டும்.

1. IB என்ற மத்திய உளவுத்துறை ஏன் ஓர் தலைகீழ் பல்டி அடித்தது (மும்பை குண்டுவெடிப்பு விவகாரத்தில்)

2. உண்மையான குற்றவாளிகள் யார்?

இந்த இரண்டாவது கேள்விக்கான பதில் கிடைக்க IB என்ற உளவுத்துறை இல்லாத ஒரு தனி குழுமம் அதை ஆய்வு செய்திட வேண்டும்.

**பின்னால் நிகழ்ந்த சில நிகழ்வுகள்**

இப்போது, IB என்ற மத்திய உளவுத்துறை தனக்குத் தானே பின்னிக் கொண்ட வலையிலிருந்து எப்படி வெளியே வந்திடும், என்பதை விளக்கிடுவது கடினம்.

ஆனால் அதற்குப் பின்னால் பத்திரிகைகளில் வந்த சில நிகழ்வுகள் மிகவும் முக்கியமானவை.

1. மராட்டிய மாநில முதலமைச்சர், துணை முதலமைச்சர், காவல் துறை ஆணையர், இவர்கள் தந்த அழுத்தங்களால் தீவிரவாத எதிர்ப்புப் படையின், துணை ஆணையர் சுப்போத் ஜேசுவால் தனக்கு கீழ் இருந்த அதிகாரிகளிடம் சில பொய்யான குற்றவாளிகளை கைது செய்திட பணித்தார். இதனால் பல அதிகாரிகள் (தீவிரவாத எதிர்ப்புப் படையைச் சார்ந்த அதிகாரிகள்) தங்களை அந்தப் படையிலிருந்து விடுவித்து - மாற்றல் வாங்கிக் கொண்டு சென்று விட்டார்கள். மிகவும் நேர்மையான வினோத் பாட் என்ற

அதிகாரி தனக்குத் தந்த மன அழுத்தங்களை தாழாமல் தற்கொலை செய்து கொண்டார். (ஆதாரம். மராத்தி மொழியில் வெளிவரும் ஷோதான் மும்பை 21-27 நவம்பர் 2008, இது ஷிவசேனா என்ற இந்துத்துவ தீவிரவாதிகளால் நடத்தப்படும் சாம்னா என்ற பத்திரிக்கை செய்தியை மேற்கொள் காட்டி இருந்தது.)


2. மாநில தீவிரவாத தடுப்புப்படை 18.2.2009இல் முஹம்மத் சாதிக் இஸ்ரார் அஹ்மத் ஷேக் என்ற இந்திய முஜாஹிதீன் அமைப்பைச் சார்ந்தவரை போலீஸ் காவலுக்குத் தந்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப் போகின்றேன், என அறிக்கை விட்டார். அதன் மூலம் மும்பை குண்டு வெடிப்புகளுக்கும் அவர்களுக்கும் தொடர்புகள் உண்டா என்பதைத் தெரிந்திடப் போகின்றேன் என்றார்.

3. இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பைச் சார்ந்தவர்களாகக் கருதப்படும், சாதிக் ஷேக்-இன் மும்பை குண்டு வெடிப்பு(7/11) பற்றிய ஒப்புதல் வாக்கு மூலம் மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப் படைக்கு ஓர் அதிரடியாக அமைந்தது. காரணம், இரண்டாண்டுகளுக்கு முன் மராட்டிய தீவிரவாத தடுப்புப்படை 13 பேர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருந்தது. ஆனால் சாதிக்-ஐயும் இதர இந்திய முஜாஹிதீன்களையும் அதில் சதிகாரர்களாக சேர்க்கவில்லை.

27 பெப்ரவரி 2009இல் சில தொலைக்காட்சி ஒளி வரிசைகள் சாதிக் ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் கொடுப்பதாகக் காட்டின. அதில் அவன் தானும் தன்னை சார்ந்தவர்களுந்தான், பிரஷர் குக்கர்களை வாங்கினோம். அவற்றில் குண்டுகளை வைத்தோம். அவற்றை ரெயிலில் வைத்தோம் எனக் கூறினான். இப்போது ATS என்ற தீவிரவாத தடுப்புப்படை ஒரு இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக் கொண்டது. அது இப்போது சாதிக், புலனாய்வை திசை திருப்பிட சதி செய்கின்றான் எனக் கூறிற்று. (TIMES OF INDIA 28.2.2009)

4. மராட்டிய தீவிரவாத தடுப்புப்படை இந்தியன் முஜாஹிதின்களின் இணை தாளாளர் என கருதப்படும் சாதிக் ஷேக் என்பவனை 7.11.2006 மும்பைக் குண்டு வெடிப்பிலிருந்து விடுவிக்க உள்ளது. காரணம் எந்த ஆதாரமும் கிடைக்க வில்லை. இதனால் மராட்டிய மாநில கிரைம் பிராஞ்சு மானமிழந்து நிற்கின்றது. (TIMES OF INDIA, PUNE, 17, MARCH, 2009)

இந்தத் தகவல்களிலிருந்து கிடைக்கும் படிப்பினை இரண்டு பொய்கள் ஓர் உண்மை ஆகிடா.



வெளிவந்துவிட்டது

**இஸ்லாமும் பெண்களும்**

**விலை ரூபாய் 70.00**

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001.

தொடர்புக்கு : 8148129887

# இந்தியன் முஜாஹிதீன் என்ற பெயரில் ஈமெயில் அனுப்பிய கென் ஹேவுட்

# தப்பவிட்ட சி.ஐ.ஏ. உளவாளி கென்னத் ஹேவுட்

**தீவிரவாத அமைப்புகள் என்று அழைக்கப் பட்டவர்களிடமிருந்து பெறப்பட்ட இமெயில்கள்**

(1) குண்டு வெடிப்பிற்கு ஐந்து நிமிடத்திற்கு முன்னால் இந்திய டிவி அலுவலகத்திற்கு இந்தியன் முஜாஹிதீன் என்ற பெயரில் ஓர் இமெயில் பெறப்பட்டது. அதில் குண்டு வெடிப்பிற்கு தாங்கள் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும், பாதுகாப்புப் படைகளைக் கேலியடித்தும் எழுதப்பட்டிருந்தது. இது சென்ற வருடம் மே 13 அன்று நடந்த ஜெய்ப்பூர் மற்றும் நவம்பர் 23 அன்று நடந்த உ.பி. நீதிமன்ற குண்டு வெடிப்புகளை ஒத்து இருக்கிறது. (சண்டே டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, புதாரி, 27 ஜூலை 2008)

(2) (அதே இரவில்) எல்.இ.டி மற்றும் ஹூஜி அமைப்புகள் குண்டு வெடிப்பிற்கு பொறுப்பேற்றுக் கொண்டன. (புதாரி, புனே, 27 ஜூலை 2008)

(3) விரைவில் டெல்லியிலும் குண்டு வெடிப்புகள் நிகழும் என்ற இ-மெயில் ஒன்றை தனியார் தொலைக்காட்சி நிறுவனம் பெற்றது. (புதாரி, புனே, 28 ஜூலை 2008)

19 செப்டம்பர் 2008 அன்று டெல்லி காவல்துறை பாட்லா ஹவுஸ் என்ற இடத்தில் குண்டு வெடிப்பில் தொடர்புடையவன் என்று சந்தேகப் படும் இரண்டு பேரை என்கவுண்டரில் சுட்டுத் தள்ளியது. மேலும் தப்ப முயன்ற இருவரை கைது செய்தது. என் கவுண்டரில் டெல்லி காவல் துறையின் சிறப்பு பிரிவில் பணிபுரியும் ஆய்வாளர் மோகன்சந்த் சர்மா குண்டு காயங்களுடன் இறந்தார். சுட்டுக் கொல்லப் பட்ட இருவரில் ஒருவர் ஆதிப். இவர் முக்கிய குற்றவாளி என கருதப்படும் அப்துஸ் சுபான் குரைசி என்கிற தகீர் என்பவனுக்கு நெருங்கிய உதவியாளர் என்றும் கூறப்படுகிறது. கைது செய்யப்பட்ட நபர் ஷைஃப் என்று சொல்லப்படுகிறது. அஹமதாபாத் காவல் துறையால் கைது செய்யப்பட்ட முப்தி அபுல் பசர் என்பவரின் உத்தரவின் படியே இது நடந்துள்ளது.

ஜியாவுர் ரஹ்மான், சகிர் நிசார், முஹம்மது ஜாகிர் என்ற மூன்று நபர்களை ஜாமியா நகரில் வைத்து டெல்லி காவல்துறை செப்டம்பர் 21, 2008 அன்று குண்டு வெடிப்போடு சந்தேகிக்கப்படுபவர்கள் என கைது செய்தது. கைது செய்யப்பட்ட மூவரும் இந்தியன் முஜாஹிதீனை சார்ந்தவர்கள். குறைந்தது 20 குண்டுகளை வெடிக்க செய்தவற்கு திட்டமிட்டுள்ளனர். என்கவுண்டரில் கொலை செய்யப்பட்ட ஆதிப்-உடன் இவர்கள் நான்கு வருடங்களாக இணைந்து செயலாற்றி யுள்ளான். (தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே மற்றும் புனே, 20 செப்டம்பர் 2008)

(4) இந்தியன் முஜாஹிதீனை சார்ந்த ஐந்து நபர்களை மும்பையிலும், அதைச் சுற்றியுள்ள வெவ்வேறு பகுதிகளிலும் கைது செய்துள்ளதாக 24 செப்டம்பர் 2008 அன்று அறிவிப்பு செய்தது. அவர்கள் முறையே முஹம்மது சாதிக், அப்சல் உஸ்மான், முஹம்மது ஆரிப்

*ஷேக், முஹம்மது ஜாகிர் ஷேக், ஷேக் முஹம்மது அன்சர். நவி மும்பையில் இருந்து நான்கு கார்களையும் கடத்தியது இவர்கள்தான். அதில் இரண்டு கார்கள் ஜூலையில் நடந்த அகமதாபாத் குண்டு வெடிப்பில் பயன்படுத்தப் பட்டுள்ளன. மற்ற இரண்டும் சூரட்டில் பயன்படுத்தப் பட்டுள்ளன.*

*முஹம்மது சாதிக் ஷேக் என்பவர் இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பை நிறுவியர்களுள் ஒருவர். டெல்லியில் பாட்லா ஹவுஸில் சுட்டுக் கொல்லப்பட்ட ஆதிப் இவரின் கட்டுப் பாட்டின் கீழ்தான் இருந்துள்ளான். இவர்களும் ஐவரும் ஜூலை 2006-ல் மும்பை ரெயில் குண்டு வைத்ததை ஒத்துக் கொண்டனர்.*

*உத்திரபிரதேசத்தில் ஆசம்கார் என்ற இடத்தில் வைத்து தான் ஐந்து பேரும் கைது செய்யப் பட்டுள்ளனர். சாதிக் இக்கும்பலின் தலைவன். இவன் ஓர் எலக்ட்ரானிக் நிறுவனத்தில் புரோ கிராம் இன்ஜினியராக பணியாற்றியவன். ஆனால் இவர்களில் சாப்ட்வேர் இன்ஜினியரான அன்சர் என்பவர்தான் அதிக திறமை கொண்டவன். ஆனால் இந்தியன் முஜாஹிதீனின் செயல் வீரரான ரோஷன் கான் என்கிற ரியாஸ் பட்கல்தான் இ.மெயில் அனுப்பியதற் கான முழு திட்டத்தையும் கொடுத்தவர் என மும்பை குற்றப்பிரிவின் இணை ஆய்வாளர் ராகேஷ் மரியா 26 செப்டம்பர் அன்று கூறினார். காவல் துறையின் கூற்றுப்படி இந்த அமைப்பிற்கு பக்கபலமாக இருப்பது ஹூஜியும், லஷ்கரே-தய்பாவும் தான். (தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, 25 ஆகஸ்டு 2008; சாகல், புனே, 27 ஆகஸ்டு 2008)*

(5) *அஹமதாபாத் மற்றும் ஹைதராபாத்தில் குண்டு வைத்தவர்களையும், சூரத்தில் குண்டு வைத்தவர்களையும் கைது செய்துவிட்டதாக மும்பை காவல்துறை 6 அக்டோபர் 2008 அன்று கூறியது. புனே, மங்களூர், மும்பையை சார்ந்த சந்தேகத்திற்குரிய 11 இந்தியன் முஜாஹிதீன் நபர்களை கைது செய்ததாகவும் அவர்களில் மூவர் நாட்டையே உலுக்கிய இ.மெயிலை அனுப்பியவர்கள் என காவல்துறை அறிவித்தது. கைது செய்யப்பட்ட மூவரும் சமுதாயத்தில் நல்ல மதிப்புள்ள மற்றும் படிப்பறிவு கொண்ட குடும்பத்தைச் சார்ந்தவர்கள்.*

*இவர்களுள் புனேயை இருப்பிட மாகக் கொண்ட முஹம்மத் மன்சூர் பீர்பாய் என்பவன்தான் மும்பையின் மூன்று இடங்களுக்கு அனுப்பப்பட்ட இமெயில் படிவத்தை தயாரித்தவன். இவன் யாகூ* (Yahoo) *நிறுவனத்தில் தலைமை சாப்ட்வேர் இன்ஜினியராக பணிபுரிந்தவன். மற்ற இருவர்கள் முறையே முபின் ஷேக், இவர் ஐ.டி. நிறுவனத்தில் மூத்த தொழில்நுட்ப ஆலோசகர், ஆசிப் பசிர் ஷேக் என்கிற மெஹமூத் மெக்கானிக்கல் இன்ஜினியர். இருவரும் புனேயைச் சார்ந்தவர்கள்.*

*செப்டம்பர் 23-ல் கைது செய்யப்பட்ட இந்தியன் முஜாஹிதீனை சார்ந்த ஐந்து நபர்களை விசாரித்ததில் மேற்சொன்ன 11 பேர் பற்றிய தகவல்கள் கிடைத்தன என மும்பை குற்றப்பிரிவு காவல்துறையின் இணை ஆய்வாளர் ராகேஷ் மரியா கூறினார். இரண்டு துப்பாக்கி, 45 குண்டுகள், குண்டு துளைக்காத கவசம், 6 மடிக்கணினி, தகவல் தொடர்பு சாதனம் மற்றும் ரூ.11,50,000 ஆகியவை. இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. (தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே மற்றும் சாகல், புனே 7 அக்டோபர் 2008)*

**(F) கென் ஹேவுட்டின் திடீர் பயணம்**

(1) *விசாரணை நடந்து கொண்டிக்கும் போதே, 18 ஆகஸ்ட் 2008 அன்று திங்கள் அதிகாலை டெல்லி ஏர்போர்ட்டில் இருந்து அமெரிக்காவிற்கு கென்*

ஹேவுட் திடீரென புறப்பட்டு சென்றார். விசாரணை முடியும் வரை நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என அவரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டதாக மும்பை தீவிரவாத எதிர்ப்புப் படையின் தலைவர் ஹேமந்த் கர்கரே கூறினார். திங்கள் கிழமை விசாரணைக்கு வருவதாகக் கூறிவிட்டு அன்றே கிளம்பி விட்டார் என அவர் கூறினார். கென் ஹேவுட்டை கவனிக்காமல் விட்டதில் டெல்லி ஏர்போர்ட்டில் தவறு நடந்துள்ளதாக தெரிகிறது. அவரை கண்காணிக்கும்படி அறிவிப்பை ஏற்கனவே இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தின் இமிக்ரேஷன் பிரிவிற்கு அனுப்பி விட்டதாகவும், வெளிநாட்டு வட்டார பதிவு அலுவலகத்திற்கும் இதை தெரியப் படுத்திவிட்டதாகவும் மும்பை காவல் துறை கூறியது. இதைப் பார்க்கும்போது இந்திய அரசாங்கம் அவரை நாட்டை விட்டு அனுப்பி விட்டதா என யூகங்கள் எழ வழிவகுக்கின்றன. (தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே மற்றும் சாகல், புனே 19 ஆகஸ்டு 2008)

(2) **கென்னட் ஹேவுட் தப்ப விடப்படுகிறார்:** உண்மை கண்டறியும் சோதனையிலும், மூளை சோதனையிலும் குற்றம் செய்ததாக நிரூபணம் ஆகாததால் கென்னட் ஹேவுட்டை கவனிக்கும்படி அனுப்பிய அறிவிப்பை ரத்து செய்ய தீவிரவாத எதிர்ப்பு படை முடிவு செய்துள்ளது. (டெய்லி சாகல், புனே, 21 ஆகஸ்டு 2008)

(3) ஹேவுட் தகவல் தொடர்பு துறையில் வல்லுநர் என்பதைவிட அவர் ஒரு சிறந்த போதகர் என்று உளவு நிறுவனங்கள் கூறின.

(4) அவர் தப்பி சென்றதற்கு காரணம் தீவிரவாத தடுப்பு படை தன் மேல் நடத்தவிருந்த நார்கோ சோதனையில் இருந்து தப்பிப்பதற்காகத்தான் நாடு கடந்துள்ளார் என்ற பொதுவான கருத்துகளை ஊடகங்கள் கூறி வருகின்றன. (தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, 12 செப்டம்பர் 2008)

(5) கிட்டத்தட்ட ஒரு மாதத்தை தன்னுடைய சொந்த நகரமான அரிசோனாவில் கழித்த பிறகு ஹேவுட் புதன்கிழமை நடு இரவில் மும்பையில் (11 செப்டம்பர் 2008) இறங்கினார்.

கென் ஹேவுட்டின் கணிணியிலிருந்து அனுப்பப் பட்ட மிரட்டல் மின்னஞ்சலை பற்றி ஃபோரன்சிக் சயன்ஸ் லேபாரட்டரி-கலினா (Forensic Science Laboratory - Kalina) புர்தூ யுனிவர்சிடி ஃசைபர் ஃபோரன்சிக் லேபிடம் கருத்து கேட்டு இருந்தது. மேலும் இந்த மின்னஞ்சல் விஷயத்தை கவனிப்பதற்காகவே குஜராத் குற்றப்பிரிவை சேர்ந்த ஒரு குழு மும்பைக்கு வந்து இருந்தது. புர்தூ யுனிவர்சிடி என்ன கருத்தை கூறியது? குஜராத் குற்றப்பிரிவு குழுவினர் என்னென்னவற்றை கண்டுபிடித்தனர்?

10. மிகவும் திகைப்பூட்டும் விஷயம் என்னவென்றால் கென் ஹேவுட் இந்தியாவை விட்டு சென்றதும், அவ்வாறு தப்பி ஓடிச் செல்ல இருந்த ஒருவனுக்கு மும்பை காவல் துறையினரும் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையும் நற்சான்றிதழ் கொடுக்க எடுத்து கொண்ட விரைவும் ஆர்வமும். இதன் தொடர்பாக மிக அதிகமான கேள்விகள் எழுகின்றன:-

(a) இத்தகைய ஒரு மிக முக்கியமான வழக்கில் கென் ஹேவுட்டின் பங்கு பற்றி சந்தேகிக்கப்பட்ட வேளையில் ஏன் மும்பை காவல்துறையினர் அவன் மீது கண்காணிப்பை தீவிரப்படுத்தவில்லை?

(b) ஒரு நபருக்கு எதிராக கண்காணிப்பு சீட்டு கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில் நாடு விட்டு நாடு செல்ல அனுமதிக்கும்

அதிகாரத்தை கொண்டவர்களிடம் இரகசிய உடன்பாடில்லாமல் அந்நபர் நாட்டை விட்டு செல்ல இயலுமா? இந்தியாவை பொறுத்தவரை அந்த அதிகாரத்தை கையில் வைத்திருப்பது ஐபி என்ற மத்திய உளவுத்துறை.

(c) கென் (ஹேவுட்டுக்கு எதிரான விசாரணை முடிவடையாத நிலையில் அவனுடைய திடீரென்ற விமான பயணத்திற்கு இரண்டு நாட்களுக்குள் நற்சான்று வழங்க மும்பை தீவிரவாத தடுப்பு படைக்கு என்ன அவசரம்? காவல்துறையினரோ அவனுடைய கணினியிலிருந்து அனுப்பப்பட்ட மின்னஞ்சல் அவனுக்கு தெரியாமல் வேறு யாராவது திருடி அனுப்பினார்களா (Hacked) அல்லது அவனே தான் அந்த மின்னஞ்சலை அனுப்பினானா என்ற தீர்க்கமான முடிவிற்கு இன்னும் வராத போது, இவ்வளவு முக்கியமான மிகத் தீவிரமான பிரச்சனையில் அவனுக்கு எதிரான விசாரணை நடந்து கொண்டிருந்த போது அவன் நாடு விட்டு சென்றது மிகவும் சந்தேகத்திற்குரியது; அல்லது பன்னாட்டு உறவு என்ற போர்வையில் ஐ.பி என்ற மத்திய உளவுத் துறை நிர்ப்பந்தித்து இவ்வாறு செய்ய வைத்தார்களா?

(d) கென்ஹேவுட் இந்தியாவிற்கு திரும்பிய ஒரு மாதத்திற்கு பிறகு அவன் ஒரு தகவல் தொழில் நுட்ப (IT Trainer) பயிற்சியாளராக இருந்தும் அவனை கம்ப்யூட்டர் வல்லுனன் என்று சொல்வதை விட ஒரு ஒரு போதகன் என்று சொல்வது தான் சரியானது என வேகவேகமாக ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை ஏன் அறிவிக்க வேண்டும்? ஹேவுட்டின் வழக்கில் ஒரு தீர்க்கமான விசாரணை மேற்கொள்ளப்பட்டால் தங்களுடைய விளையாட்டு யுக்திகள் வெளிவந்து விடும் என்பதை ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை அறிந்திருந்த தாலா?

(e) அமெரிக்காவில் ஹேவுட் ஒரு மாதம் என்ன செய்தான்? அவன் மீது எழப்போகும் கேள்விகளுக்கு எப்படி பதில் சொல்வது? மயக்க நிலை சோதனை (Narco Analysis Test) மேற்கொள்ளப் பட்டால் அதனை எப்படி எதிர் கொள்வது? இந்த சிக்கல்களிலிருந்து எல்லாம் எப்படி வெளிவருவது என ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையாலும் சில அமெரிக்க வல்லுனர்களாலும் பயிற்றுவிக்கப்பட்டானா?

**11. கென் ஹேவுட் இடத்தில் முஸ்லிம் கணிணி வல்லுனர்களை பயன்படுத்த காட்டப்பட்ட அதீத ஆர்வம் - ஐ.பி யின் குற்றமனப்பான்மை:**

மேலே சொன்னதன் படி ஐ.பியின் முழு பதட்டமும், இதை விசாரணை செய்த விசாரணை நிறுவனங்கள் குறிப்பாக மும்பை காவல்துறையினர் கென் ஹேவுட்டை நிரபராதி என நிறுவுவதற்காக ஒரு கணிணி வல்லுனனை ஒரு தீவிரவாத கும்பலோடு சம்பந்தப்படுத்தி அவனை ஹேவுட்டுக்கு பதிலாக உபயோகப்படுத்த காட்டிய ஆர்வத்தில் உறுதியானது. ஆனால் ஆச்சரியப்படும் விதமாக குஜராத் காவல் துறையினர் அவனுக்கு ஆரம்பத்தில் நற்சான்றிதழ் (Clean Chit) கொடுக்கும் விஷயத்தில் அவ்வளவு உறுதியாக இல்லை என தெரிகிறது. அதே வேளையில் மும்பை குற்றப்பிரிவு காவல்துறையினரோ, தெளிவாக ஐ.பி என்கிற மத்திய உளவுத்துறையின் கட்டளைப்படி அவனுக்கு நற்சான்று கொடுப்பதில் உறுதியாக இருந்தனர். குஜராத்தின் டி.ஜி.பி (DGP) இவ்வழக்கு உடைக்கப்பட்ட விதத்தைப் பற்றி அறிவிக்கும் போது இவ்வாறான ஒரு கணிணி நிபுணரைப் பற்றி குறிப்பிடக் கூட இல்லை. மேலும் இதன் சூத்ரதாரி, கணினி தகவல் திருடன் (Hacker) தவ்ஃபீக் இவ்வழக்கில் ஒரு குற்றவாளி என்பதையும் அறிவிக்கவே இல்லை. ஆனால் அதே நாளில் மும்பை காவல்துறையினர் அவர்களால் கைது செய்யப்பட்ட ஒருவன்

தௌஃபீக் ஆக இருக்கலாம், அவனை குஜராத் காவல்துறையினர் இவ்வழக்கின் சூத்ரதாரி என சந்தேகிக்கின்றனர். ஆனால் அவனுடைய பின்புலத்தை ஆராயும் வரை நாங்கள் எதையும் சொல்ல மாட்டோம் என அறிவித்தனர். ஆனால் அதே மூச்சில் அவர்கள், "தவ்ஃபீக் கணினி தொழில் நுட்பத்தில் ஆழ்ந்த பரீட்சய மிக்கவன், அவன் ஒரு கை தேர்ந்த கணினி தகவல் திருடன். அவன் ஹேவுட்டின் கணினியில் நுழைந்து அவனுடைய மின்னஞ்சல் தகவல்களை திருடி ஹேவுட்டின் பெயரில் மிரட்டல் மின்னஞ்சல்களை அனுப்பி இருக்க வேண்டும் என சந்தேகிக்கிறோம் என்றும் அறிவித்தனர்.

குஜராத் காவல்துறையை பொறுத்த வரை உண்மையான விசாரணையை மேற்கொள்ளவும் அதன் ஆணிவேர் வரை சென்று பார்க்கவும் தயாராக இருந்ததாகவே தெரிகிறது.

ஏனெனில் அஹ்மதாபாத் குண்டு வெடிப்புகளும், சூரத் குண்டுகளும் குஜராத் அரசாங்கம் அடிக்கடி கூறிக் கொண்டிருந்த, தீவிரவாதிகளுக்கு தங்களுடைய எல்லைக்குள் நுழையக் கூட தைரியம் வராது என்ற கூற்றை பலமாக உடைத்து போட்டு விட்டது. மேலும் அவர்களுடைய முதலமைச்சர் நரேந்திர மோடியின் பெருமையையும் உடைத்து விட்டது. ஆனால் ஐ.பியோ இதற்கு மாற்றமாக தெளிவான சில காரணங்களுக்காக இவ்விஷயத்தில் ஆழமானதொரு விசாரணையை விரும்பவில்லை. மேலும் இதனை விசாரணை செய்யும் விசாரணை நிறுவனங்கள் தங்களின் வழிகாட்டுதலின் படியே விசாரணை செய்ய வேண்டுமென விரும்பினர். இவ்வழக்கில் குஜராத் காவல்துறையினரின் அணுகு முறையிலும் ஐ.பி என்கிற மத்திய உளவுத்துறையின் அணுகுமுறையிலும் ஆரம்பத்தில் வேறுபாடுகள் இருந்தது உறுதியானாலும் யாரோ சிலரின் தலையீட்டின் காரணமாக குஜராத் அரசாங்கம் பின்னர் ஐ.பி அழைத்து செல்லும் பாதைக்கு கொண்டு வரப்பட்டார்கள் என்பது தெரிகிறது. அந்த யாரோ சிலர் ஆர்.எஸ்.எஸ். இன் முதிர்ந்த தலைவர்களாகத் தான் இருக்கக்கூடும்; நரேந்திர மோடியிடம் "தேசத்தின் நலன்", அல்லது "பன்னாட்டு உறவு" என்ற பதங்களை உபயோகப்படுத்தி அவரை சமாதானப்படுத்தியிருக்கலாம். உண்மையில் இப்பதங்கள் மிகவும் சந்தேகத்திற்குரியவை. ஆனால் யாரும் அவைகளின் எழுத்தைக் கூட உச்சரித்து பார்ப்பதில்லை, எந்த அரசியல்வாதியும் அதைப் பற்றி தெரிந்துக் கொள்ளக் கவலைப்படுவதில்லை. மொத்தத்தில் சுருங்க கூறுவதெனில் இவ்வழக்கு விசாரணையில் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் கூற்றை ஏற்றுக் கொள்வதில் பல்வேறு விசாரணை நிறுவனங்களுக்கிடையே கென் ஹேவுட்டிற்கு நற்சான்றிதழ் கொடுத்து சில முஸ்லிம் இளைஞர்களை பலிகடாக்களாக்கி அவர்களுக்கெதிராக சில சான்றுகளை உருவாக்கி அவர்கள் தான் ஹேவுட்டின் கணினியை ஊடுருவி அந்த மின்னஞ்சலை அனுப்பினார்கள் என்பதில் ஒற்றுமை ஏற்பட்டது. ஆனால் இக்கூற்றில் நிலைத்து நிற்க விசாரணை நிறுவனங்களுக்கு ஒரு மிகச்சிறந்த அடுத்தவர்களின் கணினிக்குள் ஊடுருவி செல்லும் ஆற்றல் படைத்த கணினி நிபுணன் தேவை. இதன் மூலம் விசாரணை செய்பவர்களின் நேர்மையை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை இப்பணியினை மும்பை குற்றப்பிரிவு அதிகாரிகளிடம் கொடுத்தது தெரிகிறது. அங்கு அவர்களுக்கு இதனை திறம்பட சுலபமாக செய்து முடிக்கும் சில அதிகாரிகள் இருந்திருக்கக் கூடும்.

இதற்கிணங்க மும்பை காவல் துறையினரும் இப்பணியை மேற்கொண்டு ஒரு தவறான சோதனை வழியை கையாண்டனர். தவ்ஃபீக்கின் கணினி நிபுணத்துவத்தை பற்றி தெரியாமலேயே அவன் தான் ஹேவுட்டின் கணினி வழியாக மின்னஞ்சல்களை அனுப்பினான் என்று முன்னரே அறிவித்து விட்டனர். திடீரென்று அவருடைய பெயர் நீக்கப்பட்டு முஹம்மத்

சாதிக், அன்சர்என்ற பெயர்கள் மும்பை காவல்துறையினரால் அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கு அடுத்த நாளே மும்பை குற்றப்பிரிவு காவல்துறையினர் இதற்கெல்லாம் பின்னணியில் முறையாக செயல்பட்டது ரியாஸ் பட்கல் என்பவன் என தெளிவுபடுத்தினர். ஆனால் மேலே சொன்னவர்களில் யாரும் இவர்கள் குறிப்பிட்டதன் படி கிடையாது என்பதும் அவர்கள் மற்றவர்களின் கணிணியில் நுழைந்து தகவலை திருடும் (Hacking) அளவிற்கு நிபுணத்துவம் பெற்றவர்கள் கிடையாது என்பதும் தெரிந்தது. ஆகவே மும்பை காவல்துறையினர் ஓர் ஆழமான விசாரணைக்குப் பின்னர் புனேவை சேர்ந்த மன்சூர் பீர்பாய், முபீன் ஷேக் மற்றும் அசிப் பஷீர் ஷேக் என்ற மூன்று அதிகம் படித்த கணிணி நிபுணர்களிடம் வந்தனர். அவர்கள் அனவரையும் கைது செய்தனர். அவர்களை கைது செய்யும் போது மற்ற பொருட்களுடன் ஆறு கணிணிகள் ஒரு வயர்லெஸ் ரவுட்டர் (Wifi - Router) போன்றவற்றை கைப்பற்றினர். இதன் மூலம் அந்த நபர்கள் காவலில் இருக்கும் போது அவர்கள் கணிணி தகவல்களை அவர்களுக்கு ஏற்ற விதத்தில் சரி செய்து அவர்கள் தான் கென் ஹேவுட்டின் கணிணியில் நுழைந்து அந்த மிரட்டல் மின்னஞ்சலை அனுப்பியது என காட்டினர். இதன் மூலம் காவல்துறையினர் ஹேவுட்டிற்கு நல்லவன், தப்பிற்கு அப்பாற்பட்டவன் என்ற கடைசி நற்சான்றிதழை கொடுத்தார்கள்.

தொலைக்காட்சி சேனல்களுக்கு இன்னும் பல குண்டுகள் வெடிக்கும் என மிரட்டல் மின்னஞ்சல் அனுப்பிய தீபக் பாண்டே என்பவன் 31 ஜூலை 2008-ல் மும்பை குற்றப்பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டான். அவனுடைய தொடர்பு பற்றியும் அவனுடைய கூட்டமைப்பு பற்றியும் என்ன விசாரணை மேற்கொள்ளப்பட்டது?

**ஆச்சரியத்திலும் ஆச்சரியம் - மிகவும் தேடப்பட்ட தீவிரவாதி கணினியில் தகவல்களை திருடும் திறமைச்சாலி என குற்றம் சாட்டப்பற்ற முக்கியமானவரான தவ்கீரின் பெயர் ஒட்டுமொத்தமாக விடுபடுதல்**

அபுஸ் சுபான் குரெய்ஷி அல்லது தவ்பிக் பிலால் அல்லது அல்தாப் சுபான் என்றழைக்கப்படும் தவ்கீர் ஜெய்ப்பூர், அகமதாபாத், தில்லி மற்றும் பெங்களூர் குண்டு வெடிப்புகளில் முக்கியமாகத் தேடப்படும் நபர் என்று புலனாய்வுத் துறையும் காவல் படையும் சேர்ந்து அறிவித்தனர். அவர் தான் சதி ஆலோசனைகளின் மூலம் என்றும் கூறப்பட்டது.

அமெரிக்க நாட்டவரான கென் ஹேவுட்டின் கணிப்பொறியை ஊடுருவி "Hack" செய்து வெடிகுண்டு சம்பவங்களுக்கு முன்னர் ஊடகங்களுக்கு மின் அஞ்சல் அனுப்பியதாகவும் இவர் மேல் புகார் உண்டு. ஆனால் 19, பிப்-2009 இல் மும்பை காவல்துறை தாக்கல் செய்த குற்றப் பத்திரிகையில் தவ்கீரின் பெயர் இல்லை. "அவரின் பெயரை உருவாக்கியதே ஊடகங்கள் தான்" என்றும் மும்பை காவல்துறை அறிவிட்டது (இந்தியன் எக்ஸ்பிரஸ், புனே, 19 பிப். 2009).

காவல் துறையினரின் இந்த விளக்கம் எந்த அளவிற்கு உண்மையானது? காவல்துறையின் கூற்று உண்மைக்கு புறம்பானது என்பதை பின்வரும் தகவல்கள் மூலம் அறியலாம்.

1. "தவ்பிக் பிலால்" என்றும் "அப்துல் சுபான்" என்றும் க்ரைம் பிராஞ்ச் அகமதாபாத் காவல் துறையும் மும்பை காவல் துறையும் அவரைக் குறிப்பிட்டது. அகமதாபாத்தின் வெடிகுண்டு வெடிப்புகளின் கர்த்தாவாகவும், மின் அஞ்சல்களை அனுப்பியவராகவும் காவல்துறையினர் ஆகஸ்ட் 16, 2008இல் தெரிவித்தனர் (தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, மும்பை, 17 ஆகஸ்ட் 2009).

2. அகமதாபாத் மற்றும் மும்பை க்ரைம் கிளை காவல் துறையினருக்கு "தவ்பிக் பிலால்" மற்றும் "அப்துல் சுபான்" ஆகிய பெயர்கள் ஒருவருடையது தானா அல்லது இருவரா என்பதை உறுதி

செய்ய முடியவில்லை. எனவே பின்னர் அவர்கள் தம்மைச் சமாதானம் செய்து கொண்டு இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கும் என்றனர் (தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே, 18 ஆகஸ்ட் 2008).

3. ஏடிஎஸ் அதிகாரி ஒருவர் "தவ்கீர்" தான் வெடிகுண்டு சம்பவங்களில் தலைமைப் பொறுப்பேற்று நிறைவேற்றியவர் எனக் குறிப்பிட்டார் (19 ஆகஸ்ட் 2008).

4. 13 செப். 2008இல் இந்து நாளிதழ் "தவ்கீரின்" செயல்பாடுகளை விவரித்தது. அன்று தான் தில்லியில் வெடிகுண்டுகள் இயக்கப்பட்டன. "தவ்கீரைப் பற்றிக் கிடைத்தச் செய்திகள் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டது என இந்து நாளிதழின் செய்திக்குறிப்பில் உள்ளன.

5. தில்லி குண்டு வெடிப்புகளுக்குப் பின்னர், தவ்கீர் "இந்தியாவின் ஒசாமா பின் லேடன்" என தில்லி பத்திரிக்கைகளால் அழைக்கப்பட்டார்.

6. தில்லி குண்டு வெடிப்புகளில் இவர் தான் முதன்மையான சதிகாரர் என காவல் துறையினர் சந்தேகிக்கின்றனர் (தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே மற்றும் புதாரி, புனே, 16 செப். 2008).

7. ஏடிஎஸ் கமிஷனர் திரு.பரம்பீர் சிங் அவர்கள் "சுபான்" மிகவும் தேடப்பட்டு வரும் நபர் என்று அறிவித்தார் (தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, 17 செப். 2009).

8. பாட்லா ஹவுஸ் என்கவுண்டருக்குப் பின்னர், தில்லி சிறப்புப்படை அதிகாரியான அலோக் குமார் 19 செப். 2008இல் பத்திரிக்கையாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார். "ஜெய்ப்பூர், பெங்களூர், அகமதாபாத் மற்றும் தில்லி வெடிகுண்டு சம்பவங்களில் முதன்மை யான குற்றவாளி தவ்கீர் என்பவர் தான்.

9. தவ்கீர் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருப்பதாக, செப். 20 இல் ஐ.பி செய்தியாளர்களிடம் அறிவித்தது.


10. ஆந்திரப் பிரதேசக் காவல்துறை "ஹைதராபாத்திற்கு எதிரான போரை அறிவித்த தவ்கீருக்கு" எதிராக வழக்குப்பதிவு செய்தனர்(செப். 26, டைம்ஸ் ஆஃப் இந்தியா).

11. அகமதாபாத் குண்டு வெடிப்பில் முதன்மைப் பங்காற்றியவர் தவ்கீர் என குஜராத் காவல்படை அறிவித்தது (செப். 26, டைம்ஸ் ஆஃப் இந்தியா, செய்தி நிறுவனம்).

மும்பை காவல்துறையினர் கூற்றப்படி தவ்கீர் ஊடகங்களினால் உருவாக்கப் படவில்லை. காவல் துறையால் தான் உருவாக்கப்பட்டுள்ளார். ஐ.பி.இன் வற்புறுத்தலால், க்ரைம் பிரிவு போலிஸார், கணிப்பொறி வல்லுநரான கென்ஹேவுட்-ற்குப் பதில் ஓர் இஸ்லாமியப் பெயரைக் கொண்டு வரவே முயற்சித்தனர். ஐ.பி.ஐ திருப்திப்படுத்த மும்பை க்ரைம் பிரிவு போலிஸாரும், முன்னர் ஐடி துறையில் பணியாற்றிய அப்துல் சுப்ஹான் என்கிற தவ்பிக் பிலாலைக் குற்றம் சாட்டினர். தவ்கீர் விப்ரோ நிறுவனத்தைச் சேர்ந்த விற்பனை ஏஜென்சி டேடாமடிக்ஸ் என்கிற நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். அவருக்கு மற்ற கணிப்பொறியில் ஊடுருவும் "Hack" அளவிற்கு திறன் உள்ளதா என்பனவற்றையெல்லாம் காவல் துறையினர் ஆராயவில்லை. பின்னர் "ஹேக்" செய்து மின் அஞ்சல்கள் அனுப்புவது சாதாரணச் செயல் இல்லை என்றும், தவ்கீர் கணிப்பொறியை ஓரளவு கையாளுவதைத் தவிர வேறொன்றும் அறிந்திருக்கவில்லை என்றும் காவல் துறையினர் உணர்ந்தனர். எனவே "தீவிரவாத மின் அஞ்சல்", அனுப்பிய வழக்கில் இருந்து தவ்கீரின் பெயர் நீக்கப்பட்டது. காவல் துறையினர் ஊடகங்களை திட்டவும் செய்தனர்.

சுத்தமான பொய்மையை மட்டும் உதவியாகக் கொண்டு புலனாய்வினை மேற்கொள்ளும் போது காவல் துறையினர் இத்தகைய பல சிக்கல்களில் மாட்டிக் கொள்ளத் தான்செய்வர்.

# மும்பை இரயில் குண்டுவெடிப்பு கொலை செய்யப்பட்ட வழக்கறிஞர்!



தற்போது அந்த வரிசையில் இன்னொருவர் ஷாஹித் ஆஸ்மி, நூற்றுக்கணக்கான ஏழைகளுக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்கு தீவிரவாதிகள் என பொய்யாக முத்திரை குத்தப்பட்டவர் களுக்காக வாதாடிய நீதியின் காவலன். இந்துத்துவ தீவிரவாதி களால் மும்பையில் 2010 பெப்ரவரி 11-ம் தேதி அன்று சுட்டுக் கொல்லப் பட்டார்,

ஆஸ்மியின் போராட்டங் களும் ஒன்றும் சளைத்தவை அல்ல, அரசாங்கத்தால் தீவிர வாதிகள் என பொய்யாக முத்திரை குத்தப்பட்டவர்களை யல்லவா அவர் நீதிமன்றத்தில் காப்பாற்றியுள்ளார்,

கல் இடறலுக்கெல்லாம் கலங்கிநிற்கும் நம்மவர்களுக்கு மத்தியில் ஷாஹித் ஆஸ்மியின் தியாகம் நெஞ்சை நெகிழச் செய்யும். ஆஸ்மி சண்டையிட்டுக் கொண்டிருந்தது காட்டு மிராண்டித்தனமான காவல் துறையினருடனும் தீவிரவாதத்துடன் சண்டைபோடுகிறோம் என்ற பெயரில் அவர்கள் செய்து வந்த சந்தேகத்திற்கிடமான காரியங்களுடனும்,

ஏற்கனவே பிராம்மணீய தீவிரவாதம் இந்திய பாதுகாப்புகளை விழுங்கி ஏப்பம் விட்டு உருவாக்கப்பட்டு கொண்டு வரப்பட்ட தீவிரவாதிகளுக்கு இந்தியாவின் கதவுகளை திறந்து விட்டு தாக்குதல் நடத்தியதையும் குண்டு வைத்ததையும் அதனை கண்டெடுத்த உண்மையாளர் ஹேமந்த் கர்கரே போன்றோரை பலி கொண்டிருப்பதையும் நாம் அறிவோம்,

அவருடைய மரணத்தின் மூலம் பயனடையப் போவது யார்? விடை உள்துறை அமைச்சகம். ஐ,பி என்ற மத்திய உளவுத்துறை ஏனெனில் இவர்கள் தான் தீவிரவாதம் என்ற கோட்டைகளை கட்டி எழுப்புகிறார்கள், அவ்வாறு இவர்கள் எழுப்பிய பல கோட்டைகளை ஆஸ்மி அவ்வழக்குகளில் வெற்றி பெற்ற போது உடைத்தெறிந்தார்,

பல குண்டுவெடிப்பு வழக்குகளில் ஆஸ்மி வெற்றிகரமாக மஹாராஷ்டிர காவல் துறைக்கு எதிராக வழக்குகளை நடத்தியுள்ளார், 2008ல் இந்தியன் முஜாஹிதின் உறுப்பினர்கள் என கைது செய்யப்பட்ட 12 பேருக்கும் அதிகமானவர் களுக்காக வழக்கு நடத்த தயாராகிக் கொண்டிருந்தார், இந்தியன் முஜாஹிதீன் என்ற

அமைப்பிற்கு புனே குண்டுவெடிப்பிலும் தொடர்பிருப்பதாக கூறப்படுகிறது, குஜராத் தீவிரவாத தாக்குதல்களில் திட்டம் தீட்டியதாகவும் தாக்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டவர் களுக்காக இவர் ஆஜராக தயாராகிக் கொண்டிருந்தார், இந்த காரணங்கள் போதாதா? இவரைக் சொலை செய்ய.

2006 ஜூலை ஆஸ்மி மும்பை உயர் நீதிமன்றத்தில் ஜெயில் வார்டன்களுக்கு கெதிராக அவர்கள் தீவிரவாத குற்றம் சாட்டப்பட்டவர்களை தாக்கியதற்கு எதிராக வரலாற்று வெற்றி கண்டு அதன் மூலமும் எதிரிகளை உருவாக்கிக் கொண்டார்,

என்னுடைய சேரியில் இரவும் பகலும் காவலர்கள் வந்து மக்களை பயமுறுத்தி அவர்களை கடத்தி செல்வதை கண்ட வண்ணம் நான் வளர்த்திருக்கிறேன் என்பது ஆஸ்மியின் கூற்று.

**அஸ்மி இன் சாதனைகள் இன்னும் பல**

MAHARASHTRA CONTROL OF ORGANIZED CRIME ACT (MCOCA)க்கு எதிராக டெகல்காவில் எழுத காரணமாக இருந்தவர் இந்த ஆஸ்மி, சிமி-ஐ பற்றிய ஆய்வுக் கட்டுரை டெகல்காவில் வருவதற்கும் காரணமானவர் தான் இந்த ஆஸ்மி, சிமி-ஐ பற்றிய அந்த அறிக்கைக்கு மஹாராஷ்டிரா அரசாங்கத்தால் எந்த பதிலும் கொடுக்க முடியவில்லை, எது எப்படியோ. ஆஸ்மியின் விலை மதிப்பற்ற உயிர் அவருடைய 32 வயதில் தீவிரவாதிகளால் பறிக்கப்பட்டுள்ளது, கர்கரேயை கொன்றவர்கள் ஆஸ்மியையும் கொன்று விட்டனர்,

பாபரி மஸ்ஜித் இடிப்பு கலவரத்தின் போது கத்தியேந்திய ஹிந்து தீவிரவாதிகளின் கையில் பள்ளிக் கூடத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த போது மாட்டிக் கொள்ள விருந்தார், அப்போது ஒரு நல்ல ஹிந்து அவருடைய அடுத்த வீட்டுக்காரர் அவரை காப்பாற்றினார்.

இம்முறை அப்படி ஏதும் நடக்கவில்லை, 1994ல் ஆஸ்மியை இந்தியாவின் மூத்த அரசியல் தலைவர்களை கொலை செய்ய திட்டம் தீட்டினார் எனக் கூறி காவல்துறை கைது செய்தது, இதற்கு ஆதாரம் அவர் கூறாத அவருடைய வாக்கு மூலம், இதற்காக அவருக்கு ஐந்து வருடங்கள் சிறை தண்டனை கொடுக்கப்பட்டது, நியூ டெல்லியின் திஹார் ஜெயிலில் இருந்த போது அவர் பட்டப் படிப்பில் சேர்ந்தார்.

அவருடன் உள்ளிருந்த கைதிகளுக்காக சட்ட ரீதியான ஆவணங்களை தயார் செய்து கொடுத்தார். 2001ல் விடுதலையானார், பத்திரிக்கை துறையிலும் சட்ட கல்லூரியிலும் சேர்ந்தார். மூன்றுவருடங்களுக்குப் பிறகு தனக்கு வருமானம் அளித்துக் கொண்டிருந்த துணை ஆசிரியர் பதவியை துறந்து விட்டு வழக்கறிஞர் மஜீத் மேமனிடம் ரூ 2000/- சம்பளத்திற்கு ஜுனியராக சேர்ந்தார், நான் ஏழைகளுக்காக வேலை செய்ய விரும்புகிறேன் என்பது ஆஸ்மி தன் சகோதரரிடம் சொன்னது. அவருடைய பெருவாரியான வாடிக்கையாளர்களிடம் அவர் எந்த சம்பளத்தையும் வாங்கவில்லை.

ஆனால் இவையெல்லாம் அவரை உயிருடன் கொண்டு வராது, சூடானதொரு வேளையில் நீதிமன்றத்தில் "ராமர்" கூட நீதிக்காக வன்முறையை கையி யெடுத்துக்கொண்டிருக் கிறார் என்று ஆஸ்மி கூறிய போது ஊடகங்கள் கத்தின, காவல்துறை வழக்கு பதிவு செய்தது, நீதிபதி ஆஸ்மியை விசாரித்தார் ஆஸ்மி பயப்படவில்லை அது உண்மை என கூறினார். நீங்கள் தீவிரவாதி என தண்டிக்கப்பட்டவர் என புரளி உள்ளதை சுட்டி காட்டி நீதிபதி எச்சரித்த போது அந்த தண்டனையை நான் பெருமையுடன் ஏற்றுக் கொள்கிறேன் என்று தைரியமாகக் கூறியவர், நீதிபதி ராமரைப்பற்றி ஆஸ்மி தவறாக ஏதும் கூறவில்லை என்று கூறியவுடன் வழக்கு உடைப்பட்டது. மற்றொரு நீதிபதி நீதிமன்றத்திலேயே திங்கட்கிழமையன்று ஆஸ்மியின் மறைவிற்காக அழுது விட்டார், மக்கள் சுற்றி அமைதியாக பார்த்தனர்,

ஆஸ்மியின் நீண்டகால தொழில் தோழரான வழக்கறிஞர் சபா குரேஷி விரக்தியுடன் நான் அவரை எங்கும் பார்க்கிறேன் என்று கூறுகிறார், பலருடைய கண்ணீர் வற்றிக் காய்ந்து விட்டது, நாம் என்ற செய்யப் போகிறோம் என்ற கேள்வி,

அதாவுர் ரஹ்மான் 2006 இரயில் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட இருவரின் தந்தை, சென்னையில் உள்ள அஜித் என்ற வழக்கறிஞரை தொலை பேசியில் அழைத்து பலஹீனமான குரலில் கேட்கிறார் அஜித் சாஹேப் இனி எங்களுக்கு என்ன நடக்கும்? (அஜித் சாஹித் ஆஸ்மியின் நெருங்கிய நண்பர்) அஜித் அவரிடமும் மற்ற அனைவரிடமும் சொன்னது ஷாஹித் இறக்கவில்லை. இறக்கவும் மாட்டார். அவர் காட்டிய வழியில் நடக்க தயாராக உள்ளேன், எந்த குண்டுகளும் ஆஸ்மி எனக்கு ஊட்டிய ஊக்கத்தை தடுக்க முடியாது? புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறார்கள்,

இதோ இங்கேயொரு ஆஸ்மி விதைக்கப்பட்டிருக்கிறார், திருக்குர்ஆனின் வசனம் இவ்வாறு கூறுகிறது. "சிலர் அதனை அடைந்து விட்டனர், சிலர் அதனை எதிர்பார்த்து கொண்டிருக்கின்றனர் அவர்கள் ஒரு போதும் தங்கள் வாக்குறுதியிலிருந்து பின் வாங்குவதில்லை"

சுரணையுள்ள சகோதரர்கள் ஆஸ்மியின் வாழ்விலிருந்து பாடம் பெறட்டும்,

குறிப்பு-மும்பை தாக்குதல் வழக்கில் ஃபஹீம் அன்சாரி மற்றும் சபாவுத்தீன் அஹ்மத் இருவரும் நிரபராதிகள் என விடுவிக்கப் பட்டுள்ளனர், இவர்கள் இருவருக்காகவும் சாகும் வரை வழக்காடியவர் ஷாஹித் ஆஸ்மி ஷஹீத்.

**(பார்க்க : வைகறை வெளிச்சம், மே 2010)**

---

# இந்தியாவின் நாட்டுப்பற்று சைனாவில் தயாராகின்றது

## "MAKE IN INDIA" - இந்தியாவில் செய்யுங்கள்!

*இப்படியொரு முழக்கத்தை குஜராத் இனப்படுகொலைப் புகழ் நரேந்திர மோடி செய்து வருகின்றார். ஆனால் அவருக்குப் பிடித்தமானவை "சர்தார் வல்லபாய் பட்டேலின்" சிலையை அவர் சைனாவில்தான் செய்யச் சொல்லி இருக்கின்றார்.*

*சிலையைச் செய்திடச் சொன்ன இடம் (இந்தியாவின்) அஹமதாபாதிலிருந்து 6132 கிலோ மீட்டருக்கு அப்பால் சைனாவில் இருக்கின்றது. அந்த கம்பெனியின் பெயர்* Jiangxi tongging Metal Handi Crafts Company - Nanchang Province - *கிழக்கு சீனா.*

*இனி ஆயமந னை ஐனேயை - க்ஷரவ ஆயரேஉயவசரநசன னை ஊாயைே என நமது மோடியின் வழியைப் பின் பற்றுங்கள்.*

*குழப்பமாக இருக்கின்றதா? இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு இதுதான் கதி!*

*ஆமாம்! இந்தியாவை ஒன்றிணைத்த இரும்பு மனிதருக்கு வெண்கல கலவைச் சிலையைச் செய்வதற்கு இந்தியாவில் நாதி இல்லை?*

*சிலை ஆயனந ஐே ஊாயைே சைனா தயாரிப்பு என்ற முத்திரையோடுதான் வருமாம்.*

**எம்.ஜி.எம்.**

**செய்தி ஆதாரம் : OUTLOOK 26, OCTOBER, 2015**

# கொலை செய்யப்பட்ட காவல்துறை உதவி ஆணையர்

7/11 என்றும், மும்பை ரெயில் குண்டுவெடிப்பு என்று அழைக்கப்படும் இவ்வழக்கில் நடந்துள்ள மற்றும் ஓர் உயிர் சேதம் மும்பை தீவிரவாதத்தடுப்பு படையின் உதவி ஆணையர் திரு. வினோத் பாட் அவர்களின் மரணம். இது ஒரு மர்மமான மரணம்.

வினோத் பாட் அவர்கள் நேர்மையானவர். ஜனாதிபதி பரிசை பெற்றவர். தன் சக ஊழியர் களின் பாராட்டுகளை பெற்றவர். மிகுந்த தன்னம் பிக்கை கொண்டவர். இவருக்கு வயது 54.

இவர் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அப்பாவிகள் சார்பில் மற்ற உயர் அதிகாரிகளிடம் பேசியவர். அதனால் ஆபத்தை விலைக்கு வாங்கிக்கொண்டவர். இவர் இந்த வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவரான இஹ்திஷான், குத்புதீன், சித்தீகி அவர்களிடம் பேசிய போது தான் இந்த வழக்கில் அதிக அழுத்தத்தை தன்னுடைய உயர் அதிகாரிகளால் சந்தித்து வருவதாக கூறி இருந்தார். தான் உயிருடன் உள்ள வரை அப்பாவிகள் யாரையும் இவ்வழக்கில் குற்றவாளிகளாக்க விடப் போவதில்லை என்று வினோத் பாட் அவர்கள் கூறினார். அதன்படியே அவர் தன் உயிரை ஈந்தார்.

**(Source: The Milli Gazette, 1-15 October 2010, pp. 8-9)**

வினோத் பாட் அவர்கள் மும்பையின் புகழ் பெற்ற தாதர் எனும் இடத்திற்கும் மாதுங்கா என்ற இடத்திற்கும் இடையேயான இரயில் தண்டவாளத்தில் மர்மமான முறையில் இறந்து (கொலை செய்யப்பட்டு) கிடந்தார்.

இரயில்வே நிர்வாகம் அவரின் மரணத்தை விபத்து என்று பதிவு செய்தது. பாட் அவர்கள் தாதரில் உள்ள கீர்த்தி கல்லூரி அருகில் உள்ள மைமூன் அபார்ட்மெண்டில் தங்கி இருந்தார். அவருக்கு அலுவலக கார் உண்டு. எனவே அவர் நடந்து வர எந்த அவசியமும் இல்லை. அவ்வாறு இருக்க அவர் இரயில்வே தண்டவாளத்தை கடக்க என்ன அவசியம் ஏற்பட்டது? எனவே இது நிச்சயமாக விபத்தாக இருக்க முடியாது.

அவருக்கு நெருக்கமான வழக்கறிஞர் ஒருவர் இவ்வாறு கூறுகிறார்,"இந்த வழக்கின் விசாரணையின் போது மூத்த அதிகாரிகள் அவருடைய மனசாட்சிக்கு எதிராக சில வேலைகளை செய்ய பணித்தார்கள். அவர் ஒரு நேர்மையான அதிகாரி. சட்டத்தை வளைப்பவர் அல்லர்"

http://timesofindia.indiatimes.com/city/mumbai/ATS-officer-may-have-committed-suicide/articleshow/1937771.cms

அப்படியானால் இது தற்கொலையா? வினோத் பாட் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு கோழை அல்ல. தன்னம்பிக்கை மிக்கவர். தன் சக அதிகாரிகளின் மத்தியில் கண்ணியமாகப் பார்க்கப்படுபவர்.

அஷோக் தேசாய் என்ற உதவி ஆணையர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

"இது ஒரு வேளை தற்கொலை என்றால் எங்களுக்கு தற்கொலை குறிப்பு கிடைத் திருக்கும். அவர் எவ்வாறு இரயில்வே தண்ட வாளத்திற்கு வந்தார் என்பதை விசாரித்து கொண்டிருக்கிறோம்."

http://www.dnaindia.com/mumbai/report-suicide-or-accident-ats-officer-s-death-leaves-cops-in-doubt-1050037

உண்மைகளை உலகிற்கு உரக்க சொல்ல விரும்பினால் இதுதான் நிலை இந்தியாவில்.

கர்கரே. வினோத்பாட் போன்றவர்களை கொலை செய்து விட்டு உண்மையை முழுக்க மறைக்க இயலும் என்றால் ஏன் அப்பாவி முஸ்லிம்களைத் தூக்கிலிட முடியாது.

# உண்மை அறியும் சோதனை ஒரு தகிடுதத்தம்!

அந்த ஓரிரு சொற்களுக்குப்பின்,

மயானத்தை விஞ்சும் அமைதியோடு நாங்கள் அமர்ந்திருந்தோம்!

எங்கள் முன்னாலிருந்த காபி சற்று ஆறுதல். அதை கொஞ்சம் சொஞ்சமாக குடித்துக் கொண்டிருந்தோம்.

“ஊடகங்களும், பொதுமக்களுந்தான் குண்டுவெடிப்புகளை ஆய்வு செய்யும் புலனாய்வுத்துறையை பொய்களை உண்மை நிகழ்வுகள் போலும். அப்பாவிகளைக் குற்றவாளிகளைப் போலும், ஜோடிக்கச் செய்துவிடுகின்றனர்” என்றார் அவர்.

அவர் ஓர் உளவுத்துறை அதிகாரி.

அதிலும் நம் நாட்டுக்காக வெளிநாடுகளில் வேவு பார்க்கும் ‘ரா’ என்ற R&AW ஐச் சார்ந்தவர். (Research and Analysis Wing) அதிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

பதவிகாலத்தில் அதன் தலைவராக (Head of RAW) இருந்தவர் அவர்.

“ஒவ்வொரு குண்டுவெடிப்பிற்கு பின்னால் ஒரு கோட்பாடு (Theory) கதை இருக்கின்றது. அதனை நாங்கள் புனைவதற்குள் ஊடகங்கள் தங்கள் சொந்த (Theory)ஐ (கதையை) கோட்பாட்டை விற்றுவிடுகின்றன”.

இதுவும் அந்த அதிகாரி சொன்னதுதான்.

‘இந்திய முஜாஹிதீன்’ என்பது (Rubric) கவனத்தை கவரும் சொல்தான் என்றார் அவர்.

உடனேயே நான் “அதுதான் இப்போது உளவுத்துறை உருவாக்கிய நவீன தீவிரவாத அமைப்பு. அப்படித்தானே?” என்றேன் நான்.

அமைதியாவிட்டார் அவர்.

ஆமாம் எங்களுக்கு முன்பிருந்த காஃபிதான் புகையை விட்டுக்கொண்டிருந்தது மயான அமைதி நிலவியது. இந்த விவாதம் மனீஷா சேத்தி என்ற டெல்லி பல்கலைக்கழகப் பேராசிரியருக்கும் (மத்திய உளவுத்துறையின் வெளிநாட்டுப் பிரிவு R&AW ரா தலைமை அதிகாரிக்கும் இடையே நடந்தது.

இடம் : ஹைதராபாத் இல் ஓர் தொலைக்காட்சியின் தனியறை.

நேரம் : 2013, பிப்ருவரி 21ஆம் நாள் ஹைதராபாத்தில் நடந்த குண்டு வெடிப்பிற்குப் பின்.

இந்த ஓய்வு பெற்ற ‘ரா’ என்ற உளவுத்துறையின் தலைவர் ஒவ்வொரு தொலைக்காட்சியாக இதே கதையைச் சொல்லிக்கொண்டே வந்தார். அவரை ஓர் தொலைக்காட்சி தனியறையில் வைத்து மடக்கிப் பிடித்தார் மனீஷா சேத்தி.

அந்த அதிகாரியின் பெயர் விஜய் பாஸ்கர். அவர் மனீஷா சேத்தியிடம் இந்தியன் முஜாஹிதீன் என்றொரு அமைப்பு உண்மையிலேயே இருக்கின்றது என்று அடித்துக் கூறிடவோ, ஆதாரங்களைத் தந்திடவோ இல்லை.

ஆனால் அடுத்தடுத்த தொலைக்காட்சிகளுக்குப் பேட்டி கொடுத்திடும் போது இந்த இந்தியன் முஜாஹிதீன் என்ற சொல்லை சொல்லி கொண்டே இருந்தார்.

(Source Kafkaland: Prejudice Law and Contr Terrorism in India)

இதே விஜய் பாஸ்கர் என்ற உளவுத்துறை அதிகாரி (ஓய்வு), இந்துக்கள்

குண்டு வைக்க மாட்டார்கள். அவர்கள் எப்படி தங்கள் தாய் நாட்டுக்கு எதிராக குண்டு வைப்பார்கள்? என அழுத்தமாக சொல்லி வந்தார். அவரிடம் ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு மே 2007 அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு, அக்டோபர் 2007 சம்ஜோத்தா எக்ஸ்பிரஸ் ரெயில் குண்டு வெடிப்பு, பிப்ருவரி 2007 மாலேகான் இன்னும் பல குண்டுவெடிப்புகளும் இந்துத்துவ தீவிரவாதிகளின் கைவண்ணங்கள் தானே எனச் சொன்னபோது வாயடைத்துப் போனார் என்கின்றார் மனிஷா சேத்தி. அதே நூலில்.

மனிஷா சேத்தி மேற்கொண்டு நமக்குக் கொட்டித் தரும் ஆதாரங்களின் அடிப் படையில், புலனாய்வுத் துறையினருக்கு சொல்லித் தரப்படும் பாடம். குண்டு வெடிப்புகள் என்றால் முஸ்லிம்களை மட்டுந்தான் கைது செய்திட வேண்டும்.

இந்துககள் குண்டு வைக்கவே மாட்டார்கள். அப்படியே வைத்தால் அஃதோரு பழிவாங்கிடும் செயல் அல்லாமல் தீவிரவாதமல்ல என்று தொடர்ந்து பாடங்கள் நடத்தப்படுகின்றன. இதுவே நீதிபதிகளுக்கும் சொல்லப்படுகின்றன.

இந்துத்துவ தீவிரவாதிகள் குண்டு வைத்தால் அவர்கள் கைது செய்யப் பட்டவுடன் பிணையும், பின்னர் விடுதலையும் கிடைத்துவிடுவதற்கு காரணம் இதுதான். ஆனால் இந்தியாவில் அனைத்தையும் இயக்குபவர்கள் மத்திய உளவுத்துறை யினர்தான் என்பதை மும்பை முன்னாள் ஐ.ஜி. இன்ஸ்பெக்டர் ஜெனரல் போலீஸ் எஸ்.எம். முஷ்ரீப் அவர்கள் தெளிவுப்படுத்தி இருக் கின்றார்கள். நாமும், அதை ஊரெல்லாம் விளம்பி இருக்கின்றோம். உளவுத்துறையின் உதவியும், ஆர்.டி.எக்ஸ். வகை வெடிப் பொருள்களும் தாராளமாகக் கிடைப்பதால் தான் இந்துத்துவா தங்கள் தீவிரவாத செயல்களை நாடெங்கும் தங்குதடையின்றி நிறைவேற்றி வருகின்றார்கள். எந்த நிலை யிலும், எந்தப் பாதிப்பிற்கும் உள்ளாவதில்லை.

இந்நிலையில் இப்போது நார்கோ அனாலிஸிஸ் டெஸ்ட் என்றும் பிரையின் மேப்பிங் டெஸ்ட் என்றும் பேசப்படும் உண்மையைக் கண்டுபிடிக்கும் சோதனை, ஒருவன் செய்வது உண்மையா? பொய்யா? என்பதைக் கண்டுபிடிப்புக்கும் சோதனை என்றும் புகழப்படும், பரிசோதனையைப் பற்றிப் பார்ப்போம். அதிலும், இந்த வழக்கில், அது எப்படி? செயல்படுத்தப்பட்டது என்பதைப் பார்ப்போம். ஏனெனில் இந்த ஐந்து பேருக்கு வழங்கப்பட்ட தூக்கின் முக்கிய சாட்சியம் இந்த நார்க்ோ அனாலிஸிஸ் என்ற நவீன மருத்துவ சோதனைதான்.

**டாக்டர் மாலினி**

இப்படி ஒரு பெண் (டாக்டர்) மருத்துவர். இவர் இந்தியாவில் மிகவும் புகழ் பெற்ற மருத்துவர். இவருக்காக இந்திய மருத்துவத் துறையில் இன்றளவுமில்லாத பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்திய மருத்துவ துறையில் வழங்கப்படாத உயர்வான அதிக ஊதியம் வழங்கப்படுகின்றது. காரணம்,

இவர் நார்கோ அனாலிஸிஸ் என்ற சோதனையின் மூலம் ஒருவன் பொய் சொல்லுகின்றானா? இல்லையா? அவன் மூளையில் என்ன இருந்தது என்பதைக் கண்டுபிடிப்பதில் வல்லவர்.

இவரிடம் ஒரு சான்றிதழ் வாங்கி விட்டால் எந்த அப்பாவியையும் தூக்கில் போட்டு விடலாம்.

இந்தப் பின்னணியில் ஜூலை திங்கள் 11ஆம் நாள், 2006 இல் நடைபெற்ற மும்பைக் குண்டு வெடிப்பு புகாரிலும், குற்றம் சாட்டப்பட்ட அப்பாவிகள், இவருடைய நார்கோ அனாலிசுக்காக இவரிடம் அழைத்து வரப்பட்டார்கள். இவருடைய இடம் பெங்களூர் அரசு மருத்துவமனை.

மும்பையிலிருந்து சிறப்பு விமானம் ஜெட் ஏர்வேஸ் (Jest Airways) ஒன்றின் வழிதான் இவர்கள் இந்த அப்பாவி முஸ்லிம்கள் அனைவரும் பெங்களூரு அழைத்து

வரப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் பெங்களூர் அழைத்து வரப்படுவது மூன்றாவது முறை. இப்போது செப்டம்பர் 12, 2006. அன்று தான் அழைத்து வரப் பட்டார்கள். இன்னொரு முறை செப்டம்பர் 24, 2006 ஆம் ஆண்டு அழைத்து வரப் பட்டார்கள்.

இப்போது இஹ்திஸாம் 'Ehtesham' என்பவர் மீது கடுமையான சித்திரவதை களுக்குப் பின் இந்த சோதனை நடத்தப் பெற்றது.

இந்தச் சோதனைக்கு முன் "Sodium Pentathol" சோடியம் பெண்டதோல் என்ற மருந்தை உடலுக்குள் செலுத்தினார்கள். இந்த மருந்தை எந்த நிலையிலும் மனிதர்களுக்குக் தந்திடக் கூடாது என்று நீண்ட நாள்களுக்கு முன்னரே தடை செய்யப்பட்டுள்ளது. கேட்டால் இது போன்ற சோதனைகளுக்கு இதுதான் மயக்க மருந்து எனச் சொல்லி விடுகின்றார் டாக்டர் மாலினி.

இந்த மருந்தை மனிதர்களின் உடலினுள் செலுத்தினால் எந்த நிமிடமும் ஹார்ட் அட்டாக் என்ற திடீர் மாரடைப்பு வரலாம். ஆனால் இந்த அம்மாவிடம் இது சர்வசாதாரணமான விஷயம். தன்னிடம் ஒப்படைக்கப்படுபவர்களுக்கு மிக எளிதாக இந்த மருந்தை கொடுத்துவிடுவார்.

இப்படி தன்னிடம், நார்கோ அனாலிஸிஸ் என்ற பொய்யைக் கண்டுபிடிக்க ஒப்படைப்பவர்களுக்கு இது போன்ற விஷத்தை தந்து விட்டு இவர் செய்யும் தகிடு தத்தங்களுக்கும் சித்திரவதைகளுக்கும் அளவே இல்லை.

ஆனாலும் இந்த அம்மாவிடம் ஒரு தயாள குணம், இந்த மருந்து சித்திரவதை இவற்றிற்கெல்லாம் முன்னால், அந்த குற்றம் சுமத்தப்பட்டவர்களிடம் ஓர் எச்சரிக்கையை விடுப்பாராம். அந்த எச்சரிக்கையில், நான் எழுதித் தருவதில் கையெழுத்துப் போட்டு விட்டு இல்லை என்றால் நீ பயங்கர விளைவுகளை இப்போது உன் உடலிலும் பின்னர் உன் வாழ்க்கையிலும் ஏற்படுத்தும் சோதனைகளைச் சந்திக்க வேண்டியது வரும் என எச்சரிப்பாராம்.

ஆனால் குற்றமே செய்யாதவர்கள் இந்த விஞ்ஞான சோதனையில் நாம் குற்றவாளி அல்ல என்பது தெரியவரும். அப்படித் தெரிய வந்தால் நம்மை நீதிமன்றம் விட்டுவிடும் என நம்பியே இந்த மூளை பரிசோதனைக்கு ஒத்துக் கொள்கின்றார்கள். ஆனால், அங்கே என்ன இருக்கின்றது என்றால் இந்த அம்மா அதாவது மருத்துவர் மாலினி முதல் மிகவும் மிருதுவான கேள்விகளையே கேட்கிறார். விடை கிடைத்த பின்னர், பதிலை அப்படியே வைத்துக் கொண்டு கேள்வியை மாற்றி விடுகின்றார். அது இப்படி நடக்கின்றது.

டாக்டர் மாலியின் கேள்வி : எண் ஆறு பிறகு வரும் எண் எது? (What comes after six?)

பதில் : ஏழு (Seven)

சோதனைக்குப்பின் பதிலை அப்படியே வைத்துக் கொண்டு கேள்வியை மாற்றி விடுகின்றார். அவர் அவருடைய குரலில் முதலில் கேள்வியை மாய்த்துவிட்டு, கேள்வியை இப்படிப் பதிவு செய்கின்றார்.

பதிவு செய்யப்பட்ட கேள்வி : எத்தனை குண்டுகளை வைத்தீர்கள்?

பழைய பதில் குற்றஞ்சாட்டப் பெற்றவரின் குரலில் அப்படியே இருக் கின்றது. அது ஏழு

அடுத்தக் கேள்வி : சிறையில் உங்களுக்கு அடுத்த (செல்களில்) அறையில் யார்? யார்? இருந்தார்கள்? (Who are the people in the cell next to yours)

பதில் : டாக்டர் தன்வீர், இஹ்திஷாம், ஃபசல் கமால், முஜம்மில் ஆசீஃப்

மருத்துவ சோதனை முடிந்தபின்னர் டாக்டர் மாலினி அவர்கள் கேள்வியை தன் குரலில் இப்படி மாற்றி விடுகின்றார்.

மாற்றப்பட்ட கேள்வி : யார், யார் இந்த குண்டுவெடிப்பு சதியில் உடனிருந்தார்கள்? (Who are all involved in the conspricacy of the blasts?)

பதில் மேலே தந்துள்ளது அப்படியே இருக்கும். பதில்களை அப்படியே வைத்து விட்டு கேள்விகளை மாற்றி சி.டி.க்களைத் தயார் செய்து நீதிமன்றத்தில் தந்துவிடுகின்றார்.

நீதிமன்றத்தில் அமர்ந்திருக்கின்ற நீதிபதிகள் உளவுத்துறைகளின் குண்டுகளை வைத்தவர்களின் கடைக்கண் பார்வைக்கே பயந்து நடுங்குபவர்கள் என்பதால் அவர்கள் இதில் உள்ள எல்லா முரண்பாடுகளோடும் ஒத்துக் கொள்கின்றார்கள். தண்டிக் கின்றார்கள். இதைத்தான் தலித்களுக்கான போராளி கே.ஜெ. இராஜசேகர் அவர்கள் நீதிமன்ற தீவிரவாதம் Judicial Terrorism எனக் கூறுகின்றார்கள்.

இங்கே குற்றம் சுமத்தப்பட்ட முஸ்லிம்கள் கலப்பற்ற அப்பாவிகள். ஆனால் படித்தவர்கள், சிறந்த பண்பாளர்கள். ஆகவே தாங்கள் அந்த குறுந்தகடுகளைப் பார்த்திட வேண்டும் என நீதிபதியிடம் நேரடியாக தங்கள் வழக்கறிஞர் வழியாகவும் வேண்டினார்கள்.

நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பின் வேறு வழிஇன்றி குற்றம் சுமத்தப்பட்டவர்கள். சி.டி.களைப் பார்க்க அனுமதி வழங்கினார்கள்.

அந்த குறுந்தகடுகளில் டாக்டர் மாலினி அவர்கள் பயங்கர விளையாட்டுக்களை விளையாடி இருக்கின்றார்கள் என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

அந்த குறுந்தகடுகளை நீதிபதியும் ஒத்துக்கொள்ளும் தோரணையில் இருக் கின்றார் என்பதை கண்டவுடன் தங்கள் தரப்பு சாட்சியங்களைக் கண்டு கொளளள மாட்டார்கள். தண்டித்தே விடுவார்கள் என்பதை உறுதிச் செய்து கொண்டார்கள்.

இந்நிலையிலும் அவர்கள் விரக்தி யடைந்து சும்மா இருந்திடவில்லை. டாக்டர் மாலினியின் தகிடுதத்தங்களைத் தாங்கள் நீதி மன்றத்தில் எழுப்பும் குரல், வழக்கறிஞர்கள் வழி தரும் முறையீடுகள், மேல் முறையீடுகள் இவற்றின் வழி மக்கள் மன்றத்திலும் நீதிமன்றத் திலும் வைத்தார்கள்.

டாக்டர் மாலினி இதுபோன்ற தகிடுதத்தங்களைத் தான் மேற்கொண்ட எல்லா நார்கோ அனலிஸிஸ் சோதனையிலும், மேற்கொண்டிருக்கின்றார் என்பதை மனிஷா சேத்தி போன்ற சமூக ஆர்வலர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் இவர்களெல்லாம் கண்டு கொண்டார்கள்.

இவர்களெல்லாம் டாக்டர் மாலினி அவர்களின் இதர மூளை சோதனைகள், அதனடிப்படையில் அப்பாவிகள் தண்டிக்கப் பட்டது. எல்லாவற்றையும் மறு ஆய்வுக்கு உள்ளாக்கினார்கள்.

அதில் பல உண்மைகள் தெரியவந்தன. அவற்றுள் ஒன்று, கேரள மாநிலத்தில் அபையா சிஸ்டர் அபையா கொலை செய்யப்பட்ட விவகாரத்திலும், இது போன்ற தகிடுத்தத்தங்களை செய்திருந்தார்.

இன்னும் என்ன வழக்குகளின் போக்கை இதுபோன்ற தகிடுத்தத்தங்கள் வழியாக மாற்றி இருந்தார், அப்பாவிகள் ஆயுள் தண்டனை, பெற்றிட காரணமாக இருந்தார், பல இந்தியக் குடிமக்களின் வாழ்க்கையை சிதைத்து சின்னாபின்னமாக்கி இருந்தார், அத்தனையும் கண்டு பிடிக்கப்பட்டன. இதனைச் செய்தது நம் வரிப்பணத்தில் கை நீட்டி சம்பளம் வாங்கிடும் உளவுத்துறையே

வெந்த புண்ணில் வேல் என்பதைப் போல இந்த அம்மாவின் சீரிய சோதனைக்கும், அவர்களுடைய நற்சான்றிற்கும் இன்னும் 400 நானூறு வழக்குகள் அணி வகுத்து நின்றன. இதையும் கண்டு பிடித்தார்கள்.

அந்த 400 வழக்குகளிலும் உள்ள அப்பாவிகளின் உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும். அதனால் சமூக ஆர்வலர்கள் விரைந்து செயல்பட்டார்கள்.

அடுத்து இந்த அம்மா பெண் வடிவில் மருத்துவர் வேஷத்தில் பிணம் தின்னும் இந்த கழுகு.

ஏன் இந்தப் பாதகங்களைச் செய்கின்றார் என்பதைக் கண்டுபிடிக்கும் ஆழமான ஆய்வு ஒன்று செய்யப்பட்டது. அதில் தனக்கு வாக்களிக்கப்பட்ட பதவி உயர்வு, சிறப்பு ஊதியம், சிறப்பான சலுகைகள் இவற்றிற்காகத்தான் செய்கின்றார் என்பது கண்டறியப்பட்டது.

அத்தோடு வேறொரு வகையிலும் பணம் பண்ணுகின்றார் என்பதும் தெரிய வந்தது. அது அவ்வப்போது தன்னால் தகிடு தத்தம் செய்யப்பட்ட வீடியோக்களை அதன் குறிப்பிட்ட பகுதிகளை, மீடியாக்களுக்குத் தந்து பணம் சம்பாதித்திருக்கின்றார். சிஸ்டர் அபையா வழக்கில் கேரள நீதிமன்றம் இந்த அம்மையாரைக் கடுமையாகச் சாடியிருந்தது.

இவையெல்லாம் சந்தேகத்திற்கிட மின்றி நிரூபிக்கப்பட்டதால் இந்த அம்மை யாரை சிறப்பு மருத்துவர் மாலினியை 26 பெப்ருவரி 2006 ஆம் ஆண்டு பதவி நீக்கம் செய்துவிட்டார்கள். அம்மையார் பதவி நீக்கம் செய்யப்பட்டு விட்டார்கள். ஆனால் அவர் கொடுத்த சான்றிதழின் அடிப்படையில் மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றது. இது என்ன நீதிமன்றம்? உண்மையில் இது நீதிமன்ற தீவிரவாதம் தானே.

அப்பழுக்கற்ற அப்பாவிகள், தங்கள் முயற்சிகளை அத்தோடு நிறுத்திவிடவில்லை. தங்களுக்கு மரண தண்டனைதான் என்பதை அப்போதே முடிவு செய்து விட்டார்கள். காரணம் நீதிபதி பட்டவர்த்தனமான அநீதியை இழைப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டார் என்பதை அவர்கள் அன்றே அறிவார்கள். இதனால் தங்கள் மீது சுமத்தப் பட்ட அபாண்டங்களால் உயிரிழந்த வர்கள் அவர்களின் குடும்பத்தாருக்கு உண்மையைச் சொல்லிடத் தலைப் பட்டார்கள். ஒரு திறந்த மடலை அந்த மக்களுக்கு எழுதினார்கள்.

அதன் தமிழாக்கம்

“நாங்கள் உங்களிடம் அன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், எங்களைக் கொலைகாரர்களாகப் பார்க்காதீர்கள். நாங்கள் பழிவாங்கப்பட்டவர்கள். அப்பாவி கள். அந்த சம்பவங்களுக்கும் எங்களுக்கும் எந்த விதத்திலேயும் சம்மந்தமில்லை. நாங்கள் எந்த சதியிலும் தொடர்புடையவர்கள் அல்ல. அதேபோல் நாங்கள் எந்த விதத்திலேயும் லஷ்கரே தொய்பாவுடன் தொடர்பு யுடையவர்கள் அல்ல. அல்காய்தாவின் எந்த மேனுவலையும், இலக்கியத்தையும், நாங்கள் பார்த்ததில்லை. குண்டு செய்யவும் தெரியாது. வைக்கவும் தெரியாது. உண்மையாகச் சொல்லுகின்றோம். நாங்கள் எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை. அதே போல் நாங்கள் எந்த ஒப்புதல் வாக்கு மூலத்தையும் கொடுக்கவில்லை.

மராட்டிய மாநிலத்தின் தீவிரவாத தடுப்புப்படை, பல கேவலமான எண்ணங் களை நிறைவேற்றிடவே எங்களை இப்படி யெல்லாம் ஜோடிக்கின்றது. பொதுமக்கள் தரும் அழுத்தங்கள் தங்கள் எஜமானர்களின் திருப்தி இவற்றையெல்லாம் மனதிற் கொண்டே இதைச் செய்கின்றார்கள். ஆனால் இந்தக் குற்றத்தைச் செய்தவர்கள் சுதந்திரமாகச் சுற்றித் திரிகின்றார்கள். உண்மையில் மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப் படை எந்த துப்பும் கிடைக்காமல் திணறிக் கொண்டிருந்தது. அவர்களுக்குக் குற்றவாளி களைத் தெரியாது என்பதனால் அல்ல. அவர்கள் குற்றவாளிகளைத் தெரிந்தும் கைது செய்திட விரும்பவில்லை என்பதால் தான்.”


**உங்கள் சந்தாவை புதுப்பித்துக் கொள்ள கீழே உள்ள தொலைபேசியை தொடர்பு கொள்ளவும்**

**8148129887**

# கொடூரம் நிறைந்த என்னுடைய 75 நாட்கள் - இஷ்திஷாம் குதூப்



என்னுடைய பெயர் இஷ்திஷாம் குதுபுதுன் சித்திகீ. வயது 29. என்னுடைய தொழில் புத்தக பதிப்பாளர். நான் உத்தரபிரதேசத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தேன். 1996இல் நான் மேல்படிப்பிற்காக மும்பைக்கு சென்றேன். என்னுடைய முகவரி 202, ஸபியா மன்சில், நயா நகர், மிரா ரோடு (ஈஸ்ட்), தானே-401107.

நான் மஹாராஷ்டிரா கல்லூரி, பெலாயிஸ் ரோடு, மும்பை சென்ட்ரலில் என்னுடைய +2 படிப்பை முடித்தேன். நான் பென் என்ற இடத்தில் இருந்த நாராயன் நாகு பாடில் எஞ்சினியரிங் கல்லூரியில் சேர்ந்தேன். மும்பை யுனிவர்சிட்டி வழியாக கெமிக்கல் எஞ்சினியரிங் படிப்பை 1998ல் படித்தேன். என் கல்லூரி வளாகத்திற்கு அருகில் இருந்த ஹாஸ்டலில் தங்கியிருந்தேன். எனினும் என்னுடைய விடுமுறை நாட்களில் நிரந்தர வசிப்பிடமான மிரா சாலைக்கு சென்று விடுவேன்.

27 செப்டம்பர் 2001 அன்று பென் என்னும் இடத்தில் இருந்து என் வீட்டிற்கு செல்லும் வழியில் குர்லா (மேற்கு) மும்பை, ஃபீட்வாலா காம்பவுண்ட் என்ற இடத்தில் இருந்த நூலகத்திற்கு சில புத்தகங்களை படிக்கலாம் என்று சென்றேன். அன்று மாலை 8 மணியளவில் சில காவலர்கள் அந்த நூலகத்திற்கு வந்து அங்கிருந்த ஏழு பேரோடு என்னையும் குர்லா காவல் நிலையத்திற்கு இழுத்து சென்றனர். என்னை என்ன காரணத்திற்காக கைது செய்துள்ளனர் என்பதை சொல்லவில்லை. மேலும் என்னை u/s 10&13 of unlawful activities (prevention) Act 1967 என்ற சட்டப் பிரிவின் கீழ் கைது செய்துள்ளதையும் தெரிவிக்கவில்லை. சிமி என்ற இயக்கம் தடை செய்யப்பட்ட இயக்கம் என்பதை மட்டும் அவர்கள் கூறினார்கள். இந்த காரணத்தையும் அவர்கள் என்னை குர்லா நீதிமன்ற மாஜிஸ்ட்ரேட் முன்னால் ஆஜர் படுத்தும் போது தான் கூறினார்கள்.

உண்மை என்னவெனில் எனக்கு மேலே சொன்ன எந்த இயக்கதோடும் தொடர்பேதும் கிடையாது. குர்லா நீதிமன்ற மாஜிஸ்ட்ரேட் அவர்கள் என்னை ரூ.3000க்கான பிணையில் விடுவித்தார். காவலர்கள் என்னை விடுவிப்பதற்கு பதிலாக நேரே காவல் நிலையத்தில் உள்ள லாக்அப்பில் அடைத்து வைத்து என்னை இதே போன்ற வேறு ஒரு வழக்கில் கைது செய்திருப்பதாக கூறினர். குர்லா காவலர்கள் சற்றும் சம்பந்தமில்லாத விஷயத்தில் என்னை கைது செய்தனர். இதன் மூலம் சமூகத்தில் என் மதிப்பை பாழாக்கினர்.



மேல் எந்த குற்ற வழக்குகளும் இல்லை. நான் மும்பையில் சராசரி வாழ்க்கையை வாழ்ந்து வந்தேன்.

11 ஜூலை 2006ல் மேற்கு இரயில்வேயில் மும்பை இரயிலில் பரபரப்பான நேரத்தில் வெடிகுண்டுகள் வெடித்தபோது நான் வீட்டில் இருந்தேன். மிரா சாலையில் நடந்த குண்டுவெடிப்பை பற்றி நான் கேள்விப்பட்டவுடன் நான் குண்டு வெடித்த இடத்திற்கு காயம் பட்டவர்களுக்கு உதவுவதற்காக சென்றேன். எனக்கு தெரியும் காவலர்கள் இதைப்பற்றியும் என்னிடம் விசாரிக்க வருவார்கள் என்று. ஏனெனில் 2001 முதல் இது அவர்களுக்கு ஒரு வாடிக்கையாகிப் போனது.

இந்த இரண்டாவது வழக்கில் காவலர்கள் என்னை 15 நாள் காவலில் எடுத்து விசாரித்தனர். 15 நாட்களுக்கு பின்னர் ரூ.8000க்கு எனக்கு பிணை ஜாமீன் வழங்கப்பட்டது. அது நிபந்தனை ஜாமீன் என்பதால் என்னால் என் படிப்பை தொடர இயலவில்லை. இதனால் என்னுடைய இஞ்சினியரிங் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

அதன் பின்னர் நான் டி.டி.பி (Desktop Publishing) கற்றுக்கொண்டு மிரா சாலையில் இருந்த என்னுடைய வீட்டிலிருந்து DTP வியாபாரத்தை தொடங்கி "கிராஃபிக் பாயிண்ட்" என்ற பெயரில் நடத்தி வந்தேன். மார்ச் 2004இல் நான் "ஷஹாதா பதிப்பகம்" என்ற புத்தக பதிப்பகத்தை தொடங்கினேன். அதில் இஸ்லாமிய புத்தகங்களும் பொது அறிவு புத்தகங்களும் வெளியிடப்பட்டன. அதற்கு முன் ஜூலை 2003ல் நான் இந்திரா காந்தி திறந்தவெளி பல்கலை கழகத்தில் பி.எஸ்.சி படிப்பிற்கு சேர்ந்திருந்தேன். ஆனால் 2006 ஜூலை 11 மும்பை இரயில் குண்டு வெடிப்புகள் வழக்கில் என்னை பொய்யாக இணைத்ததன் மூலம் என்னுடைய மொத்த வாழ்க்கையும் நிர்மூலமாகிவிட்டது.

குர்லா காவல்நிலையத்தில் இருந்த என்னைப்பற்றிய பழைய தகவல்களின் அடிப்படையில் என்னை அடிக்கடி கைது செய்வது வாடிக்கையாகிப்போனது. எப்போதெல்லாம் எங்கெல்லாம் ஒரு சம்பவம் நடந்தாலும் நான் காவலர்களால் அழைத்து விசாரிக்கப்பட்டேன். பழைய இரண்டு குர்லா காவல்நிலைய பொய் வழக்குகளை தவிர என்

இதன்படியே மிரா சாலை காவல்நிலையத்தை சேர்ந்த மூத்த காவல் ஆய்வாளர் முராடே என்பவர் 13 ஜூலை 2006 அன்று மாலை என் வீட்டிற்கு வந்தார். அடுத்த நாள் காவல்நிலையத்திற்கு வரும்படி என்னை பணித்தார். 14 ஜூலை 2006 அன்று காலை 11 மணிக்கு நான் மிரா சாலை காவல்நிலையத்திற்கு ஆய்வாளர் முராடே அவர்களை பார்க்க சென்றேன்.

அவர் நான் எங்கிருக்கிறேன், என் தொலைபேசி எண் என்ன? என்றெல்லாம் கேள்வி கேட்டார். அதற்கு என்னுடைய தொலைபேசி எண் (28115084) என்பதை கொடுத்துவிட்டு வந்தேன். மீண்டும் தேவைப்பட்டால் என்னை அழைப்பேன் என்று ஆய்வாளர் கூறி என்னை அனுப்பினார்.

24 ஜூலை 2006 அன்று காலை 11 மணியளவில் மும்பை தீவிரவாத தடுப்புப் படையை சேர்ந்த உதவி ஆய்வாளர் Anti-Terrorism Squad (ATS) unit-II, சுனில் மானே என்பவர் என் வீட்டிற்கு வந்து என்னை நாக்பாடா தீவிரவாத தடுப்புப்படை அலுவலகத்திற்கு அன்றைய தினமே 3 மணிக்குள்

வரும்படி கூறினார். நான் 2 மணியளவில் அங்கு சென்று விட்டேன்.அங்கே உதவி ஆய்வாளர் சுனில் மானே என்பவர் மூத்த அதிகாரிகள் என்னை விசாரிக்க இருப்பதாக கூறி என்னை போய் வாடாவில் உள்ள (Bhoiwada) தீவிரவாத தடுப்பு படை அலுவலகத் திற்கு என்னை அழைத்து சென்றார்.



Torture position 1: Hitting the victim by flour mill belt on the inner part of hand, buttock and feet about 200 times per spell leaving part of hand and feet in blue colour with strong pain during torture. Other body parts too were hit by this belt any part of body


அங்கே அவர் என்னை இரண்டாவது தளத்தில் உள்ள லாக்அப்-பிற்கு அழைத்து சென்றார். அங்கே அவர் ஆய்வாளர் விஷால் ஜோஷி (Vilas Joshi), ஆய்வாளர் தினேஷ் ஆஹிர், ஷைலேஷ் கேக்வாட் (Shailesh Gaekwad) இன்னும் மற்றவர்களையும் அழைத்தார். அவர்கள் என்னை லத்திகளாலும் பெல்டாலும் மாறி மாறி அடித்தனர். இது மாலை வரை தொடர்ந்தது. பின்னர் அவர்கள் போய்வாடாவில் இருந்து நாக்படா Nagpada என்ற இடத்திற்கு கைவிலங்கிட்டு அழைத்து சென்றனர். என்னை என் பெற்றவர்களுக்கோ என் உறவினர்களுக்கோ தகவல் தெரிவிக்க அனுமதிக்கவில்லை.

இவ்வாறு போய்வாடாவில் இருந்து நாக்படா அழைத்து செல்லும் போது என்னை சோதனை செய்து என்னுடைய பாக்கெட்டுகளை காலி செய்தனர். என்னுடைய செல்போன், ஏ.டி.எம் அட்டை (ATM), பான் அட்டை PAN card மற்றும் ரூ.20,000ஐயும் எடுத்துக் கொண்டனர். அது நான் ஒரு கணினி வாங்க வைத்திருந்த பணம். உதவி ஆய்வாளர் சுனில் மானே பின்னர் செல்போன், ஏ.டி.எம் அட்டை (ATM), பான் அட்டை PAN card பற்றி மட்டும் பஞ்சநாமாவில் பதிவேற்றிக் கொண்டார். என்னுடைய பணம் ரூ.20,000/- தங்களுக்குள் பங்கிட்டு கொண்டனர். 29 ஜூலை 2006ல் உதவி ஆய்வாளர் சுனில் மானே மீண்டும் பஞ்சநாமாவை தயாரிக்கும் போது நான் ரூ.25,000/- பற்றி குறிப்பிடப்படவில்லை என்பதை கவனித்து அவரிடம் அது பற்றி கேட்டேன். அதற்கு அவர் உன் பணத்தை மறந்து விடு என பதிலளித்தார்.

தீவிரவாத தடுப்புப்படை என்னை ஜூலை 24 2006 முதல் ஜூலை 29 2006 வரை சட்டவிரோதமாக காவலில் வைத்திருந்தது. என்னை ஜூலை 29 2006 வரை மாஜிஸ்ட்ரேட் முன்னால் ஆஜர்படுத்தவில்லை. இந்த நாட்களில் அவர்கள் தினமும் என்னை பல மணி நேரம் அடித்தார்கள்.

நான் காவலில் இருந்த போதே ஏ.டி.எஸ் என் வீட்டையும் சோதனை செய்தது.நான் சமீபத்தில் வெளியிட்டிருந்த எல்லா புத்தகங்களையும் அவர்கள் தங்கள் கையகப் படுத்திக் கொண்டனர். அத்துடன் மதிப்பு மிக்க பல பொருட்களையும் அவர்கள் என் வீட்டிலிருந்து கையகப்படுத்திக் கொண்டனர். அதில் என் கணினி, பிரிண்டர், டிரில் மெசின், டேப் ரிகார்டர், போர்வைகள் மற்றும் ரூ.10,000மும் அடக்கம். இதனை நான் ஏ.டி.எஸ் அலுவலகத்தில் கண்டேன்.

ஏ.டி.எஸ் அதிகாரிகள் அதில் “ஜிஹாதி அஸ்கர்”, “இஸ்லாத்தின் உயிர் ஜிஹாத் ஃபீ ஸபீலில்லாஹ்” என்ற இரண்டு புத்தகங்களை தேர்ந்தெடுத்து கொண்டனர். இவை இரண்டிலும் இஸ்லாத்தில் ஜிஹாதினுடைய அடிப்படைகள், குர்ஆன் வசனங்கள் மற்றும் நபி (ஸல்) அவர்களின் வாசகங்கள் இருந்தன. இதில் பிரச்சனைக்குரிய எந்த விஷயங்களும் இல்லை. மேலும் இவை எளிதாக எல்லா கடைகளிலும் கிடைக்கக் கூடியவை.




Torture position 2: Giving shock using an electric current machine by making the victim nude. They tie wire on thumbs of legs and private parts of body, then current is passed at regular intervals.



Torture position 3: After removing clothes, the victim is made to sit on floor with both hands tied behid by rope; thereafter both legs are stretched in opposite direction making 180⁰ angle.

இந்த இரண்டு புத்தகங்களின் அடிப்படையில் அவர்கள் என்னை 29 ஜூலை 2006ல் கைது செய்து மும்பை மாஸ்காவூன் நீதிமன்றத்தின் கூடுதல் தலைமை மெட்ரோபொலிடன் மாஜிஸ்ட்ரேட் முன்னால் ஆஜர்படுத்தினர். அங்கு சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம் 1967 10 மற்றும் 13ன் 10&13 of unlawful activities (prevention) Act 1967கீழ் 15 நாட்கள் காவல்துறை கஸ்டடிக்கு எடுத்துக்கொண்டனர். குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும் போது "ஜிஹாத் ஃபீஸபீலில்லாஹ் ஏன்?" என்ற புத்தகமும் என்னிடமிருந்து கைப்பற்றப் பட்டதாக கூறப்பட்டிருந்ததை கண்டு ஆச்சர்யமடைந்தேன். ஏனென்றால் அந்த புத்தகம் என்னால் வெளியிடப்பட்ட புத்தகம் அல்ல.

என்னை சட்டவிரோதமாக கைது செய்தது பற்றியும் என்னை சித்ரவதை செய்தது பற்றியும் மாஜிஸ்ட்ரேட் அவர்களிடம் கூற விரும்பினேன். ஆனால் ஏ.டி.எஸ் நான் எதையும் மாஜிஸ்ட்ரேட் இடம் கூறக்கூடாது என்றும் அவ்வாறு நான் கூறினால் என்னை இன்னும் அதிகமாக சித்ரவதை செய்வோம் என்றும் கூறி மிரட்டியதால் என்னால் எதையும் சொல்ல இயலாமல் போனது.

அதன் பின்னர் ஏ.டி.எஸ் என்னை யுனிட்-2 அலுவலகத்திற்கு கொண்டு சென்று அடிக்க ஆரம்பித்தனர். என்னை ஏன் கைது செய்துள்ளனர் என்பது பற்றி அவர்கள் எதையும் கூறவில்லை. ஆனால் அடிப்பது மட்டும் நிற்கவே இல்லை. அவ்வாறு சித்ரவதை செய்யும் போது "நீ முஸ்லிம் என்பதால் தான் உன்னை அடிக்கிறோம்" என்று கூறினார். ஒவ்வொரு அடிக்கும் அவர்கள் என் மதத்தை கேவலப்படுத்தும் விதமாக ஏதாவது கூறி அடித்தனர். "உன்னை இங்கே காப்பாற்றுவதற்கு யாரும் கிடையாது" என்றும் கூறி அடித்தனர்.

ஆகஸ்ட் 3 2006 அன்று நான் உதவி ஆய்வாளர் சைலேஷ் கெய்க்வாட், சுனில் மானே, ஆய்வாளர் விலாஸ் ஜோஷி போன்றோரால் கடுமையாக சித்ரவதை செய்யப்பட்டேன். மூத்த ஏ.டி.எஸ் அதிகாரிகள் முன்பு குண்டு வெடிப்புகளை நான் தான் நிகழ்த்தினேன் என்று ஒப்புக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறினன். சித்ரவதைகளை தாங்க முடியாமல் நானும் அவர்கள் என்ன சொன்னாலும் செய்கிறேன் என்று ஒப்புக்கொண்டேன்.

அதன் பின்னர் அவர்கள் ஏ.டி.எஸ் தலைமை அலுவலகத்திற்கு அழைத்து சென்றனர். அங்கே ஏ.டி.எஸ் தலைவர் கே.பி.ரகுவான்ஷி மற்றும் துணை ஆணையாளர் நாவல் பஜாஜ் ஆகியோர் அமர்ந்திருந்தனர். நான் அவர்களிடம் உதவி ஆய்வாளர் சைலேஷ் கெய்க்வாட், சுனில் மானே, ஆய்வாளர் விலாஸ் ஜோஷி ஆகியோர் என்னை சித்ரவதை செய்தது பற்றியும் நான் ஓர் அப்பாவி ஆனால் இவர்கள் என்னை இந்த வழக்கில் கோர்த்து விடப்பார்க்கின்றனர் என்பது பற்றியும் புகார் கூறினேன்.

ஆனால் ஆச்சரியப்படும்விதமாக கே.பி.ரகுவான்ஷி என்னை அறைந்து மற்ற அதிகாரிகளிடம் இவனுக்கு சித்ரவதை போதவில்லை. இவனை போய்வாடாவுக்கு கொண்டு சென்று கடுமையாக சித்ரவதை செய்யுங்கள் என்று கூறிவிட்டார். நான்



Torture position 4: Victim is tied to a chair so that he is unable to move his head in any direction; water is dropped slowly on his scalp for hours causing very strong pain in neck and head



Torture position 5: Victim is tied upside down, both legs and hands also are tied by rope, then water is poured into his nose at regular intervals for about one hour

*ஏ.டி.எஸ்-இன் மூத்த அதிகாரிகள் மீதும் இளைய அதிகாரிகள் மீதும் நம்பிக்கை இழந்துவிட்டேன். ஏனெனில் இவ்வாறு அப்பாவிகளை தொடர்பு படுத்துவது ஏ.டி.எஸ்-இன் மூத்த அதிகாரிகள் ஆணைப்படிதான் நடக்கின்றன. இதில் ஏ.டி.எஸ்-இன் தலைவரும் அடக்கம்.*

*அடுத்த நாள் 5 ஆகஸ்ட் 2006 அன்று ஆய்வாளர் சுனில் தேஷ்முக் என்பவர் என்னை ஜூஹூவில் உளள சந்தன் சௌக்கி என்ற இடத்திற்கு அழைத்து சென்றனர். அங்கே அதிகாரிகள் நார்கோ அனாலிஸிஸ் (அரை மயக்க நிலையில் உண்மை அறியும் சோதனை) டெஸ்ட் செய்தனர். இது சட்ட விரோதமானது. நீதிமன்ற ஆணை எதுவும் பெறப்படாமல் செய்யப்பட்டது. மும்பையின் ஃபாரன்சிக் சயின்ஸ் லேப் (Forensic Science Laboratory) அதிகாரிகளும் அங்கு வந்திருந்தனர்.*

*சந்தன சௌக்கிக்கு அழைத்து செல்லும் முன்னர் அவர்கள் என்னை மருத்துவ சோதனை செய்ய கே.ஈ.எம் (KEM) மருத்துமனைக்கு அழைத்து சென்றனர். அங்கே நான் என்னை சித்ரவதை செய்ததைப்பற்றி புகார் அளித்தேன். அங்கிருந்த மருத்துவ அதிகாரி எக்ஸ்-ரே எடுக்க பரிந்துரைத்தார். சில மருந்துகளையும் கொடுத்தார். ஆயினும் மருத்துவ அறிக்கையில் இவை மறைக்கப்பட்டு நான் சித்ரவதை செய்யப்பட்டது எதுவும் பதிவாகவில்லை.*

*அந்த சட்டவிரோதமான நார்கோ அனாலிஸிஸ் சோதனைக்கு பின்னர் துணை ஆணையாளர் நாவல் பஜாஜ் அவர்கள் என்னிடம் நீ அப்பாவி என்பதை உறுதிப்படுத்தி கொண்டேன். உன்னை நான் நீதிமன்ற காவலுக்கு 12 ஆகஸ்ட் 2006 அன்று அனுப்பி விடுவேன் என்று கூறினார். எனினும் அடுத்த நாள் நான் நாக்பாடா யுனிட் 2 அலுவலகத்திற்கு ஆய்வாளர் தினேஷ் ஆஹிர் என்பவரால் அழைத்து செல்லப்பட்டேன். அங்கு அவரும் இன்னும் சில அதிகாரிகளும் என்னுடைய மர்மஸ்தானங்களில் மின்சாரம் பாய்ச்சி சித்ரவதை செய்தனர். 10 மணி நேர சித்ரவதைக்கு பின்னர் அவர்கள் என்னை போய்வாடா லாக்அப்பில் தள்ளினர்.*

*12 ஆகஸ்ட் 2006 அன்று ஏ.டி.எஸ் அதிகாரிகள் என்னை மும்பை இரயில் குண்டுகள் வெடிப்பு வழக்கில் கைது செய்தனர். 2 நாட்கள் காவல்துறை விசாரணைக்கு எடுத்துக் கொண்டனர். 14 ஆகஸ்ட் 2006 அன்று என்னை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைப்பதாக அவர்கள் கூறினர். ஆனால் 14 ஆகஸ்ட் 2006 அன்று அவர்கள் என்னை 25 ஆகஸ்ட் 2006 வரை காவல்துறை விசாரணைக்கு எடுத்துக் கொண்டனர். அதே நாளில் நான் விஜய் சாலேஸ்கர் அவர்களின் வழிப்பறிக்கு எதிரான படை அலுவலகத்திற்கு அழைத்து செல்லப் பட்டேன். அதுவும் ஒரு சித்ரவதைக்கூடமே. அங்கே அதிகாரிகள் என்னை பெல்ட்டாலும் தடிகளாலும் அடித்தனர். பின்னர் என்னை ஜன்னலோடு சேர்த்து கைவிலங்கிட்டனர். என்னை தூங்கவிடவில்லை. அன்றைய இரவு முழுவதும் நான் நின்று கொண்டே இருந்தேன்.*

*அதே இரவில் அதாவது 59வது சுதந்திர தின இரவில் மும்பை இரயில் குண்டு வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருந்த ஃபைசல் ஷேக் என்பவரின் குடும்பத்தாரின் மீது விஜய் சாலேஸ்கரின் ஆட்கள் கொடுரமான தாக்குதலை நிகழ்த்தினர். தேசத்தந்தை காந்தி*

அவர்கள் காட்டித்தந்த அஹிம்சா வழியில் சுதந்திரம் பெற்ற நம் நாட்டிற்கு இந்த சித்ரவதைகள் மிகப்பெரியதோர் அவமானம். எங்கள் முன்பே விஜய் சாலேஸ்கரின் ஆட்கள் பைசலின் 75 வயது தந்தையின் ஆடைகளை களைந்து நிர்வாணப்படுத்தி தடியாலும் பெல்டாலும் அடித்தனர். பைசலின் சகோதரரின் மனைவியின் முகத்திரையை விலக்கி அந்த பெண்ணையும் அவமானப்படுத்தினர்.

21 ஆகஸ்ட் 2006 அன்று ஆய்வாளர் விலாஷ் ஜோஷியும் நாக்பாடா யுனிட்டும் சேர்ந்து என்னை உஜ்ஜயினிக்கு இரயிலில் அழைத்து சென்றனர். அங்கே ஏ.டி.எஸ் அதிகாரிகள் உஜ்ஜயினிக்கு 20 கி.மீ தொலைவில் ஒரு குடிசையை காட்டினர். அதன் பிறகு அவர்கள் ஜூலை முதல் வாரத்தில் அந்த இடத்தில் நடந்த ஒரு சந்திப்பில் நான் கலந்து கொண்டதாக கூறினர். நான் அதிர்ச்சியடைந்தேன். ஏனெனில் அந்த சந்திப்பில் நான் கலந்து கொண்டதாக பொய்யாக இந்த வழக்கில் என்னை இணைக்கின்றனர். 24 ஆகஸ்ட் 2006 அன்று நான் போய்வாடா லாக்அப்பிற்கு மீண்டும் அழைத்து செல்லப்பட்டேன்.

25 ஆகஸ்ட் 2006 அன்று நான் மஸ்காவூன் நீதிமன்றத்தின் மாண்பு மிகு நீதியரசர் அவர்களின் முன்னால் ஆஜர்படுத்தப்பட்டேன். என்னை மீண்டும் அந்தேரி ரயில்வே காவலர்கள் பதிவு செய்திருந்த மும்பை ரயில் குண்டு வெடிப்பின் மற்றொரு வழக்கிற்காக 8 செப்டம்பர் 2006 வரை ஏ.டி.எஸ் தங்களுடைய காவலில் என்னை எடுத்துக்கொண்டனர். தொடர்ந்து 6 நாட்கள் என்னை அவர்கள் தூங்கவிடவில்லை.

இந்த காலகட்டத்தில் குஜராத் மாநிலம் அஹ்மதாபாத் மாவட்டத்தை சேர்ந்த டி.ஜி.வன்சாரா என்பரும் என்னை விசாரித்தார். அவரும் என்னை அசிங்கப்படுத்தினார், சித்ரவதை செய்தார். அவர் என்னை பார்த்து "நீ மும்பையில் இருக்கிறாய், அதனால் தான் உயிரோடு இருக்கிறாய், இதுவே குஜராத்தில் உன்னை கைது செய்து இருந்தால் உனக்கு என்கௌண்டர் நடந்து முடிந்திருக்கும்" என்று கூறினார்.

டி.ஜி.வன்சாரா நாவல் பஜாஜ் என்பவரை பார்த்து, "கைது செய்யப்பட்டவர்கள் முஸ்லிம்கள். பொதுமக்களின் எதிர்ப்பையும் அரசாங்கத்தில் இருந்து வரும் அழுத்தத்தையும் தவிர்க்க அவர்களை வெடிகுண்டு வழக்குகளில் சம்பந்தப்படுத்துங்கள். தேவைப்பட்டால் யாரை வேண்டுமானாலும் சுட்டு கொல்லுங்கள். அவர்கள் கஸ்டடியில் இருந்து தப்பிக்கும் போது சுட்டதாக காட்டுங்கள்" என்றும் கூறினார்.

05 செப்டம்பர் 2006 அன்று நான் ஏ.டி.எஸ். தலைமையகத்திற்கு கொண்டு செல்லப்பட்டேன். அங்கே காவல்துறை ஆணையாளர் ஏ.என்.ராய், ஏ.டி.எஸ். தலைவர் கே.பி.ரகுவான்ஷி, கூடுதல் ஆணையாளர் எஸ்.கே.ஜெய்சவால், ஜெய்ஜீத் சிங் போன்றோர் இருந்தனர். எஸ்.கே.ஜெய்சவால் அவர்களும் ஜெய்ஜீத் சிங் அவர்களும் அறையை விட்டு வெளியேறிவிட்டனர். கே.பி.ரகுவான்ஷி என்னிடம் "எங்களால் உண்மை குற்றவாளிகளை பிடிக்க முடியவில்லை, அரசாங்கம் எங்களை கைது செய்யப்பட்டவர்களை இவ்வழக்கில் தொடர்புபடுத்தி வழக்கை முடிக்க அழுத்தம் தருகிறது. எனவே நாங்கள் பொய்வழக்கு போட திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். நாங்கள் உன்னை இவ்வழக்கில் அப்ரூவராக காட்டுவோம், அதனால் சில மாதங்களில் நீ விடுவிக்கப்பட்டு விடுவாய்" என்று கூறினார். மேலும் அப்ரூவராக மாற இருபத்தைந்து லட்சம் ரூபாயும் தருவதாக கூறினார்.

நான் அதனை மறுத்துவிட்டு கூறினேன், "நான் ஓர் அப்பாவி, எனவே குற்றத்தை ஒப்புக்கொள்வது அல்லது அப்ரூவராக மாறுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. அடுத்த நாள் என்னை பிரயின் மேப் சோதனை, பாலிகிராப் சோதனை, நார்கோ அனாலிசிஸ் சோதனை (உண்மை அறியும் சோதனை) போன்றவற்றை மேற்கொள்வதற்காக பெங்களூர் அழைத்து செல்லப்பட்டேன். ஆய்வாளர் ராஜா மங்கே மற்றும் பிரசாத் கந்தேகர் என்னை பெங்களூருக்கு ஜெட் ஏர்வேய்ஸ்-இல் அழைத்து சென்றனர். பெங்களூரில் நான் ஃபாரன்சிக் சயின்ஸ் ஆய்வகத்திற்கு அழைத்து செல்லப்பட்டேன். அங்கே பிரயின் மேப்பிங் சோதனையும் (brain mapping) பாலிகிராஃபிக் சோதனையும்

(polygraph test) டாக்டர் எஸ். மாலினி என்பரால் நடத்தப்பட்டது. (குறிப்பு டாக்டர். எஸ்.மாலினி செய்த தகிடுதத்தங்கள் தனியாக இந்த இதழில் கொடுக்கப்பட்டுள்ளது)

அடுத்த நாள் நான் பௌரிங் அண்டு லேடி குர்ஷன் மருத்துவமனைக்கு (Bowring and Lady Cursion Hospital) நார்கோ அனாலிசிஸ் சோதனைக்காக அழைத்து செல்லப்பட்டேன். இந்த சோதனைகள் எல்லாம் நடத்தி முடிந்த பின்னர் 8 செப்டம்பர் 2006 அன்று நான் மீண்டும் மும்பைக்கு அழைத்து வரப்பட்டேன்.

மும்பை திரும்பும் போது விமானத்தில் ஆய்வாளர் ஷெல்கே என்னிடம் இந்த சோதனைகள் நான் ஒரு நிரபராதி என நிரூபித்துள்ளதாகவும் விரைவில் நான் விடுவிக்கப்பட்டு விடுவேன் என்றும் கூறினார். எனினும் ஏ.டி.எஸ் அதிகாரிகள் என்னை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 14 செப்டம்பர் 2006 வரை போலிஸ் கஸ்டடியில் எடுத்துக் கொண்டனர். பாந்த்ரா ரயில்வே காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றொரு மும்பை தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் என்னை கைது செய்தனர்.

10 செப்டம்பர் 2006ல் மற்றொரு நார்கோ அனாலிசிஸ் பரிசோதனைக்காக நான் பெங்களூருக்கு மீண்டும் அழைத்து செல்லப்பட்டேன். 12 செப்டம்பர் அன்று எனக்கு நார்கோ அனாலிசிஸ் சோதனை (உண்மை அறியும் சோதனை) டார்டர் எஸ்.மாலினி என்பவரால் மேற்கொள்ளப் பட்டது. டாக்டர் மாலினி என்னிடம் கேட்ட அனைத்து கேள்விகள் அதற்கு நான் அளித்த பதில்கள் இவை எல்லாம் எனக்கு நன்றாக புரிந்தது. அந்த சோதனையின் போது நான் உணர்வுடன் இருந்தேன். அடுத்த நாள் 13 செப்டம்பர் 2006 அன்று நான் மற்றொரு அதிகாரியால் நான் மும்பைக்கு திருப்பி அழைத்துவரப்பட்டேன்.

காவல் ஆய்வாளர் பிரசாத் கந்தேகர் என்னை நாக்பாடாவில் உள்ள தீவிரவாத தடுப்பு படையின் தலைமை அலுவலகத்திற்கு அழைத்து சென்று அதன் தலைவர் கே.பி.ரகுவான்ஷி அவர்களின் முன்னால் என்னை நிறுத்தினார். அவர் என்னை பார்த்து “நீ நீண்ட நாட்கள் ஓய்வு எடுத்து விட்டாய், இப்போது உன் எலும்பை நொறுக்கும் நேரம் வந்து விட்டது “ என்று கூறினார்.

“நீ உன்னை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தால் நான் சொல்வது போல் செய், அப்ரூவராக மாறிவிடு” என்று கூறினார். நான் அவர் சொன்னதை ஏற்றுக் கொள்ளாமல் பின் வருமாறு கூறினேன்,”நான் ஓர் அப்பாவி, நீங்கள் எல்லாரும் எனக்கு சற்றும் சம்பந்தமில்லாத ஒரு குற்றத்தில் என்னை கோர்த்து விடப் பார்க்கிறீர்கள்.”

இது ரகுவான்ஷியை ஆத்திர மூட்டியிருக்க வேண்டும். அவர் ஆய்வாளர் ‘தாஜ்னே’வைப் பார்த்து என்னை ‘கலாசௌக்கி’ காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று நான் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளும் வரை என்னை அடிக்கும்படி கூறினார். தாஜ்னே என்னை கலாசௌக்கி காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார். அங்கே கூடுதல் ஆணையர் ஜய்ஜீத் சிங், துணை ஆணையர் நாவல் பஜாஜ், உதவி ஆணையர் சதாசிவ் லக்ஷ்மண் படீல், ஆய்வாளர் ராஜா மந்தகே, தாஜ்னே, கன்வில்கர் மற்றும் இதர காவலர்கள் என்னை மூன்றாம் தர (third degree torture) சித்ரவதை முறைகளை பயன்படுத்தி அடிக்க ஆரம்பித்தனர்.

அப்படி சித்ரவதை செய்யும் போது அவர்கள் நார்கோ பரிசோதனையின் மாற்றியமைத்து திருத்தப்பட்ட (edited CD) குறுந்தகட்டினை எனக்கு போட்டு காட்டினர். நான் அந்த குறுந்தகடு மாற்றியமைக்கப்பட்டு திருத்தப்பட்டுள்ளது என கூறினேன். அவர்கள் கருணையே இல்லாமல் என்னை அடித்து அவர்கள் விருப்பப்படி என்னை நடந்து கொள்ள கூறினார்கள். 18 செப்டம்பர் 2006 வரை இந்த தொடர் சித்ரவதை நடந்தது. அன்றைய தினமே காவல் ஆய்வாளர் கன்வில்கர் என்னிடம் அவர் காவல்துறை ஆணையாளர் ஏ.என்.ராய் இடம் என்னை நீதிமன்ற காவலில் 22 செப்டம்பர் அன்று எடுக்க பேசியுள்ளதாகவும் ஒரு மாதத்திற்கு பிறகு என்னை இந்த வழக்கில் இருந்து விடுவித்து விடுவதாகவும் இரகசியமாக கூறினார்.

ஆயினும் செப்டம்பர் 22 2006 அன்று என்னை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்போது ஆய்வாளர் கன்வில்கர் என்னிடம் மூத்த அதிகாரிகள் எங்களை இந்த வழக்கில் பொய்யாக இணைக்க திட்டமிட்டுள்ளனர் என்று கூறினார். அவர் மேலும் என்னிடம், "நீ இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதற்கு ஏ.டி.எஸ் இடம் போதுமான ஆதாரமில்லையாதலால் இந்த வழக்கில் இருந்து இரண்டு வருடங்களில் விடுவிக்கப்பட்டு விடுவாய் அல்லது விடுதலை செய்யப்பட்டு விடுவாய்" என்றும் கூறினார்.

24 செப்டம்பர் 2006 அன்று என்னை மீண்டும் நார்கோ அனாலிசிஸ் பரிசோதனைக் காக (உண்மை அறியும் சோதனை) பெங்களூருக்கு அழைத்து சென்றனர். அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகளை சமாதானப்படுத்தவே இந்த தொடர் நார்கோ அனாலிசிஸ் பரிசோதனைகள் என்பதை நான் புரிந்து கொண்டேன். நார்கோ அனாலிசிஸ் பரிசோதனையில் குற்றம் சாட்டப் பட்டவர் களிடம் இருந்து சில குறிப்பான வார்த்தைகள் வெளிப்பட வேண்டும் என ஏ.டி.எஸ் விரும்பியது. அதன் மூலம் குற்றம் சாட்டப்பட்டவர்களை குற்றவாளியாக்க அது உதவும்.

ஏ.டி.எஸ் நார்கோ அனாலிசிஸ் வீடியோ குறுந்தகட்டை சரியான முறையில் திருத்தியமைக்க வேண்டும் என்று விரும்பியது. இதனை என் மீதும் என்னுடன் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் மூன்று முறை நார்கோ அனாலிசிஸ் பரிசோதனை செய்த டாக்டர் எஸ். மாலினி என்பவரின் உதவியுடன் அவர்கள் செய்து கொண்டனர். இந்த மோசடியில் ஏ.டி.எஸ் உடன் டாக்டர் மாலினியும் சேர்ந்து ஈடுபட்டார்.

27 செப்டம்பர் 2006 அன்று நான் மீண்டும் மும்பைக்கு கொண்டு வரப்பட்டேன். 28 செப்டம்பர் 2006 அன்று செவ்ரி செஷன்ஸ் கோர்ட்டில் (Sewri Session Court) சிறப்பு நீதிபதி திரு.அபய் திப்ஸே (Abhay Thipsay) அவர்கள் முன் ஆஜர்படுத்தப்பட்டேன். ஏ.டி.எஸ் என்னை 9 அக்டோபர் 2006 வரை எம்.சி.ஓ.சி.ஏ (மஹாராஷ்டிர திட்டமிடப்பட்ட



டாக்டர் மாலினி

குற்றங்களை கட்டுப்படுத்தும் சட்டம் 1999) (Maharashtra control of organised crime Act 1999) என்ற சட்டத்தின் கீழ் காவல்துறை விசாரணைக்கு எடுத்துக் கொண்டனர்.

29 செப்டம்பர் 2006 அன்று நான் தொடர்ச்சியாக 5 மணி நேரம் மூன்றாம் தர சித்ரவதைக்கு காவல்துறை ஆய்வாளர் சச்சின் கதம் என்பவரால் உள்ளாக்கப்பட்டேன். பின்னர் நான் காவல்துறை ஆணையாளர் ஏ.என்.ராய் முன்பும் ஏ.டி.எஸ் தலைவர் கே.பி.ரகுவான்ஷி முன்பும் நிறுத்தப்பட்டேன். இரண்டு மூத்த அதிகாரிகளும் என்னை பார்த்து சிரித்தனர். பின்னர் கே.பி ரகுவான்ஷி என்னை பார்த்து இந்த வெடிகுண்டு வழக்கில் நான் சிக்கவைக்கப் பட்டுள்ளேன் என்றும் இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்பதை மறந்து விடு என்றும் கூறினார். இந்தியா ஓர் இந்து ராஜ்யமே. இங்கு முஸ்லிம்களுக்கு இடமில்லை என்றும் கூறினார். இந்தியாவில் உள்ள முஸ்லிம்களுக்கு ஒன்று ஜெயில் அல்லது எதிர்தாக்குதல்கள் (என்கவுன்டர்) தான் என்றும் கூறினார். நீண்டநாள் சிறைவாசத்திலிருந்து இப்போது உன்னை காப்பாற்றக்கூடிய ஒரே வழி நீ அரசு தரப்பு சாட்சியாக (அப்ரூவராக) மாறுவது தான் என்றும் கூறினார்.

நான் அப்ரூவராக மறுத்துவிட்டு என்னை காப்பாற்றக்கூடிய ஒரே வழி உண்மை குற்றவாளிகளை கைது செய்வதும் அப்பாவிகளை விடுதலை செய்வதுமே என்று கூறினேன். இதற்கு ஏ.என்.ராய் அவர்கள் என்னிடம் மத்திய மாநில

அரசின் உள்துறை அமைச்சர்களிடம் இருந்து தனக்கு அழுத்தங்கள் வருவதாக கூறினார். உங்களை இவ்வழக்கில் இணைப்பதை தவிர என்னால் எதுவும் செய்ய இயலவில்லை உங்களுக்கு எதிராக சாட்சியங்களை உருவாக்குவதை தவிர்த்து எனக்கு வேறு வழியில்லை என்றும் கூறினார். நான் என்னுடைய மூத்த அதிகாரிகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்றும் கூறினார். அதன் பின்னர் ஏ.என்.ராய் என்னிடம் நாளை பத்திரிகையாளர் சந்திப்பு உள்ளது, நீங்களெல்லாம் நாளை தீவிரவாதிகள் என பிரபல்யமாகி விடுவீர்கள் என்றும் கூறினார்.

3 அக்டோபர் 2006 அன்று துணை ஆணையர் நாவல் பஜாஜ் அவர்கள் என்னை சந்திக்க போய்வாடா லாக்அக்பிற்கு வந்தார். அங்கே சில வெற்று காகிதங்களிலும் சில எழுதப்பட்ட காகிதங்களிலும் என்னை கையெழுத்திட சமாதானப்படுத்தினார். ஆனால் நான் எந்த தாளிலும் கையெழுத்திடவில்லை. அவர் என்னை அசிங்கமாக திட்டி நான் எதற்கு வளைந்து கொடுக்காமல் பிடிவாதமாக இருப்பதாகவும் சித்ரவதை செய்யாமல் ஏற்க மாட்டேன் என்றும் கூறினார். அதன் பின்னர் காலாசௌக்கி காவல்நிலையத்திற்கு சித்ரவதைக்காக அழைத்து செல்லப்பட்டேன்.

6 அக்டோபர் 2006 அன்று ஆய்வாளர் தாஜ்னே என்னை துணை ஆணையர் தத்தாராய் கரலே என்பவர் முன் நிறுத்தினார். துணையர் ஆணையர் என் பெயரை கேட்டார் பின்னர் மாதுங்கா பொது லாக்அப்-இல் 22 மணி நேரம் அடைத்து வைத்தார். இந்த சமயத்தில் ஆய்வாளர் தாஜ்னேவும் தியோரேவும் என்னை சித்ரவதை செய்தனர். அடுத்த நாள் அவர்கள் கொடுக்கும் பேப்பரில் கையெழுத்திட வேண்டும் என்றும் மிரட்டினர்.

அடுத்த நான் என்னை துணை ஆணையர் தத்தாராய் கரலே அவர்களின் அலுவலகத்திற்கு அழைத்து சென்றனர். அங்கே அவர் என்னை சில எழுதப்பட்ட காகிதங்களில் கையெழுத்திட நிர்ப்பந்தித்தார். தாஜ்னேவும் தியோரேவும் துணை ஆணையரின் கேபினுக்குள் இருந்தனர். நான் நிர்ப்பந்திக்கப்பட்டு அழுத்தத்தின் காரணமாகவும் அச்சுறுத்தல்களின் காரணமாகவும் அந்த காகிதங்களில் கையெழுத்திட்டேன்.

பின்னர் நான் மெட்ரோபொலிடன் தலைமை மாஜிஸ்ட்ரேட் முன்னால் ஆஜர் படுத்தப்பட்டேன். ஏ.டி.எஸ் அதிகாரிகளின் முன்னால் மாஜிஸ்ட்ரேட் என்னிடம் என் பெயரையும் நான் எப்போது முதலில் கைது செய்யப்பட்டேன் என்பதையும் கேட்டார். என்ன நடக்கிறது என்பது எனக்கு புரியவில்லை. பின்னர் நான் போய்வாடா லாக்அப்பிற்கு அனுப்பப் பட்டு விட்டேன்.

8 அக்டோபர் 2006 அன்று ஏ.டி.எஸ் அதிகாரிகள் என்னிடம் நான் கையெழுத்திட்ட அந்த காகிதம் என்னுடைய ஒப்புதல் வாக்குமூலம் என்று கூறினர். அவர்கள் கூறும்வரை அது ஒப்புதல் வாக்குமூலம் என்பது எனக்கு தெரியாது.

09 அக்டோபர் 2006 அன்று நான் சிறப்பு நீதிபதி மிருதுளா பட்கர் முன்பாக என்னுடைய ஒப்புதல் வாக்குமூலம் பொய்யானது புனையப்பட்டது என கூறினேன். அன்றைய தினமே நான் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டேன்.

இந்த 75 நாட்கள் காவல்துறையின் காவலில் நான் தற்கொலை செய்து இறந்து போன காவல்துறை உதவி ஆணையாளர் திரு.வினோத் பாட் அவர்கள் சொன்ன வார்த்தைகளை மறக்கவே இல்லை. அவருடைய தற்கொலைக்கு முன்பு விசாரணையின் போது அவர் என்னிடம் எங்களை இந்த மும்பை தொடர்குண்டு வெடிப்பில் பொய்யாக இணைக்க அதிக அளவிலான அழுத்தங்களை மூத்த அதிகாரிகளிடமிருந்து சந்தித்து வருவதாக கூறினார். தான் உயிருடன் உள்ள வரை அப்பாவிகளான எங்களை இந்த வழக்கில் இணைக்காமல் இருக்க தன்னாலான அனைத்து முயற்சிகளையும் செய்வதாகவும் அவர் வாக்களித்தார். துரதிருஷ்டவசமாக அவர் உயர் அதிகாரிகள் கொடுத்த அதிக அழுத்தத்தின் காரணமாக தற்கொலை செய்து கொண்டார்.

இந்த 75 நாட்கள் காவலில் ஏ.டி.எஸ் பின்வரும் சித்ரவதை முறைகளை என் மீது பிரயோகித்தது.

1. மாவு மில்லில் உபயோகப் படுத்தப் படும் பெல்டைக் கொண்டு என்னை அடித்தனர். ஒவ்வொரு முறையும் என்னுடைய உள்ளங்கையிலும் உள்ளங்காலிலும் 200 முறை அடிப்பார்கள். அதனால் என் கைகளும் கால்களும் நீல நிறமாகிவிடும். என் கைகளும் கால்களும் வீங்கி கடுமையாக வலிக்கும். கே.ஈ.எம் KEM மருத்துவமனை யின் மருத்துவ அதிகாரிகள் ஏ.டி.எஸ் அதிகாரிகளுக்கு துணை நின்றனர். என்னை சரியாக ஆய்வு செய்து சிசிக்சை அளிக்கவில்லை. இந்த பெல்ட் சித்ரவதையை ஏ.டி.எஸ் அதிகாரிகள் என்னுடைய உடலின் பல பாகத்திலும் பிரயோகித்தார்கள். என்னுடைய பின் பாகத்திலும் (அமருமிடத்திலும்) அடித்தனர். இதனால் என்னால் உட்கார கூட இயலாமல் போனது.

2. ஏ.டி.எஸ் அதிகாரிகள் என்னை நிர்வாணமாக்கி மின்சார எந்திரம் மூலமாக எனக்கு மின்சார ஷாக் கொடுத்து சித்ரவதை செய்தார்கள். என்னுடைய கால் விரல்கள், என்னுடைய மர்ம உறுப்புகள் போன்றவற்றில் மின்சார வயரை இணைத்து அதன் பின்னர் அடிக்கடி இடைவெளி விட்டு மின்சாரம் பாய்ச்சுவார்கள். போலிஸ் கஸ்டடியில் இருக்கும் போது நான்கு முறை இவ்வாறு சித்ரவதை செய்துள்ளார்கள்.

3. என்னுடைய ஆடைகளை களைந்த பின்னர் நான் தரையில் அமர்த்தப்படுவேன். என்னுடைய கைகள் பின்னால் கட்டப்படும். அதன் பின்னர் என்னுடைய கால்கள் 180 கோணத்தில் விரிக்கப்படும். இவ்வாறு பல முறை செய்யப்பட்டன. ஒரே முறையில் 5 தடவை இவ்வாறு விரிக்கப்பட்டது.

4. ஏ.டி.எஸ் அதிகாரிகள் என்னை ஒரு நாற்காலியில் கட்டினர். அது சுவருக்கு வெகு அருகாமையில் இருந்தது. அவர்கள் என் தலையை எந்த பக்கமும் அசைக்க முடியாத வண்ணம் கட்டினர். பின்னர் அவர்கள் தண்ணீரை எட்டு மணி நேரத்திற்கு என் தலையின் மீது சொட்டு சொட்டாக விழும்படி செய்தனர். இந்த சித்ரவதையின் காரணமாக என் தலையிலும் கழுத்திலும் தாங்க முடியாத வலி ஏற்பட்டது.

5. என்னை தலை கீழாக கட்டி தொங்க விட்டனர். என் கைகளும் கால்களும் கட்டப்பட்டன. பின்னர் என்னுடைய மூக்கில் தண்ணீரை இடைவெளி விட்டு இடைவெளி விட்டு ஊற்றிக்கொண்டே இருந்தனர். இந்த சித்ரவதை 1 மணிநேரமாக நடந்தது. இந்த சித்ரவதை எனக்கு மூன்று முறை கொடுக்கப்பட்டது.

6. நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திடவில்லை என்றால் என்னுடைய குடும்ப உறுப்பினர்களையும் கைது செய்ய போவதாகவும் என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் ஏ.டி.எஸ்-ஆல் கொண்டு வரப்பட்டு என் கண் முன்னால் கொடுமைப் படுத்தப்படுவார்கள் எனவும் பயமுறுத்தப் பட்டேன். என் கண் முன்னால் விஜய் சாலேஸ்கர் அணியினரால் கொடுமை படுத்தப்பட்ட ஃபைசல் ஷேக்கின் குடும்பம் அதற்கு உதாரணமாக காட்டப்பட்டது.

7. மூத்த ஐ.பி.எஸ் அதிகாரிகளான ஏ.என்.ராய், ஏ.டி.எஸ்.இன் தலைவர் ரகுவன்ஷி போன்றோரையும் சேர்த்து பல ஏ.டி.எஸ் அதிகாரிகள் எனக்கு விடுதலைக்கு பின்னர் பெரிய அளவில் பணம் தருவதாகவும் உலகத்தின் எந்த மூலைக்கு விரும்பினாலும் அதற்கு ஏற்பாடு செய்து தருவதாகவும் கூறினர். மேலும் நான் அப்ரூவராக மாறினால் இந்த வழக்கிலிருந்து என்னை விடுவிப்பதாகவும் பல முறை உறுதி கூறினர்.

இஹ்திஷாம் குத்புதீன் சித்தீகி ஆகிய நான் மேலே கூறியுள்ள அனைத்தும் உண்மை எனவும் என் அறிவின் படியும் நம்பிக்கையின் படியும் சரி எனவும் உறுதியளிக்கிறேன்.

**(Source: The Milli Gazette, 1-15 October 2010, pp. 8-9)**

# சிறையிலும் தளராத போர்!

இஹ்திஷாம் அவர்களின் சிறை வாழ்க்கை மற்றவர்களுக்கெல்லாம் ஒரு பாடம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனெனில் சிறையில் இத்தனை சித்ரவதைகளுக்கு பின்னரும் அவர் சோர்ந்து சும்மா இருந்து விடவில்லை. மாறாக என்ன செய்யலாம் இந்த அநியாயங்களுக்கு எதிராக எப்படி போராடலாம் என்று எண்ணியவருக்கு தகவல் அறியும் உரிமை சட்டம் ஒரு வரமாக அமைந்தது.

இஹ்திஷாம் அவருடைய கவனத்தை தகவல் அறியும் உரிமை சட்டம் ஈர்த்தது. அவருக்கு எதிராக காவல்துறையினர் உருவாக்கிய ஆவணங்களுக்கு எதிராகவே அவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தை பிரயோகப்படுத்த முடிவெடுத்தார்.

அவருடைய முதல் தகவல் அறியும் உரிமை சட்ட மனுவில் மாதுங்கா காவல்நிலையத்தில் 6,7 அக்டோபர் 2006 நாட்களின் லாக்அப் குறிப்புகளை (Lockup Diary) கேட்டார். ஆனால் காவல்துறையினரால் அவர் கேட்ட தகவலை அளிக்க இயலவில்லை. அவர் மேல்முறையீடு செய்த பின்னர் தான் காவல்துறை இறங்கி வந்தது. இஹ்திஷாமின் அனைத்து தகவல் கோரிய மனுக்களிலும் இந்த கால தாமதத்தை காண முடிந்தது.

அதன் பின்னர் இஹ்திஷாம் அவர்கள் அபூ உமத் என்ற நபரின் படத்தினை தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்டார். அபூ உமத் காவல்துறையினரால் 22 ஆகஸ்ட் 2006 அன்று நடந்த எதிர் தாக்குதலில் கொல்லப் பட்டார். கிடைத்த தகவல்களின் அடிப் படையில் இந்த எதிர்தாக்குதல் ஒரு போலி நாடகம் என்பதை இஹ்திஷாம் உணர்ந்தார். எனவே இவ்வழக்கில் ஏ.என்.ராய், டி.ஜி.வன்சாரா, துணை ஆணையர் கே.ஆர்.கராலே, நாவல் பஜாஜ், இந்த எதிர்தாக்குதலில் ஈடுபட்ட அனைத்து அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு எதிராக நீதிமன்ற விசாரணையை கோரி பொதுநல வழக்கொன்றை (Public Interest Litigation) தாக்கல் செய்தார்.

ஆனால் உயர்நீதிமன்றம் அவரை முதலில் ஒரு புகாரை காவல்நிலையத்தில் பதிவு செய்யும்படி அறிவுறுத்தியது. அதன்படி அவர் ஆன்டாப் ஹில் (Antop Hill) காவல்நிலையத்தில் முறையாக புகார் ஒன்றை பதிவு செய்தார்.

ஆனால் இரண்டு மாதங்களாகியும் அவருக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை. அதன் பின்னர் அவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் அவருடைய மனுவின் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்ற தகவலை கோரி இருந்தார். இவ்வழக்கு யுனிட் 4 குற்றப்பிரிவினரால் (க்ரைம் பிராஞ்ச்) விசாரிக்கப்பட்டு வருகிறது என்றும் இவ்வழக்கில் எந்த அறிக்கையும் இன்னும் தயாரிக்கப்படவில்லை என்றும் தகவல் பெறப்பட்டது.

இஹ்திஷாம் கோல்ஹாபூரில் உள்ள சி.பி.ஆர் மருத்துவமனை (CPR hospital) மற்றும் கே.ஈ.எம் (KEM hospital) மருத்துவமனை களுக்கு மனுக்கள் அனுப்பி அவர் மீது நடத்தப்பட்ட மருத்துவ சோதனைகள் குறித்த அறிக்கைகளை தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கோரினார். அவரை காலாம்பா (Kalamba) கோல்ஹாப்பூர் மத்திய சிறையில் (Kolhapur Central Prison) அடைத்து வைக்கப் பட்டிருந்த போது அவருடைய கைகளின் எலும்பு முறிந்தது. ஆனால் அவருக்கு சிகிச்சை அளிக்கப்படவில்லை. அவருக்கு வலி நிவாரண மாத்திரைகள் மட்டுமே வழங்கப்பட்டன. பின்னர் நீதிமன்றத்தின் உத்தரவின்படி அவருக்கு

பரிசோதனை செய்யப்பட்டது. இந்த தகவலை பெறுவதின் மூலம் தான் சிறையில் சித்ரவதை செய்யப்பட்டதை உறுதி செய்ய முடியும் என்பதால் 6 அக்டோபர் 2006 அன்று இஹ்திஷாம் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் இந்த தகவல்களை கோரினார். இந்த தகவல்கள் பின்னர் நீதிமன்றத்தின் பார்வையில் அவர் காவல்துறையினரின் விசாரணையின் போது சித்ரவதை செய்யப்பட்டதை உறுதி செய்யும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்டது.

இதன் பின்னர் தான் குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் இல்லை என்பதை உறுதிபடுத்த அவர் உபயோகப்படுத்திய சிம் கார்டு கம்பெனியிடம் சில தகவல்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரினார். அதில் அவர் செய்த அழைப்புகளின் பட்டியல், நேரம், அந்நேரத்தில் செல்போன் இருந்த இடம் போன்றவை அடக்கம்.

22 அக்டோபர் 2006 அன்று அன்டாப் ஹில் காவல்நிலையத்தில் அவருக்கு எதிராக பதியப்பட்ட குற்றப்பத்திரிகையின் நகலை இவ்வழக்கு குறித்து ஆராய்வதற்காக கோரினார். அதன் பின்னர் அதில் காவல்துறையினர் கூறி இருந்த பல முக்கியமான சாட்சிகள் குறித்து குறுக்காய்வு செய்ய பல தகவல் அறியும் உரிமை மனுக்களை அவர் அனுப்பினார்.

## சாட்சி எண் 74 விஷால் பர்மர் (Vishal Parmar)

விஷால் பர்மர் என்பவர் இஹ்திஷாமை சர்ச்கேட் இரயில்வே நிலையத்தில் கையில் ஒரு பேக் (bag) உடன் ஏறியதை பார்த்ததாக கூறினார். பின்னர் இஹ்திஷாம் தாதர் இரயில் நிலையத்தில் இறங்கிவிட்டதாகவும் கூறினார். இதனை மறுத்த இஹ்திஷாம் ஆய்வாளர் தாஜ்னே என்பவர் விஷால் பர்மரிடம் தன்னை காட்டியதன் அடிப்படையிலேயே பின்னர் பர்மர் தன்னை அடையாளம் காட்டியதாக கூறினார்.

இஹ்திஷாம் பின்னர் சர்ச்கேட்டில் உள்ள ஈ.என்.டி மருத்துவமனையில் (ENT hospital) மும்பை தொடர் இரயில் குண்டு வெடிப்புகள் நடந்த 11 ஜூலை 2006 அன்று மதியம் 2 மணி முதல் 6 மணி வரை விஷால் பர்மர் என்ற பெயரில் யாராவது சிகிச்சைக்கு வந்தார்களா என்ற தகவலை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரியிருந்தார். அதற்கு பதிலாக எந்த நோயாளியும் விஷால் பர்மர் என்ற பெயரில் வரவில்லை என்ற தகவலை இஹ்திஷாம் பெற்றார்.

அதன் பின்னர் அவர் பார்வையாளர்கள் பதிவேட்டின் தகவல்களையும் பாபன் ரன்காம்பே (Baban Rankhambe) என்பவரை பற்றிய தகவல்களையும் இஹ்திஷாம் கோரியிருந்தார். ஏனெனில் விஷார் பர்மர் அன்றைய தினம் பாபன் ரன்காம்பேவை பார்க்க சென்றிருந்ததாக கூறியிருந்தார். அதற்கு பதிலாக அந்த பெயரில் எந்த நபரும் மருத்துவமனையில் வேலை செய்யவில்லை என்றும் ஒரு வேளை தனியாரின் மூலம் பராமரிக்கப்படும் பாதுகாவலராக (guard) பி.எம்.சி (BMC) வழியாக நியமிக்கப் பட்டிருக்கலாம் என்ற தகவலும் பெறப்பட்டது.

அதன் பின்னர் இஹ்திஷாம் வருகை பதிவேட்டின் தகவலையும் வருகையாட்கள் பதிவேட்டையும் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கோரினார். அதில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் விஷால் பர்மர் என்ற பெயரிலோ பாபன் ரன்காம்பே என்ற பெயரிலோ யாரும் வரவில்லை என்பதே. இஹ்திஷாம் இரயில்வே துறைக்கும் தகவல் அறியும் உரிமை சட்ட மனுக்களை அனுப்பி அன்றைய தினம் சர்ச்கேட்டிலிருந்து வந்து போன அனைத்து இரயில்களின் நேரங்களையும் கோரியிருந்தார். இதில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் பர்மர் பயணித்ததாக கூறிய நேரத்திற்கும் இரயில்வே தந்த நேரத்திற்கும் முரண் இருப்பதை காட்டியது.

மற்றொரு மனுவை தாதரில் உள்ள பி.எம்.சி வங்கிக்கு (BMC Bank) இஹ்திஷாம் அனுப்பி வைத்தார். ஏனெனில் தாதர் இரயில் நிலையத்தில் இறங்கிய பிறகு பர்மர் இந்த வங்கிக்கு சென்று லலித் வகேலா என்ற நபரை சந்திக்க சென்றதாக கூறியிருந்தார். ஆனால்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி லலித் வகேலா என்பவர் அந்த வங்கியில் பணிபுரிந்தார் என்பதை காட்டியது. ஆனால் இஹ்திஷாம் கோரியிருந்த மற்றொரு மனுவில் லலித் அன்றைய தினம் பணிக்கு வரவில்லை என்ற தகவல் கிடைத்தது.

இஹ்திஷாம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் துணை ஆணையர் பத்டாரே (Phadtare) துணை ஆணையர் கரலே (Karale) ஆகியோரின் கூற்றுக்கு எதிராக நிறுவ சில தகவல்களை கோரியிருந்தார். இதற்கான சில பதில்கள் இன்னும் பெறப்படவில்லை.

இஹ்திஷாம் அதன் பின்னர் இந்தியாவின் வெளியீடு பிரிவிற்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் UP (P) Act 1967 மற்றும் UP (P) Act 2004 நகல்களை கோரி பெற்றார். அதன் பின்னர் மத்திய உள்துறைக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனுக்களை அனுப்பி நீதிபதிகள் கீதா மிட்டல் மற்றும் சஞ்சீவ் கன்னா அவர்கள் வழங்கிய சிமி தடை சம்பந்தமான தீர்ப்புகளின் நகல்களை பெற்றார்.

அவர் சிறையில் இருந்த போதும் சோர்ந்து விடாமல் தகவல் அறியும் உரிமை சட்டத்தினை முறையாக பயன்படுத்தி இந்த தகவல்களை பெற்றார். இவர் திரட்டிய தகவல்கள் மஹாராஷ்டிர காவல்துறையினரும் தீவிரவாத தடுப்பு படையினரும் தீவிரவாதிகள் என அடையாளப்படுத்தி கைது செய்த பலரின் கைதுகளை பற்றிய மிகப்பெரிய சந்தேகங்களை கிளப்பியது.

## சாட்சி எண் 75 அமர் சர்தார் கான்.

இஹ்திஷாம் செம்பூர் காவல்நிலையத்தில் சாட்சி எண். 75 அமர் சர்தார் கான் என்பவரை பற்றி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கோரியிருந்தார். அமர் சர்தார் கான் தன் மீது ஒரேயொரு வழக்கு மட்டுமே செம்பூர் காவல்நிலையத்தில் நிலுவையில் இருப்பதாக கூறி இருந்தார். கிடைத்த தகவலுக்கு பின்னர் அவர் மீது செம்பூர் காவல்நிலையத்தில் 3 வழக்குகள் நிலுவையில் இருந்தது வெளிச்சத்திற்கு வந்தது. இதன் மூலம் இந்த சாட்சியின் நம்பகத்தன்மை கேள்விக்குறியானது. இஹ்திஷாமை குண்டு வெடிப்பதற்கு நான்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக குற்றம் சாட்டப்பட்டிருந்த முஹம்மது அலியின் வீட்டில் வைத்து பார்த்ததாக கான் சாட்சி கூறி இருந்தார். ஆனால் இஹ்திஷாம் ஜூலை 3ம் தேதியில் இருந்து 7ம் தேதி வரை மத்திய பிரதேசத்தில் இருந்ததற்கான ஆதாரங்களை கொடுத்திருந்தார். அதே போல் இஹ்திஷாம் அவர்கள் சிமியின் ஒரு கூட்டத்தில் உரையாற்றியதாக கான் சாட்சியங்கூறி இருந்தார். ஆனால் இஹ்திஷாமோ தான் எப்போதும் சிமியின் உறுப்பினராக இருந்ததில்லை என கூறியிருந்தார்.

## சாட்சி எண் 80 கீர்த்தி புரந்தாரே (KIRTI PURANDARE)

கீர்த்தி புரந்தாரே என்பவர் தான் மாதிரி அடையாள அணிவகுப்பில் (test identification parade) பங்கேற்றதே கிடையாது என கூறியிருந்தார். ஆனால் நாக்பாரா காவல்நிலையத்தின் தெற்கு கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பப்பட்ட தகவல் அறியும் உரிமை மனுவில் கிடைத்த தகவல்கள் கீர்த்தி மாதிரி அடையாள அணிவகுப்பில் (test identification parade) பங்கேற்றார் என்பதை உறுதி செய்தது. அதற்கு பின்னர் அனுப்பிய தகவல் அறியும் உரிமை மனுவிற்கான பதிலில் கீர்த்தி அங்கு இஹ்திஷாமை பார்த்தார் என்பதும் உறுதி செய்யப்பட்டது.

## இஹ்திஷாமின் கல்வியை பெறும் உரிமைக்கான போர்

இஹ்திஷாம் டெல்லியில் உள்ள சென்ட்ரல் கவுன்சில் ஃபார் ரிசர்ச் இன் ஹோமியோபதி (Central Council for Research in Homoeopathy (CCRH))-ஐ தனது படிப்பிற்காக 45 புத்தகங்களை தரும்படி

கேட்டிருந்தார். அவை விலை உயர்ந்த புத்தகங்கள் என்ற காரணத்தை காட்டி சென்ட்ரல் கவுன்சில் ஃபார் ரிசர்ச் இன் ஹோமியோபதி அதனை தர மறுத்து விட்டது. அதன் மென்பொருள் வடிவத்தையாவது (soft copies) தரும்படி இஹ்திஷான் கேட்டதையும் காப்பிரைட் உரிம சட்டத்தினை காரணம் காட்டி தர மறுத்துவிட்டது. அதன் பின்னர் அவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் இதனை வழங்கும்படி கேட்டார். இதற்கு ரூ.50000ஐ கட்டும்படி சென்ட்ரல் கவுன்சில் ஃபார் ரிசர்ச் இன் ஹோமியோபதி கூறியது. தலைமை தகவல் ஆணையர் அவர்களாலும் இவருடைய கோரிக்கை மறுக்கப்பட்ட பின்னர் இஹ்திஷாம் டெல்லி உயர்நீதிமன்றத்தை அணுகினார். அவர் உயர்நீதிமன்றத்திற்கு எழுதிய கடிதத்தில் தான் விசாரணை கைதியாக இருப்பதாகவும் இன்னும் குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்றும் அனைவருக்கும் கல்வி என்ற அரசியல் நிர்ணய சட்ட உரிமையை தனக்கு மறுக்க கூடாதென்றும் கோரினார்.


கல்விப் பொருட்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் "தகவலே" என இஹ்திஷாம் வாதாடினார். தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு 7(5)ன் கீழ் அரசு நிறுவனத்தால் வெளியிடப்படும் விலை உயர்ந்த பதிப்புகள் இலவசமாக ஏழ்மை நிலைக்கு கீழே உள்ளவருக்கு கொடுக்கப்படவேண்டும். இஹ்திஷாம் சிறைச்சாலையில் இருப்பதால் அவருடைய பணத்தை கையாளும் நிலையில் இல்லாததால் அவருக்கு வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர் என்ற சிறப்பு சலுகை கொடுக்கப்பட வேண்டும் என்றும் கோரினார்.

டெல்லி உயர்நீதிமன்றம் அவர் கோரிக்கையை ஒரு ரிட் மனுவாக மாற்றி தகவல் அறியும் உரிமை சட்டம் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பியது. குறிப்பாக கைதிக்கு தகவல்கள் மற்றும் கல்வி பெறுவது பற்றிய உரிமைகள் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

http://gulail.com/how-maharashtra-ats-arrested-tortured-and-framed-ehtesham siddiqui/

http://www.youtube.com/watch?v=dOcE8VwL1B4


இப்போது பரபரப்பான விற்பனையில்
படித்து விட்டீர்களா!




அ. மார்க்ஸ் அவர்களின்
டி.எம். உமர் பாரூக்
ஒரு தலித் போராளியின் வாழ்வும்
அவர் காட்டிய வழியும்

வெளியீடு :
வேர்கள் பதிப்பகம்,
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

விலை :
ரூ. 20.00




# இதர மதத்தினருடன் முஸ்லிம்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

வேதக்காரர்கள் எனப்படும் யூதர்களிடமும், கிறித்தவர்களிடமும் இருக்கின்ற குஃப்ர் எனும் மறுப்பு இணை வைப்பவர்களிடம் இருக்கும் மறுப்பை விட தாழ்ந்தது.

அதாவது இந்த வேதக்காரர்கள் “முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஓர் இறைத்தூர், இறுதித் தூதர். அழியாத வேதம் குர்ஆன். அவர்கள் மீது இறக்கியருளப் பட்டிருக்கிறது (இந்த வேதம் யூதர்களின் வேதமான தவ்ராத் கிறித்தவர்களின் வேதமான இன்ஜீல் ஆகியவற்றை உண்மைப்படுத்து கிறது. அவற்றின் கருத்துக்களை நியாயப் படுத்துகிறது) என்பதை ஏற்க மறுக்கின்றனர்.

இதோ அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள் : (நபியே) உம்மீது நாம் உண்மைகளைத் தாங்கிய வேதத்தை இறக்கி வைத்தோம். அது தனக்கு முன்னிருந்த வேதங்களை உண்மைப் படுத்துகிறது. அவற்றைப் பாதுகாக்கிறது. எனவே அல்லாஹ் இறக்கியருளியவற்றைக் கொண்டே அவர்கள் மத்தியில் தீர்ப்பு வழங்குவீராக. உம்மிடம் வந்துள்ள உண்மைக்குப் புறம்பாக அவர்களின் மனோ இச்சைகளை நீர் பின்பற்றி விட வேண்டாம். (5:48)

இவ்வசனத்தின் அடிப்படையில் சிந்தித்தால் இறைவனைப் பற்றிய வேதக்காரர் களின் புரிதல்களை ஒழுங்குப்படுத்தி சீர்படுத்துவதாகவே இருக்கிறது. முஹம்மது நபி (ஸல்)க்கு அல்லாஹ் வழங்கிய இறுதி வேதம் என்று தெளிவாகத் தெரிகிறது.

இறைவன் எப்படிப்பட்டவன் அவனுடைய பண்புகள் என்ன என்பன பற்றி யெல்லாம் வேதக்காரர்களுக்கு வழங்கப்பட்ட வேதங்களில் கூறப்பட்டிருந்தன. பின்னர் அவற்றில் கலப்படங்கள் புகுந்துவிட்டன. தெளிவான ஏகத்துவம் கலங்கலாகிவிட்டது.

நபிமார்களின் தந்தை எனப்படும் இறைத்தூதர் இபுறாஹீம் (அலை) அவர்கள் போதித்த தூய ஏகத்துவம் களங்கப்படுத்தப் பட்டுவிட்டது.

தணித்துவம் மிக்கவனும் ஏகனுமான அல்லாஹ்வை ஏதேனுமொன்றோடு ஒப்பிட்டுக் காட்டுவதும் அவனுக்கு உருவம் கற்பிப்பதுமான விஷயங்களை தவ்ராத் எனும் இறை வேதத்திலேயே அவர்கள் திணித்தனர்.

அப்படித் திணிக்கப்பட்ட இடைச் செருகல்களையெல்லாம் வாசிப்பவர்களுக்கு என்ன தோன்றும் என்றால் இறைவனும் மனிதர்களைப் போன்றவன்தான். அவர் களைப் போல இறைவனும் கோபம், பொறாமை, ரோஷம் ஆகிய குணங்களைப் கொண்டவன் தான் என்றே தோன்றும்.

மேலும், அல்லாஹ் மனிதனுடன் சண்டையிடுவான். அதில் ஜெயிப்பான் என்றெல்லாம் எண்ணிடத் தோன்றும் சுருங்கச் சொன்னால் இறைவனும் ஓர் இஸ்ரவேலன்தான் என்று நினைத்திடும் அளவுக்கு இறைவனை மனிதமயப் படுத்தியிருந்தன. அவர்கள் ஏற்படுத்தியிருந்த இடைச் செருகல்கள்.

இதையெல்லாம் களைந்து இறைக் கோட்பாட்டை சீர்திருத்த வந்த வேதம் தான் நபி(ஸல்) அவர்கள் கொண்டு வந்த திருக்குர்ஆன்.

யூதர்கள் இறைவனை மனிதமயப்படுத்தி விட்டார்கள் என்றால் கிறிஸ்தவர்கள் “திரித்துவம்” முக்கடவுள் கோட்பாட்டைப் புகுத்திவிட்டனர்.

ரோமாபுரிச் சக்கரவர்த்தி கான்ஸ்டான்டைன் என்பவர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பின்னர் ரோம் நாட்டில் அப்போது இருந்து வந்த சிலை வணக்கக் கோட்பாடு கிறிஸ்தவத்தில் புகுந்துவிட்டது. இதனால் அரசு அதிகாரத்தைப் பெற்றது கிறிஸ்தவம். கொள்கையளவில் வீழ்ச்சியுற்றது.

இதை அறிஞர்கள் அழகுபட இப்படிச் சொல்வர் : “ரோம் கிறிஸ்தவத்தை ஏற்கவில்லை கிறிஸ்தவம் தான் ரோமானிய மயமாகி விட்டது”

ஆக, யூதர்களும் கிறிஸ்தவர்களும் இஸ்லாத்தின் இறுதித் தூதையும் இறுதித் தூதரையும் ஏற்க மறுப்பதால் அவர்கள் ‘காஃபிர்’ மறுப்பாளர்கள் என்று கருதப்பட்டாலும் அவர்கள் வேதக்காரர்கள் என்பதால் அவர்களுக்கு தனி இடம் உண்டு.

ஆம் அவர்கள் இறைவன் என்று ஒருவன் இருப்பதை நம்புகின்றனர். இறைவனின் தூதை நம்புகின்றனர். மரணத்துக்குப் பின்னர் வரும் மறுமை வாழ்வில் இம்மைக்கான கூலி கிடைக்கும் என்பதையும் நம்புகின்றனர். எனவே அவர்கள் இதர மதத்தவர்களை விட முஸ்லிம்களுக்கு நெருக்கமானவர்களாகின்றனர். எனவே தான் அவர்களின் (மாமிச) உணவை உண்பதையும் அவர்களுடனான திருமண உறவையும் இஸ்லாம் அனுமதிக்கிறது.

அல்லாஹ் கூறுகிறான் : வேதக்காரர் களின் உணவு உங்களுக்கும் உங்களின் உணவு அவர்களுக்கும் உண்பதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளது. இறை நம்பிக்கையுள்ள கற்புள்ள பெண்களும் வேதக்கார கற்புள்ள பெண்களும் விலைமாதராகவோ, ஆசை நாயகிகளாகவோ அன்றி அவர்களுக்குரிய திருமணப் பணம் (மஹர்) தந்து மணமுடித்துக் கொள்வது உங்களுக்கு அனுமதிக்கப் பட்டுள்ளது. (5:5)

இங்கே மற்றொன்றையும் கூறிட விரும்புகிறேன். இந்தச் சட்டம் நபி (ஸல்) காலத்தில் வாழ்ந்த யூதர்களையும் கிறிஸ்தவர் களையுமே குறிப்பிடுகிறது. இப்போதுள்ள கிறிஸ்தவர்கள், யூதர்கள் ஆகியோருடைய உணவை உண்பதோ அவர்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்வதோ கூடாது என்று சிலர் கூறுவது தவறு. இது சரியல்ல.

ஏனெனில் “அல்லாஹ்வும் ஈஸாவும் ஒன்றே”, “அல்லாஹ் முக்கடவுள்களில் ஒருவன்” என்றெல்லாம் கிறிஸ்தவர்கள் கூறி வந்ததாக இதே ஐந்தாவது அத்தியாயத்தில் அல்லாஹ் கூறியுள்ளான். இதே அத்தியாயத்தில் தான் அவர்களின் பெண்களை மணமுடித்திடவும் அவர்களின் உணவை உண்ணவும் அனுமதித்துள்ளான். (காண்க வசனங்கள் 5:5, 5:72, 5:73)

அது மாத்திரமன்று கி.பி. 325ல் தான் கிறிஸ்தவத்தில் Puritanism எனும் தூய கடவுள் கோட்பாடு உருவானது.

(இப்படி கிறிஸ்தவத்தை தூய்மைப் படுத்த வந்தவர்கள் அனைவரும் ஒருவர் விடாமல் கிறிஸ்தவர்களாலேயே அழிக்கப் பட்டனர் - மொழி பெயர்ப்பாளர்)

அது மாத்திரமன்று அக்கினி ஆராதனைக்காரர்களான பாரசீகர்களுக்கும்

கிறிஸ்தவர்களான பைசாந்தியப் பேரரசின் ரோமர்களுக்கும் இடையே ஏற்பட்ட பெரும் போரில் கிறிஸ்தவர்களான ரோமர்கள் தோற்றுப் போயினர்.

இதற்காக முஸ்லிம்கள் வருந்தினர், கவலைப்பட்டனர். ஏனென்றால் வேதக்காரர்கள், குறிப்பாக கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களுடன் நெருங்கியவர்கள்.

நெருப்பு வணங்கிகளான பாரசீகர்கள் பெற்ற வெற்றி மக்காவில் வாழ்ந்து கொண்டிருந்த சிலை வணங்கிகளுக்கு மகிழ்ச்சியளித்தது. காரணம் இருவருமே இணைவைப்பவர்கள்.

எந்த அளவுக்கு முஸ்லிம்கள் கவலைப் பட்டார்கள் என்றால் "வெகுவிரைவில் ரோமர்கள் பாரசீகர்களை வீழ்த்தி வெற்றி பெறுவார்கள்" என்று முஸ்லிம்களுக்கு நற்செய்தி கூறும் குர்ஆன் வசனமே இறங்கிற்று.

அல்லாஹ் கூறுகிறான் : அலிஃப்-லாம்-மீம். அண்மையிலுள்ள ரோம் தோற்றுவிட்டது. தோல்விக்குப்பின் சில ஆண்டுகளில் மீண்டும் அவர்கள் வெல்வார்கள். முன்னரும் பின்னரும் அல்லாஹ்வுக்கே அதிகாரம். அந்நாளில் நம்பிக்கையாளர் மகிழ்ச்சி அடைவார்கள். (30:1-5)

இவையெல்லாம் நமக்கு எதைக்காட்டுகின்றன என்றால் (வேதக்காரர்கள் கடவுள் மறுப்பாளர்கள் சிலை வணங்கிகள் உள்ளிட்ட) முஸ்லிம் அல்லாதவர்களில் யாரோடு நாம் எப்படிப்பட்ட உறவைக் கடைப்பிடிக்க வேண்டும்? நல்லுறவு பேணுவதில் யாருக்கு முன்னுரிமை தரவேண்டும்? என்பதையே காட்டுகிறது.

முஸ்லிமல்லாதவர்களுடனான உறவில் நாம் சீர்தூக்கிப்பார்க்க வேண்டிய முக்கிய விதியை இவ்வசனம் நம் கண்முன்னே காட்டிவிட்டது.

இருப்பினும் இந்த வேதக்காரர்கள் முஸ்லிம்களைப் பகைத்துக் கொண்டாலோ முஸ்லிம்களுக்கு எதிராக சதிகளைச் செய்தாலோ அப்போதும் அவர்களோடு முஸ்லிம்கள் நல்லுறவைப் பேண வேண்டும் என்று கூற முடியாது.

உதாரணமாக செர்பியாவில் முஸ்லிம்களைக் கொன்றொழிக்கும் கிறிஸ்தவர்கள் அல் அக்ஸாவை ஆக்கிரமிக்கத் துடிக்கும் யூதர்கள் ஆகியோருடன் நல்லுறவைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை.

அவர்கள் முஸ்லிம்களிடம் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை வைத்தே முஸ்லிம்கள் அவர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்க முடியும்.

காஃபிர் எனும் இறை மறுப்பாளர்களில் முஸ்லிம்களுடன் நல்லுறவைப் பேணக்கூடியவர்களும் உள்ளனர். நாமும் அவர்களுடன் நல்லுறவைப் பேண வேண்டும்.

அவர்களுடன் சிலர் நம்முடன் சண்டைக்கு வருகின்றனர். நம்மோடு பகையை வளர்க்கின்றனர். இப்படிப்பட்டவர்களுடன் நாம் நல்லுறவு பாராட்ட முடியாது. நாமும் சண்டையிடுவோம். அவர்களைத் திருப்பி அடிப்போம்.

சிலர் இறைவனை மறுக்கின்றனர் அவ்வளவே.

சிலர் இறைவனை மறுப்பதோடு மற்றவர்களுக்கு அநீதியும் இழைக்கின்றனர்.

சிலர் இறைவனை மறுத்துக் கொண்டிருப்பதோடு பிற மக்களையும் இறைவனின் பாதையில் செல்லவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கின்றனர்.


ஒவ்வொருவரிடமும் அவரவரின் செயல்களுக்கு ஏற்ப நாம் நடந்து கொள்ள வேண்டும். இதோ அல்லாஹ் கூறுகிறான்,

"மார்க்க விஷயத்தில் உங்களுடன் சண்டையிடாமலும் உங்களை உங்கள் இல்லங்களிலிருந்து (நாடுகளிலிருந்து) வெளியேற்றாமலும் இருக்கின்றவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும் நீதி செலுத்துவதையும் உங்களுக்கு அல்லாஹ் தடை செய்யவில்லை. நிச்சயமாக நீதி செலுத்துபவர்களை அல்லாஹ் விரும்புகிறான்."

**தொடர்ச்சி 66ம் பக்கம்**

தொடர். . .

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



# அஞ்ஞான ஐரோப்பாவின் எழுச்சியும் அதன் அறிவுப் புரட்சியும்

**- அபுல் ஹசன் அலீ நத்வீ**

**மொழிபெயர்ப்பு:**

**அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

கி.பி. பதினாறாம் நூற்றாண்டும் பதினேழாம் நூற்றாண்டும் அதற்குப் பின்னும் மனித குல வரலாற்றில் மிக முக்கியக் காலக் கட்டங்கள்.

ஐரோப்பா தனது நெடுந்துயிலிலிருந்து விழித்தது. அறியாமை, மெத்தனம் ஆகியவற்றி லிருந்து மீண்டு அறிவை நோக்கிப் பாய்ந்தது. தன் இறக்கை முழுவதையும் விரித்துப் பறந்தது. பௌதீக கல்வியின் வலிமையைத் தன் வசப்படுத்திக் கொண்டது.

அகிலத்தின் ரகசியங்களையெல்லாம் வெளிக் கொண்டு வந்தது.

அகிலத்தின் இரகசியங்களை எல்லாம் வெளிப்படுத்த துவங்கியது. ஆழ்கடல் ஆராய்ச்சி, அறியப்படாமல் இருந்த கண்டங்களைக் கண்டுபிடித்தல் என்ற அதன் பயணம் தொய்வின்றித் தொடர்ந்தது.

அறிவியலிலும், கலைகளிலும், புது புது யுகங்களை உருவாக்கியது. வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அதன் முன்னேற்றத்தைச் சொல்லிமாளாது. இக்குறுகிய காலத்தில், அறிவியல் விஞ்ஞானிகள் துறையில் பிரசித்தி பெற்ற மேதாவிகள் தோன்றினர். கோபர்நிகஸ் (Copernicus), புருனோ (Brunoe), கலிலிய்யோ (Galileo), கெப்ளர் (Kepler), நியூட்டன் (Newton) போன்றோர் பழைய சித்தாந்தத்தையே மாற்றி புதுச் சித்தாந்தத்தை உருவாக்கினர்.

அறிவியலிலே, விஞ்ஞானத்திலே புதுப் புது உலகங்களைக் கண்டுபிடித்தனர். புதுப்புது உலகங்களைக் கண்டுபிடித்து ஊருக்கு அறிவித்த பிரயாணிகளாக கொலம்பஸ் (Columbus) வாஸ்கோடகாமா (Vasco degama) மக்லின் (Maglin) தோன்றி னார்கள். இக்காலக்கட்டத்தில் வாழ்ந்த அந்த ஐரோப்பியா சமூகம், புதிய வார்ப்பிலும் உருவத்திலும் வார்த்தெடுக்கப் படவில்லை. சில சமூகங்கள் மறைந்து சில சமூகங்கள் தோன்றும் நிலையில் இவர்களோ நம்பிக்கை நட்சத்திரமாக சரித்திரத்தில் தடம் பதித்த சமூகமாக மாறியது. இக்காலத்தில் ஒரு மணி நேரம் கழிந்தது மற்றகாலத்தில் பல நாட்களுக்குச் சமமாக இருந்தது. இக்காலத் தின் ஒரு நாள் மற்ற காலத்தின் ஒரு வருஷத்திற்கு

சமமாக இருந்தது. ஒரு மணி நேரத்தை இக்காலகட்டத்தில் வீணாக்குவது மற்ற காலத்தில் ஒரு யுகத்தையே வீணாக்குவது போல் இருந்தது.

## வாழ்க்கை வசதிகளை அமைப்பதில் முஸ்லிம்களின் பிற்போக்கு

ஆனால் முஸ்லிம்களோ, சில மணிகளையோ, சில நாட்களையோ வீணாக்கவில்லை. மாறாக பல நூற்றாண்டு களை, பல யுகங்களை வீணடித்தனர். அதிலே ஐரோப்பியர்கள் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் விநாடிகளையும் பயன் படுத்தினர்.

வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தங்கள் பயணத்தை அசுரவேகத்தில் துவக்கி பீடுநடை போட்டனர். ஒருசில ஆண்டுகளில் பல நூற்றாண்டு பயணத்தை கடந்தனர். தொழில் துறையிலும், விஞ்ஞானத்துறை யிலும் துருக்கியர்களின் சுறுசுறுப்பற்ற மந்த நிலையை அறிவிக்கும் செய்தியாகச் சொல்லப் படுகிறது. கப்பல் கட்டும் தொழில் நுட்பம் துருக்கிக்கு 16 ஆம் நூற்றாண்டில்தான் வந்தது என்றும், 18 ஆம் நூற்றாண்டில் தான் துருக்கிய தலைநகருக்கு அச்சுத் தொழில் நுட்பம் வந்ததாகச் சொல்லப்படுகிறது.

காலரா தடுப்பு மையங்கள் உருவாக்கப் பட்டன. ஐரோப்பா மாடலில் இராணுவப் பள்ளிகள் இப்பொழுது துவங்கப்பட்டன. ஐரோப்பாவின் கண்டுபிடிப்புகளுக்கும், தொழில் புரட்சிக்கும் இந்த நூற்றாண்டின் கடைசிவரை சம்பந்தம் படாமலேயே இருந்து வந்தது துருக்கி.

தலைநகரில் ஒரு பெரிய பலூன் வட்ட மிடுவதைக் கண்டவுடன், அவர்கள் இதனை சூனியத்தின் செயல் என்று கூறி திருப்தி அடைந்ததே, இவர்களின் அறியாமைக்கு பெரும் எடுத்துக் காட்டாகும்.

நாகரீகம், விஞ்ஞான வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் ஐரோப்பாவின் சில நாடுகள் கூட துருக்கியர்களை விஞ்சி விட்டனர். ஏன் இரயில்களின் பயன்பாடு தண்டவாளங்கள் அமைத்தல் போன்ற நவீனங்கள், துருக்கிக்கு நான்கு வருடங்களுக்கு முன்னரே, எகிப்துக்கு வந்துவிட்டது. தபால் துறை கூட சில மாதங்களுக்கு முன்னால் எகிப்துக்கு வந்துவிட்டது.

## போர்க்கலையில் முஸ்லிம்களின் பின்னடைவு

முஸ்லிம்களுக்கு பௌதீகக்கலை, தத்துவக்கலை, நாகரீகம் பண்பாட்டில் மாத்தில் வீழ்ச்சி ஏற்படவில்லை. இந்த வீழ்ச்சி, எல்லாத்துறைகளிலும் நீக்கமற நிலைத்திருந்தது. ஆனால் போர்க்கலையில் துருக்கி ஐரோப்பாவை விட முன்னேறி இருந்த காலக்கட்டம் ஒன்று இருந்தது. அவர்களின் சிறப்பினையும், வீரத்தையும் உலகமே வியந்து போற்றியது. இருந்தாலும் ஐரோப்பா தனது புதுப்புது கண்டுபிடிப்புகளாலும், புதினம் படைக்கும் அற்புதத் திறனாலும், வடி வமைக்கும் அற்புத ஆற்றலாலும் ஐரோப்பியர் கள் துருக்கியர்களை விட முன்னேறிச் சென்றனர். இறுதியில் கி.பி.1224 ஆம் ஆண்டு துருக்கியப் படையை ஐரோப்பியப்படை மிகவும் மோசமாகத் தோற்கடித்தது. அப்பொழுதுதான் போர்க்கலையில் ஐரோப்பியர்கள் பெற்ற திறன் நன்கு வெளி யானது.

இப்பொழுதுதான் உதுமானிய சாம்ராஜ்ஜியம் ஓரளவு விழித்தது. இராணுவத்தை நவீனப்படுத்தவும், சீரமைக்க வும், போர்க்கலையில் தேர்ச்சி பெறவும் ஐரோப்பியர்களை, துருக்கி அரசாங்கம் வரவழைத்தது. சுல்தான் மூன்றாவது ஸலீம் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் துருக்கி இராணுவத்தை சீர்திருத்தம் செய்தார். சுல்தான் ஸலீம் அற்புத ஆற்றல் பெற்றவராய் இருந்தார். அவருக்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்களுக்கு மாற்றமாக வெளிநாடு சென்று கல்வி பயின்றார். புதுப்புது கல்வி நிலையங்களை உருவாக்கினார். என்ஜினி யரிங் கல்லூரி களுக்கு சென்று தாமே பாடம் நடத்தினார். நவீன போர்களுக்கேற்றவாறு புது

இராணுவத்தை அமைத்தார். அரசியல் அமைப்பில் சில சீர்திருத்தங்களையும், ஒழுங்கு முறைகளையும் ஏற்படுத்தினார்.

ஆனால் அப்போதிருந்த மக்களோ, பிற்போக்கு வாதிகளாகவும், பழையவற்றைப் பின்பற்றுவதில் முரண்டு பிடிப்பவர்களாகவே இருந்தனர். இறுதியாக, இராணுவத்தில் பிற்போக்குவாதிகளால் புரட்சி ஏற்பட்டது. சுல்தான் ஸலீம் கைது செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு இரண்டாம் முஹ்மது 1808 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தனர். அவர் ஆட்சி 1839 ஆண்ட வரை நீடித்தது. அதற்குப் பிறகு முதலாம் அப்துல் மஜிது 1839 முதல் 1851 வரை ஆட்சியில் இருந்தார். பின்னால் வந்த இருவரும் சுல்தான் ஸலீம் விட்டுச் சென்ற சில பொறுப்புகளைச் செய்தனர். அதனால் துருக்கி சில முன்னேற்றம் கண்டது. 18,19 ஆம் நூற்றாண்டுகளில் முன்னேற்ற வளர்ச்சி பாதையில் துருக்கி அரசாங்கம் கடந்து வந்த பாதையையும் அதைவிட அபார வளர்ச்சி முன்னேற்றங்களில் ஐரோப்பா கடந்து வந்த பாதையையும் ஒப்பிட்டு பார்ப்போமே யானால், பயங்கர வித்தியாசத்தைக் காண முடியும். இருவரின் ஓட்டத்தையும் பஞ்ச தந்திரக் கதைகளில் வரும் ஆமைக்கும், முயலுக்கும் நடந்த ஓட்டப் பந்தயத்தைக் கொண்டு ஒப்பிடலாம். இருந்தாலும், ஆமைக்கு தூக்கம் மிகைத்து, மயக்கத்தில் கிடந்தது. முயலோ விழித்திருந்து தன் காரியத்திலே கண்ணாக இருந்தது.

**தொடரும். . .**

---

**63ம் பக்கத்தின் தொடர்ச்சி**

“மார்க்க விஷயத்தில் உங்களுடன் சண்டையிட்டு உங்களை உங்கள் இல்லங்களிலிருந்து (நாடுகளிலிருந்து) வெளியேற்றி உங்களை வெளியேற்றுவதற்கு பெரும் முனைப்புக்காட்டுபவர்களை நீங்கள் நேசர்களாக்குவதை அல்லாஹ் உங்களுக்குத் தடை செய்துள்ளான். யார் அவர்களை நேசனாக்கிக் கொண்டார்களோஅவர்களே அநியாயக்காரர்கள்” (60:8,9)

“திம்மீ” எனப்படும் (இஸ்லாமிய நாட்டில் வாழும்) இதர மதத்தினர் இஸ்லாமிய நாட்டின் குடிமக்களாகவே கருதப்படுவர். அது அவர்களின் நாடு என்ற அடிப்படையில் முஸ்லிம்களுக்குரிய எல்லா உரிமைகளும் இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் இதர மதத்தினருக்கும் உண்டு.

மத வேறுபாட்டின் அடிப்படையில் வரும் சிறு சிறு வித்தியாசங்கள் தவிர,

எனவே அவர்களின் மதச் செயல்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தக் கட்டளையும் அவர்கள் மீது திணிக்கப்படாது. இஸ்லாத்துக்கு எதிரான செயல்களை செய்ய வற்புறுத்தும் கட்டளை கள் முஸ்லிம்கள் மீது திணிக்கப்படாது என்பதைப் போல, இதுவே முஸ்லிம் அல்லாத இதர சமுதாயத்தினருடன் முஸ்லிம்கள் எப்படி நடந்திட வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதல்.

**தொடரும். . .**

**தமிழ் வடிவம் – இல்யாஸ் ரியாஜி**

---

**தவிர்க்க இயலாத காரணத்தால் தொடர்கள் பல இந்த இதழில் இடம் பெறவில்லை. இன்ஷா அல்லாஹ் அவை அடுத்த இதழ் முதல் இடம் பெறும்.**

Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.